கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(17.05.2015 - 17 வைகாசி 2015 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 05, கதிர் - 112 16 பக்கங்கள் ரூபா: 25.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD / 37 / NEWS / 2014

# ஞான ஒளி

ඥාන ඔළි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி - 05



இயேசுவின் விண்ணேற்பு - 17



தூய ஆவியின் பெருவிழா -24



மூவொரு கடவுள் 31

தந்தை, மகன் தூய ஆவிக்கு மகிமை உண்டாவதாக

# 49வது உலக தொடர்பாடல் தினம் 2015

## வாழ்த்துகிறோம்



புனித டிலாசால் சபையின் புதிய மாகாணத் முதல்வர் அருட்சகோதரர் அட்றியன் கிறிஸ்ரி தேவநாயகம் குரூஸ் அவர்களை வாழ்த்தி வரவேற்கின்றோம்.

இவரின் பணிவாழ்வு மேலும் சிறப்புற்று, மக்களின் பணியாக மாற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

## கடவுளை சந்திக்க ஏதுவான இடம் குடும்பமே



“இவ்வருடத்திற்கான தொடர்பாடல் தினம் இம்மாதம் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படுகின்றது. இத்தொடர்பாடல் தினத்தின் தொனிப்பொருள் “குடும்பத்தோடு தொடர்பாடல்” உலகத்தோடு தொடர்புகொள்ள முக்கியமானதாக இருப்பது உலக தொடர்பு சாதனங்கள் ஆகும். இதன் மூலம் ஒரு மனிதனுடைய வாழ்வின் எல்லா பக்கங்களையும் திருச்சபையின் எல்லா தொடர்பாடல்களையும் செய்தியாக இன்றைய தேவைக்கேற்ப வெளிப்படுத்த வேண்டிய அழைப்பு எம் ஒவ்வொருவருக்கும் உண்டு” - திருத்தந்தை

## கொழும்பு உயர் மறைமாவட்ட புனித அலோசியஸ் சிறிய குருமடத்திற்கான விண்ணப்பப்படிவம்

கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் இறைவனுக்காக தன்னை அர்ப்பணித்து சேவை ஆற்ற சுதேச குருக்களாக இணைய விரும்புகின்றீர்களா? அதற்கு ஆயத்தமாக பொரளை புனித அலோசியஸ் சிறிய குருமடத்தில் இணைந்து கொண்டு படிப்பைத் தொடர உங்களை அழைக்கின்றோம்.

9ஆம் தரம் கல்வி பயிலும் மாணவர்கள் ஆடி மாதம் 30 திகதிக்கு முன் உங்கள் பங்கு தந்தையினூடாக விண்ணப்பங்களை நிரப்பி அனுப்பவும். இம்மாதம் 18ஆம் திகதி முதல் உங்களுடைய பங்குத் தளங்களுக்கு விண்ணப்பப்படிவங்கள் அனுப்பி -வைக்கப்பட்டுள்ளது.

தகவல்
இயக்குனர் அருட்தந்தை
புனித அலோசியஸ் சிறிய குருமடம், பொரளை.

## கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறைகள் பற்றிய அறிக்கை

இலங்கைக் கத்தோலிக்க ஆயர்களின் பேரவையானது உலகின் சில பகுதிகளில் பெரும் எண்ணிக்கையிலான கிறிஸ்தவர்கள் கொடூரமாகப் படுகொலை செய்யப்படுவதையிட்டு ஆழமான கரிசனை கொண்டுள்ளது. இவர்கள் தங்களது செபம் மற்றும் வழிபாடுகளின் போது எவ்வாறு மிருகத்தனமாக கொல்லப்பட்டுள்ளார்கள் என்பதை மிகுந்த வருத்தத்தோடு அவதானித்திருக்கின்றோம். பல குழந்தைகள் மற்றும் மனித சமுதாயத்தின் அப்பாவிகள் இப்படிப்பட்ட சொல்ல முடியாத மிருகத்தனமான வன்செயல்களுக்கு பலியாகி வருவதை கேள்வியுற்று அதிர்ச்சி அடைகின்றோம். அந்த வகையில் ஒருவர் தனது சமய மார்க்கத்தை பின்பற்றும் நிக முக்கிய அடிப்படை உரிமையானது மனிதாபிமானத்திற்கு முரணான செயற்பாடுகளால் மீறப்படுவதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். உயிர் என்பது மனிதனுக்கு அளிக்கப்பட்ட இறைவனது அதி உன்னத கொடை, எனவே ஒவ்வொருவருக்கும் தனது தெரிவிற்கு ஏற்றாற் போல சமயத்தை பின்பற்றும் சுதந்திரம் உண்டு. அத்தகைய வகையில் ஒருவரது சமய மார்க்கம் மட்டும் அவரது மரணத்திற்கு காரணமாக அமைந்துவிட முடியாது, ஏனென்றால் எவருமே கடவுளின் பெயரினால் கொலை செய்ய முடியாது.

✠ அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித்
தலைவர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை
கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர்

✠ மேதகு கலாநிதி வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை
பொது செயலாளர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை
சிலாப மறைமாவட்ட ஆயர்

தொடர்ச்சி 14ம் பக்கம்

## வெளிவந்து விட்டது! கத்தோலிக்க மறையாசிரியர் சான்றிதழ் தேர்வு 2015க்கான பாடநூல்

கத்தோலிக்க மறைப்பாடசாலைகளில் பணியாற்றும் மறையாசிரியர்களுக்காக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் இவ்வாண்டு புரட்டாதி மாதத்திலிருந்து தொடர்ந்து வருடாவருடம் “கத்தோலிக்க மறையாசிரியர் சான்றிதழ் தேர்வு” என்ற பெயரில் ஒரு பரீட்சை நடாத்தப்பட இருப்பதைப் பற்றி நீங்கள் அறிவீர்கள். இத்தேர்வு பற்றிய விபரங்கள் ஏற்கனவே அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. இதற்கான விண்ணப்பங்கள் பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்பட உள்ளது. ஐந்து வினாத் தாள்களைக் கொண்டுள்ள இப்பரீட்சையில் ஒவ்வொரு வினாத்தாள்களுக்கும் 3 மணித்தியாலம் அளிக்கப்படும். இவ் ஐந்து வினாத்தாள்களுக்குமான தலைப்புகள்

1. திருவிவிலியம்
2. திருவழிபாடும் அருளடையாளங்களும்

» தொடர்ச்சி 15ம் பக்கம் »

## நேபாளத்தைக் கட்டியெழுப்ப நாமும் உதவி கரம் நீட்டுவோம்

கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை அவர்கள் அண்மையில் விடுத்த வேண்டுகோளுக்கேற்ப கொழும்பு உயர் மறைமாவட்டம் “கிறிஸ்தவ அன்பு” என்ற அடிப்படையில் நேபாளத்தில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களின் துயர் துடைக்கவும், அண்மையில் ஏற்பட்ட நில அதிர்வினால் துன்பப்படுகின்ற மக்களுக்கு உதவும் முகமாக அனைத்து பங்கு தந்தையர்களும் செத்சரண காரியாலயத்தில் நிதியுதவிகளைக் கொடுத்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன். மேலும் இவ்வாறு சேகரிக்கப்படும் பணம் நேபாளத்திலுள்ள அப்போஸ்தலிக்க பிரதி நிதியிடம் ஒப்படைக்கப்படும்.



### Seth Sarana Bank Account details

Bank Name:Commercial Bank of Ceylon PLC
Account Name: Seth Sarana Caritas Colombo
Account Number:1190030954
Branch: Borella
Address:92, D.S.Senanayake Mawatha, Borella, Colombo 8.
SWIFT CODE: CCEYLKLX

Bank Name:Hatton National Bank PLC
Account Name:Seth Sarana 1 Caritas Colombo
Account Number: 108010103565
Branch: Maradana
Address: 696, Maradana Road, Colombo 10
SWIFT CODE: HBLIKLX

## குறும் பயிற்சி

ஆசிய ஆன்மீகப் பயிற்சி நிறுவனமானது (ISFA) கிறிஸ்தவ அர்ப்பணம் - தூய வாழ்வுக்கு அழைப்பு” என்ற கருப்பொருளில் தொடர்ச்சியான குறும் பயிற்சி ஒன்றை இம்மாதம் 23ஆம் திகதி ஆரம்பிக்கின்றது. குருக்கள், துறவிகள், மறையாசிரியர்கள், பொதுநிலையினர் அனைவரும் கலந்து பயிற்சி பெறலாம். இவ்வகுப்பு ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 9.00 மணி தொடக்கம் 11.30 மணிவரை நடைபெறுகிறது. பயிற்சிக் கட்டணம் 500/=

மேலதிக விபரங்களுக்கு

அருட்சகோதரர் R. யோசப் ஜெயகாந்தன்
0777590391

“இதோ உலகம் முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்.”

## இரத்தினபுரி மறைமாவட்ட பேராலய வரலாற்றில் முதல் முதலாக பெயர் பதித்துக் கொண்ட அதிர்ஷ்ட இரத்தினம்



### – அருட்பணி. மரிய ஜோய் அடிகளார் –

சப்ரகமுவ மகாணத்துக்குச் சொந்தமான இரத்தினபுரி மறைமாவட்டத்தின் எட்டியாந்தோட்டை பங்கு புனித மரியாள் தேவாலயத்துக்குச் சொந்தமான திரு. எஸ்.பி. அந்தோனிமுத்து அவர்கட்கும், திருமதி திரேசா மேரி அந்தோனிமுத்து அவர்கட்கும் இரண்டாவது குழுந்தைச் செல்வமான திருத்தொண்டர் அன்றீஷன் மரிய ஜோய் 1985ம் ஆண்டு மார்கழித்திங்கள் 27ந் திகதி இவ்வுலகில் உதயமானார்.

குழந்தையான மரிய ஜோய் தமது ஆரம்பக் கல்வியை கந்தானை புனித செபஸ்தியார் பாலர் பாடசாலையிலும், பின்னர் வத்தளை றோமன் கத்தோலிக்க பாடசாலையிலும், இடைநிலைக்கல்வியை எட்டியாந்தோட்டை புனித மரியாள் தமிழ் மகா வித்தியாலயத்திலும், தமது உயர்கல்வியை தெஹியோவிற்ற தமிழ் மகா வித்தியாலயத்திலும் கற்றுக்கொண்டார். இறைவன் தமது பணிபுரிய தம்மை அழைக்கின்றார் என்பதை உணர்ந்து, அந்த அழைப்புக்கு தலைவணங்கி 2006ம் ஆண்டு தை மாதம் 7ந் திகதி அப்போதைய பங்குத் தந்தை அருட்பணி. பியால் பெர்னாண்டோ அடிகளாரின் வழிகாட்டலில் கேகாலை அமல மரியின் சிறிய குருமடத்தில் கால்பதித்தார். அப்போதைய குருமட அதிபர் சிதத் விலேகொட அடிகளாரின் கண்காணிப்பிலே தமது புதிய வாழ்க்கைப் பாதையை ஆரம்பித்தவர் அங்கு பெறவேண்டிய பயிற்சிகளையும், தேர்ச்சிகளையும் பெற்றுக்கொண்டார்.

அதன் பின்னர் 2008ம் ஆண்டு புரட்டாதி 19ந் திகதி கண்டி தேசிய குருமடத்தில் இணைந்துக்கொண்டவர்

(தொடர்ச்சி 14ம் பக்கம்)

தகவல் : மேரி இருதயநாதன், மறையாசிரியர், பேராலயம், இரத்தினபுரி

## இலங்கை டிலாசால் துறவறசபையின் தலைமை பீடத்திற்கு மன்னாரின் மைந்தன் அருட்சகோதரர் அட்றியன் கிறிஸ்ரி தேவநாயகம் குருஸ்

– அருட்சகோதரர். R. யோசப் ஜெயகாந்தன் –



**தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார் தோன்றலில் தோன்றாமை நன்று**

என்னும் தெய்வப்புலவனர் திருவள்ளுவ நாயனாரின் பொய்யா மொழிக்கு ஏற்ப மங்கா புகழ் பொலிந்த மாதோட்ட நன்னகராம் மன்னார் மாவட்டத்தில் வளர்கலை மலிந்த வங்காலை செழும் பதியில் அமரர் திருவாளர் அதிரியான் குருஸ் திருமதி அன்னபாக்கியம் குலாஸ் தம்பதிகளின் திருநிறைச் செல்வனாக ஆண்டு 1970 தைத்திங்கள் 5ம் நாளில் அருட்சகோதரர் கிறிஸ்ரி தேவநாயகம் குருஸ் அவர்கள் அவதரித்தார். தமது ஆரம்ப இடைநிலைக்கல்வியை (1975 -1984) மன்னார் புனித ஆனாள் ம.ம.வித்யாலயத்தில் பயின்று வரும்போது ஆண்டவரின் அழைப்பின் குரலை உணரத் தொடங்கினார். மன்னார் மறை-மாவட்டத்தில் வங்காலை பங்கு பல குருக்கள் துறவிகளின் விளைநிலமாக திகழ்கின்ற போதிலும் அருட்சகோதரர் கிறிஸ்ரி தேவநாயகம் குருஸ் அவர்கள் தமது சிறிய தகப்பனார் கலாநிதி அருட்சகோதரர் பப்ரிஸ்ற் குருஸ் அவர்களின் வாழ்க்கையில் காணப்பட்ட சிறப்பான விழுமியங்களால் ஈர்க்கப்பட்டும் வங்காலை புனித ஆனாள் பாடசாலையில் அன்றைய காலத்தில் பணியாற்றிய அருட்சகோதரர் கிறிஸ்ரி டோறஸ் அவர்களால் ஊக்குவிக்கப்பட்டும் கல்விக்காக மட்டும் பணியாற்றும் துறவற சபையான டிலாசால் அருட்சகோதரர்களின் துறவற சபையில் இணைந்து கொண்டார். தனது துறவற வாழ்வின் ஆரம்ப பயிற்சி நெறியினை 1985ம் ஆண்டு புனித டிலாசால் சபையினரால் நிர்வகிக்கப்பட்டுவரும் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் இணைந்து தனது உயர் கல்வியை மேற்கொண்டார். தனது துறவற வாழ்வின் ஆரம்ப கால பயிற்சி கற்கைநெறியினை மன்னார் புனித சூசையப்பர் புகுமுக மடத்தில் அருட்சகோதரர் கில்லறி யோசப் அவர்களின் நிர்வாகத்தின் கீழ் மேற்கொண்டார். 1988ம் இல் க.பொ.த.உயர் தரத்தில் வணிகப்பாட பிரிவில் கற்று தேறி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் வணிகமாணி பட்டப்படிப்பை மேற்கொள்வதற்காக தகுதி பெற்றார். யாழ் பல்கலைக்கழகத்தில்..

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

## வரலாற்று ஏட்டில் முதன் முறையாக மலையக மக்களின் மனதில் பதிந்த இரத்தினபுரி மறைமாவட்டத்தின் திறந்தவெளி சிலுவைப் பாதை தியானம்.



அன்று 2015.03.14 சனிக்கிழமையன்று இரத்தினபுரி மறைமாவட்டத்துக்குச் சொந்தமான இரத்தினபுரி பிரதேசத்தில் அமைந்திருக்கும் புனித சவேரியார் எழுந்தருளியுள்ள தேவாலய கல்பொட தோட்ட வளவுக்குள்ளே எங்கு பார்த்தாலும் வெண்புறாக்கள் போல் வெண்ணிற ஆடையுடன் கத்தோலிக்க மக்கள் பக்தி பரபரப்புடன் சிலுவைப்பாதை தியானத்தில் கலந்துக் கொண்டனர். அருட்தந்தை அவர்கள் மறையுரையாற்றி வழிநடத்துவதையும் படத்தில் காணலாம்.

தகவல் : மேரி இருதயநாதன், மறையாசிரியர், புனித இராயப்பர் சின்னப்பர் பேராலயம், இரத்தினபுரி



காலி மறைமாவட்டம், உடுகம புனித செபஸ்தியார் பங்கின் காவலரான வானதூதர் புனித வனத்து சின்னப்பர் ஆலயத்தின் 47 வது வருடாந்த திருவிழா கடந்த 2015. 04. 26 ம் திகதி விமர்சையாக நடைபெற்றது.. (இப் புனித திருத்தலத்தில் வருடாந்தம் ஒவ்வொரு திருவிழாவின் போதும் அன்னதானம் வழங்கி பங்கு மக்கள் மற்றும் வறியோருக்கு பகிர்ந்தளிக்கப்படும்.. இதன் போது சிறிய அளவு உணவை நிலத்தில் புதைத்து வைக்கப்படும்.. அதனை அடுத்தவருடம் (ஒரு வருடத்திற்கு பிறகு) மீண்டும் தோன்றி எடுக்கும் போது அவ்வுணவு அதே போல பழுதடையாமல் இருப்பது விசேட அம்சமாகும்...)

தகவல் : புஷ்பராஜா சிமியோன். உடுகம புனித செபஸ்தியார் பங்கு.

## எடுப்பான தொடக்கமும் மிடுக்கான ஓட்டமும் மனத்தில் நிற்கும் முடிவுமே ஒரு நல்ல சிறுகதையின் அங்கங்கள்

### – சிறுகதை வெளியீட்டு விழாவில் தமிழ் நேசன் அடிகளார் –

எடுப்பான தொடக்கம், மிடுக்கான ஓட்டம், மனத்தில் நிற்கும் முடிவு ஆகியவை ஒரு நல்ல சிறுகதைக்கு எப்போதும் அங்கங்களாக விளங்குபவை என அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் தெரிவித்தார். இம்மாதம் 4ஆம் திகதி (04.05.2015) மன்னார் கலையருவி நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற "துறையூரான்" என்ற புனைபெயரைக் கொண்ட திரு. எம். சிவானந்தன் அவர்களின் "குறை ஒன்றும் இல்லை" என்ற சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு விழாவிற்குத் தலைமைதாங்கி உரையாற்றும்போதே அடிகளார் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் மறைமாவட்டத்தின் சமூகத்தொடர்பு அருட்பணி மையமான கலையருவியின் இயக்குனரும் மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவரும், மன்னா என்ற கத்தோலிக்க பத்திரிகையின் ஆசிரியருமான அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் அங்கு தொடர்ந்தும் உரையாற்றும்போது கூறியதாவது,

சிறுகதையானது பல வகைகளில் விளக்கப்படுகின்றது. "வாழ்க்கையின் சாளரம்" என்றும், "ஒரு சாவித்துளையின் வாயிலாகப் பரந்த ஓர் அறையைப் பார்ப்பது போன்றது" என்றும், "ஒரு மின்னல் வெட்டுப் போன்றது" என்றும், "ஒரு நூறு மீட்டர் ஓட்டத்தை ஒத்தது" என்றும் சிறுகதையை விளக்குவர். சிறுகதைகள் எப்படி இருக்கவேண்டும் என்று கூறவரும் மேல்நாட்டு இலக்கியத் திறனாய்வாளர்கள், "சிறுகதைகள் குதிரைப் பந்தயம்போல் தொடக்கமும் முடிவும் சுவைமிக்கனவாக இருத்தல் வேண்டும்" என்றும், "சிறுகதைகள் ஒரு தடவை உட்கார்ந்து வாசிக்கக்கூடிய



ஒரு தனி நிகழ்ச்சியாக இருக்க வேண்டும்" என்றும் கூறியுள்ளனர்.

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் பொதுச் செயலாளராக விளங்கும் திரு. சிவானந்தன் அவர்கள் சிறந்த ஒரு கல்வியாளர், சமூகப் பகுப்பாய்வாளர், மதங்களைக் கடந்து சிந்திக்கும் மனிதாபிமானவாதி, பகுத்தறிவாளர், யதார்த்தவாதி. இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட இவர் தனது எண்ணங்களை, சிந்தனைகளை சமூகத்திற்கு வழங்க தேர்ந்துகொண்ட ஊடகம் இலக்கியம் ஆகும். "மௌனப் பார்வை" என்ற குறுநாவல் வழியாக ஏற்கனவே இலக்கிய உலகில் தன்னை வெளிப்படுத்திய சிவானந்தன் தற்போது தனது சிறுகதைகள் வழியாக மீண்டும் நம்மோடு பேசுகின்றார்.

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

## இறைவா! என்னையும் இறைபணிக்கு அழைத்துக் கொள்ளுங்களேன்.



கடந்த 2015.05.03 அன்று தேவ அழைத்தல் தினத்தன்று தேவ அழைத்தல் எவ்வாறு கிடைக்கின்றது. அதை எவ்வாறு ஏற்றுக்கொள்வது. அதற்காக எவ்வாறு செபிப்பது போன்றவற்றுக்கு விளக்கமளித்து தேவ அழைத்தலுக்கு செவிசாய்த்து இறைபணி புரிய இறைபிள்ளைகளை தெரிந்துகொள்வதற்காக இரத்தினபுரி மறைமாவட்ட ஆயரின் வேண்டுகோளுக்கிணங்கி பலாங்கொடை புனித சூசையப்பர் கன்னியர் மடத்திலிருந்து அருட்சகோதரி இவன்னே மிசேல், அவர்களாலும், கொழும்பு உயர் மறைமாவட்டத்திலிருந்து அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த தேவ அழைத்தலுக்குப் பொறுப்பான இயக்குனர் அருட்தந்தை தல்கதாது அடிகளாரினால் இவ்வொரு நாள் கருத்தரங்கு நடைபெற்றது. அதில் அநேக மாணவர்கள் கலந்து கொண்டு தேவ அழைத்தலுக்கான விசேட அழைப்பை உணர்ந்து கொண்டனர். கலந்து கொண்ட மாணவர்களில் சிலர் தங்களை அர்ப்பணிக்க பெயர்களை கொடுத்தனர். கலந்து கொண்டவர்களை படத்தில் காணலாம்.

தகவல் : மேரி இருதயநாதன், மறையாசிரியர்,

ஞான ஒளி
GNANA OLI

கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல 0112695984,0114899611 பெக்ஸ் 0112692586,
மின்னஞ்சல் முகவரி cgnanaoli@yahoo.com
17, வைகாசி மாதம், 2015 ஞாயிற்றுக்கிழமை.

## நாம் இறையரசிற்கு ஏற்ற வாழ்வு வாழ்ந்து, இறையரசின் பிள்ளைகளாகி இயேசுவிடம் எம்மை அழைத்துச் செல்ல வேண்டும் என்பதுதான் அன்னையின் விருப்பம்.

பரிசுத்த திருச்சபையானது வைகாசி மாதத்தை தேவ அன்னைக்குரிய மாதமாக ஏற்படுத்தி அன்னையை கௌரவப்படுத்தி வருவது சிறப்பம்சமாகும். உலகத்தையே படைத்து ஆளும் இறைவன் பாமர பெண்ணான மரியாவை தூய கபிரியேல் வானதூதர் வழியாக தேர்ந்தெடுத்து இயேசுவிற்கு தாயாகும் பாக்கியத்தை அறிவிக்கின்றார். இந்தப் பாக்கியத்தை அடைய மரியாவிடம் இருந்த தகுதி என்ன? அதுதான் அவள் எப்போதும் கடவுளோடேதான் வாழ்ந்து வந்தார். ஆம் இறையருளால் நிரப்பப்பட்டவர்கள் மட்டுமே இறைவனுடன் இணைந்து வாழ முடியும். இறைவனும் அவர்களோடு இணைந்து வாழ்வார். நாம் எதையாவது அடைய ஆசைப்பட்டால்தான் அதனை அடையவும் வழிதேடுவோம். மனதில் ஆசை இருந்தால்தான் தேட முடியும். தேடினால் தான் வழிபிறக்கும். மரியாவிற்கு இருந்த ஆசை இறைவனுடன் தான் வாழ வேண்டும் என்பது மட்டுமேதான். அதனால்தான் இறைவன் இறைமகன் இயேசுவை மரியன்னையின் கருவில் தாங்குவதற்கு சித்தம் கொண்டார்.

சிறப்பாக நாம் இந்த மாதத்தில் அன்னை மரியாளுக்கு செபமாலை சொல்வதும், பிரார்த்தனை சொல்வதும், விழாக்கள் எடுப்பதும் மிகவும் பொருத்தமானதே. இந்த பக்திகள் எல்லாம் இறைவனிடம் எம்மை கொண்டுபோய் சேர்ப்பதற்கும் இறைவனில் வாழச்செய்யவுமே. இயேசு சொல்வதை நாம் செய்ய வேண்டும் என்பதுதான் தேவ அன்னையின் விருப்பமாகவும் இருக்கின்றது. அதற்கு நாம் இயேசுவின் குரலை முதலில் கேட்க வேண்டும். அவருடன் இணைந்து வாழ வேண்டும். அவரைத் தேட வேண்டும். மனிதன் இறைவனைத் தேடும் மூன்று நிலைகள் உண்டு. முதலாவது நோயுற்றிருக்கும்போது தேடுகின்றான். இரண்டாவது தனிமையில் இருக்கும்போது தேடுகின்றான். மூன்றாவது வறுமையில் வாடும்போது தேடுகின்றான். தேவையில் மட்டுமே இறைவனைக் கண்டடைய துடிக்கின்றான். நிச்சயம் இறைவனைக் காண்பான். ஆனால் பாதியில் மறந்துவிடுவான். இறைவனை அவனது வாழ்க்கையில் நிரந்தரமாக்கிக் கொள்ளமாட்டான். தேவ அன்னையைப் போல் இறைவன் மட்டுமே எனக்கெல்லாம் என்ற நிலை வரும்வரையில் அவனது வாழ்வில் இன்பம் இருக்காது.

மனிதனின் அடிப்படைத் தேவைகள் அதாவது உணவு, உடை, உறையுள் இவை மூன்றும் நிறைவேற்றப்படும்போது அவன் மகிழ்ச்சியடைகின்றான். அவை நிறைவேற்றப்படாதபோது வேதனையடைகின்றான். ஆனால் இவையனைத்தையும் நாம் தேடினால்தான் பெறமுடியும். நல்ல உணவு வேண்டும். ஆடம்பரமான உடை வேண்டும். வசதியான இல்லம் வேண்டும். மொத்தத்தில் சொகுசு வாழ்க்கை வாழ வேண்டும். மெல்லிய மூங்கிலானது கடினமான சூடான கம்பியினால் துளையிடப்படும்போது மூங்கிலுக்கு வேதனையாகத்தான் இருக்கும். ஆனால் துளையிடப்பட்டப்பின் அது அழகான புல்லாங்குழலாக மாறுகின்றபோது அதன் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. அதுபோல்தான் நாமும் எமது அடிப்படைத் தேவைகளை தேடிப்பெறும்போது நாம் பல்வேறு துன்ப நிகழ்வுகளுக்கு முகங்கொடுக்க வேண்டி நேரிடலாம். ஆனால் அவையெல்லாம் தற்காலிக துன்பங்கள் ஆனால் அவை எமக்கு மெல்லிய மூங்கிலில் துளையிடப்பட்டு உருவான புல்லாங்குழல் போல் நீடிய மகிழ்ச்சியை தரவல்லது.

அன்னை மரியின் வாழ்வு கிறிஸ்தவ வாழ்வுக்கு ஓர் முன்மாதிரிகையாகும். நாம் இறையரசிற்கு ஏற்ற வாழ்வு வாழ்ந்து இறையரசின் பிள்ளைகளாகி இயேசுவிடம் எம்மை அழைத்துச் செல்ல வேண்டும் என்பதுதான் அன்னையின் விருப்பம். அன்னையின் மாதத்தில் அன்னையிடம் தஞ்சமடைவோம். நமக்காக தனது அன்பு மகனிடம் பரிந்து பேசி அனைத்தையும் பெற்றுத்தருபவர் எமது அன்னை மரியே.

**இறையாசீருடன்**
**ஆசிரியர்**



# ஆண்டவரின் விண்ணேற்பு பெருவிழா

**"நாமும் விண்ணுலகை உரிமையாக்கிக் கொள்ள முதலில் மண்ணுலகில் ஆண்டவருக்கு சாட்சியம் பகர வேண்டும். நீதிக்காகவும், உண்மைக்காகவும், உழைக்கும்போதும் உயிர் கொடுக்கும்போதும் கடவுளோடு நாம் வாழ்கின்றோம்."**

வானகத்திற்கு எழுந்தருளி எல்லாம் வல்ல தந்தையின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கிறார் என்று விசுவாச சத்தியத்தில் கூறுகின்றோம். அறிக்கையிடுகின்றோம்.

விண்ணகம் என்பது என்ன? இயேசு விண்ணகம் சென்றார் என்பதன் பொருள் என்ன?

சீடர்கள் பார்த்துக் கொண்டிருக்க இயேசு விண்ணகம் சென்றார் வானகத்திற்கு மேலே சென்றார் என்று விவிலியத்தில் வாசிக்கின்றோம். விண்ணகம் என்பது பூமிக்கு மேலேயோ, பூமிக்கு கீழேயோ இல்லை மாறாக கடவுள் இருக்கும் இடம் தான் விண்ணகம். விண்ணகத்தில் இருப்பது என்பது கடவுளோடு இருப்பதைக் குறிக்கிறது. இயேசு வலப்பக்கத்தில் வீற்றிருக்கிறார் என்பது வலது பக்கத்தில் அமர்ந்திருக்கிறார் என்பதல்ல, மாறாக தனது மகன் தனது மீட்புத் திட்டத்தை நிறைவேற்றினார். அதனால் தம் மகிமையில் பங்களித்தார் என்பதே உண்மை....

இயேசு இறைவனின் மீட்புத் திட்டத்தை எவ்வாறு நிறைவேற்றினார். ஆண்டவர் இயேசு மிகவும் எளிமையாக வாழ்ந்தவர். செயல்முறைகளில் அவர் அன்றாட பிரச்சினைகளுக்கு விளங்கங்களையும், விடைகளையும் கூறினார். கடவுளின் ஒரே பேரான மகனாக இருந்தபோதும், தனக்கென்று ஒரு சீரிய பணி இருந்தபோதும், எதையும் இழக்காமல் எதையும் சமரசம் செய்து கொள்ளாமல் சாதாரண மக்களோடும், தன் சீடர்களோடும் உறவாடி அன்பு செய்து பணியாற்றி வாழ்ந்தார். இதன் காரணமாகத்தான் நம் தலைமைக் குருவாம் இயேசு, விண்ணுக்கும் மண்ணுக்கும் பாலமாக அமைந்தார்.

இயேசுவின் விண்ணேற்பு அவரின் மண்ணக வாழ்வின் நிறைவைக் குறிப்பிடுகிறது. அத்தோடு மண்ணக வாழ்வின் முடிவே திருச்சபையின் தொடக்கமாகவுள்ளது.

தந்தை தனக்களித்த பணியை தொடர்ந்து நிறைவேற்ற தனது ஆற்றலையும், அதிகாரத்தையும் சீடர்களுக்குதந்து தந்தை தமக்கு அளித்தப் பணியை தொடர்ந்து நிறைவேற்ற சொல்கிறார். இதோ உலகம் முடியும் வரை எந்நாளும் நான் உங்களோடு இருக்கின்றேன்" என்று சீடர்களுக்கு கூறி அவர்களைத் திடப்படுத்தினார். சீடர்களின் பலவீனங்களையும், பாவங்களையும் அறியாமையையும், இயலாமையையும் நன்கு அறிந்த இயேசு, அவர்களை தவிக்க விடாமல் தூய ஆவியாரை அனுப்புவதாக கூறி திடப்படுத்துகிறார்.

**இயேசு அவர்களுக்கு கொடுத்த பணிகள் நற்செய்தியை நாடெங்கும் அறிவிப்பது.**

**தங்கள் வாழ்வால் அறிவிக்கும் நற்செய்திக்கு சான்று பகர்வது.**

ஆகவே நாமும் விண்ணுலகை உரிமையாக்கிக் கொள்ள முதலில் மண்ணுலகில் ஆண்டவருக்கு சாட்சியம் பகர வேண்டும். நீதிக்காகவும், உண்மைக்காகவும், உழைக்கும்போது உயிர் கொடுக்கும்போதும் கடவுளோடு நாம் வாழ்கின்றோம். கடவுளோடு வாழ்வது என்பது நாம் ஏழைகளில் வறியவர்களில் நோயாளிகளில் அக்கறைக் கொள்வதும் பராமரிப்பதுமாகும்.

**இதன் மூலம் நாம் விண்ணகப் பேரின்பத்தை அடைய முடியும்.**

## உண்மை உறைக்கும்

கமிலஸ்



"f z ; Z f;Fg; Gy dhfhj , iwt d;d; M f;fr; rf;j;jhd; J}a M t;ahh;. kd;j i d M l;nfhs;g t Uk;> , iwa;f;fk s;g;g t Uk; m t Nu. gu t rg; Ngr;R K iwf s;y; m t h;d; nrayhf;f;j;i j ca;j;J z uyhk;'




புனித பாத்ரே பியோ பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அவர் தான் ஐந்து காய மகிமையை பெற்றவர். இவர் தனது உறுதிப்பூசுதல் நாளைப் பற்றி இப்படி சொல்வார் "அந்த நாளை நினைக்கும் போதெல்லாம் நான் ஆனந்தத்தில் அழுகின்றேன். அது என் வாழ்வின் முக்கியமான நாள். நான் மறக்க முடியாத நாள். அன்றைக்கு என்னை யாரோ ஆகாயத்திற்கு கவ்வி இழுப்பதைப்போல் உணர்ந்தேன். உச்சந் தலையிலிருந்து உள்ளங்கால்வரை ஒரு நெருப்பு என்னை ஆட்கொண்டது. அந்த நெருப்பு என்னை எரித்தது. என்னை உட்கொண்டது. ஆனாலும் அது எனக்கு எந்த வலியையும் தரவில்லை.

இதே அனுபவம் பெந்தகோஸ்தே தினத்தன்று திருத்தூதர்களுக்கு நேர்ந்தது. ஒரு நெருப்பு அவர்களை ஆட்கொண்டது. அந்த நெருப்பே அவர்களை ஆட்டுவித்தது. அதனால் திருத்தூதர்கள் பேசிய வார்த்தைகளை அங்கு கூடியிருந்தவர்கள் தத்தமது வார்த்தைகளில் புரிந்து கொண்டனர்.

ஆம் பெந்தகோஸ்தே தினத்தன்று திருத்தூதர்கள் வர்ழவிற்குரிய ஆவியானவரைப் பெற்றுக்கொண்ட நாளாகும்.

## தூய ஆவியார் யார்?

கடவுளின் தூய ஆவியால் இறை வாழ்வுக்கு மனிதன் அழைக்கப்படுகின்றான். இந்த இறைவாழ்வை மனிதன் பெற முதன் முதலில் கடவுள் மனிதனுக்கு உயிரூட்டம் கொடுக்கின்றார். மூச்சாகவும், காற்றாகவும் மனிதனுக்கு கடவுள் பக்கபலமாய் இருக்கின்றார். இக் கோணத்தில் மனித வாழ்வில் இணைந்துள்ள இறைவன் ஆவியார் என்றே அழைக்கப்பட்டார். இதுவரை மூச்சிலும், காற்றிலும் தெரிந்த ஆவியார் திருச்சபையின் வாழ்வில் பல்வேறு அருள் அடையாளங்கள் வாயிலாய் மக்களுக்குப் புதுவாழ்வு அளிக்கின்றார் என்று மனிதன் அறிந்துணர்கின்றான். மனிதனில் "ஊனும்" "ஆவியும்" இணைந்திருப்பது போல், கிறிஸ்துவுக்கு ஊனும் ஆவியும் உள்ளதுபோல், கிறிஸ்துவின் மறையுடலும் பல்வேறு உறுப்புகளால் இணைக்கப்பட்டுள்ளது. இந்த இணைப்புப் பணியைச் செய்பவர் தூய ஆவியாரேயாவார்.

கடவுள் ஆவியாரைக் கொடுத்துள்ளார். இதே ஆவியார் மனித உள்ளங்களில் உறைகின்றார். முதன் முதலாக இந்த ஆவியார் தெரிந்தெடுக்கப்பட்ட மக்களாகிய இஸ்ரயேலர்களிடம் இருப்பிடம் கொள்வதைக் காண்கின்றோம். சட்டம் கொடுப்போர், அரசர்கள் இறைவாக்கினர், எல்லாவற்றிற்கும் மேலாக மெசியா என்று அனைவரும் ஆவியாரின் வாயிலாய் அமைகின்றனர். "மோசே, ஆண்டவருடைய வார்த்தைகளை மக்களுக்குச் சொல்லி, இஸ்ரயேல் முதியோரின் எழுபதுபேரைக் கூட்டிவந்து, கூடாரத்தைச் சுற்றிலும் அவர்களை நிறுத்தினார். ஆண்டவரோ மேகத்தினின்று இறங்கிவந்து மோசேயோடு உரையாடிய பின்பு மேசேயினிடத்திலிருந்த ஆவியை அவ்வெழுபது பேருக்கும் பிரித்துக் கொடுத்தார். ஆவி தங்கள் மேல் வந்து தங்கினவுடனே அவர்கள் இறைவாக்கை உரைக்கத் தொடங்கினார்கள். அந்நாள் முதல் அவர்கள் இடைவிடாது இறைவாக்கு உரைத்தார்கள்" (எண், 11:24-25, 1 அர 10:6-10, 10-13, எசாயா 11:1-12, 42:1, 61:1, எசேக்கி 3:12-14)

## சொல்லாக்கம்

ரூவா (urha) என்னும் சொல்லின் வேர்ப் பொருள் "காற்றின் அசைவு" "தென்றல்" "மூச்சு" என்பதாகும். இதன் பரந்தபொருள் "வாழ்வின் அடிப்படை" என்பதாகும். இதைத்தான் பிராணன் என்கிறோம். இம் மூலக்கருத்து அடங்கிய வாசகத்தை தொடக்க நூலில் காணலாம். "கடவுளின் ஆவியானவர் தண்ணீரின் மீது அசைவாடிக் கொண்டிருந்தார்" (தொ.நூ 1:2)

ரூவா என்பதை "நியூமா" (Pneuma) என்று எழுபதின்மர் கொண்டனர். பழைய ஏற்பாட்டில் ரூவா என்ற சொல் கீழ்க்கண்ட பரந்த பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது: "காற்று" அல்லது "தென்றல்", "மனிதன் மூச்சு", "வாழ்வின் அடிப்படை" (தொ.நூ 6:17:, மனிதனின் உணர்ச்சி" (தொ.நூல் 41:8) "அறிவார்ந்த செயல்" "ஞானத்தின் ஆவி". நியூமாவும், ரூவாவும் ஆவியின் வடிவிலே வாழ்வின் அடிப்படையாக சுவாசிக்கும் விலங்குகளிலும், விலங்குகளின் சதைகளிலும் வசிக்கின்றன. இப்பொருளிலே நோக்குவோமேயானால் இது நெ(f)பே (Nephesh) அல்லது சிக்கே (Psyche) என்பவற்றிற்கு இணையாகும். யோபு 27:3, எசாயா 42:5, செக்கரியா 12:1 - ஆகிய இடங்களில் மனித ஆவியைக் கடவுள் படைக்கின்றார் என்று காண்கிறோம். யோபு 10:12இல் அதைக் கடவுள் காப்பாற்றுகிறார் என்ற செய்தி உள்ளது. எனவே ஆவி கடவுளுக்குச் சொந்தம்.

கண்ணுக்குப் புலனாகாத இறைவனின் ஆக்கச் சக்தி தான் தூய ஆவியாவார். மனிதனை ஆட்கொள்பவரும் இறையூக்கமளிப்பவரும் அவரே. பரவசப் பேச்சு முறைகளில் அவரின் செயலாக்கத்தை உய்த்துணரலாம்.

புதிய ஏற்பாட்டில் இயேசுவை "அருள் பொழிவு" செய்கிறவரும், அவர் மெசியா கடவுளின் மகன் என்று யோர்தான் நதியில் திருமுழுக்கில் குறிப்பிடுகிறவரும் தூய ஆவியாரேதான். மீட்புப் பலனின் முழுப்பயனாக, உயிர்ப்பின் நிறைவாக விண்ணேற்றத்திற்குப்பின் தனது சீடர் மேல் பொழிந்த அருட்கொடை ஆவியார்தான். கிறிஸ்துவின் சாட்சிகளாயும் திருச்சபையின் பணியகமாயும், புதிய வாழ்வின் அடிப்படையாகவும் இருக்க வந்தவர் ஆவியார் தான்.

## ஒத்தமைவு நற்செய்திகளில் தூய ஆவியார்

ஒத்தமைவு நற்செய்திகள் பழைய ஏற்பாட்டின் கருத்தைக் கடைப்பிடித்து, ஆவியென்னும் எண்ணத்தை மேலும் பரவச் செய்கின்றன. தமது ஆவியாரால் கடவுள் மக்களின் மீட்பைத் தொடர்ந்து நடத்துகிறார். இயேசுவின் வருகையானது ஆவியாரின் பணிகளின் தொடக்கமாவும் அமைகிறது. அதனால்தான் இயேசு ஆவியால் நிரப்பியுள்ளார். தனது பணிகளையும் போதகத்தையும் ஆவியின் ஆற்றலால் செயலாக்குகிறார். ஆவியார் அடியார்களின் உள்ளங்களில் குடிகொள்வதை ஒத்தமைவு நற்செய்தியாளர்கள் வலியுறுத்திக் கூறவில்லை, மாறாக, ஆவியார் கிறிஸ்துவின் பெருமையை மக்களுக்கு அறிவிப்பதை விரிவாக எடுத்துரைத்துள்ளனர்."

தூய ஆவியார் திட்டவட்டமான ஓர் ஆளாக அன்று, இறைவனின் ஆற்றலாகவே ஒத்தமை நற்செய்திகளில் தென்படுகின்றார். தூய ஆவியாரின் பணிகள் பழைய ஏற்பாட்டின் தொடர்ச்சியாகவும் நிறைவாகவும் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். தூய ஆவியார் மறைநூல் ஆசிரியர்களை ஊக்குவித்தார் என்பதை "ஆண்டவர் என ஆண்டவரிடம் சொன்னது, "நான் உம் பகைவரை உமக்குக் கால்மனையாக்கும் வரை, நீர் என் வலப்பக்கத்தில் அமரும், எனத் தாவீதே தூய ஆவியின் ஏவுதலால் கூறியிருக்கிறார்." என்ற பகுதியால் அறியலாம் (மாற் 12:36, திப 4:25,28). மெசியாவின் பிறப்பு தூய ஆவியாரின் ஆற்றலால் ஆனது என்பதற்குக் கீழ்வரும் பகுதி சான்று, "அதற்கு வானதூதர், தூய ஆவி உம்மீது வருவார். உன்னதரின் வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலின் பிறக்கும் திருக்குழந்தை கடவுளின் மகன் எனப்படுவார்" (லூக் 1:35). மெசியாவின் வருகையும், ஆவியாரின் இறைவாக்குக் கொடையும் இணைந்தே இருந்தன. "மரியாளின் வார்த்தையை எலிசபெத்து கேட்டவுடனே அவர் வயிற்றிலுள்ளே குழந்தை துள்ளியது எலிசபெத்து தூய ஆவியால் நிரப்பப்பெற்று "பெண்களுக்குள் பேறு பெற்றவர் நீரே" என்றார்" (லூக் 1:41).

இயேசுவின் பொதுப்பணியில் தொடக்கத்திலேயே ஆவியார் அவர்மேல் இறங்கினார். அவர் இறைமகன் என்று காட்டினார். மெசியாவின் பணியில் முதற்படியாக நுழைகின்றார். "அந்நாட்களில் இயேசு, கலிலேயா -விலுள்ள நாசரேத்திலிருந்து வந்து யோர்தான் ஆற்றில் யோவானிடம் திருமுழுக்கு பெற்றார். உடனே அவர் ஆற்றிலிருந்து கரையேறுகையில் வானம் பிளவுபடுவதையும், ஆவியானவர் புறாவைப்போல் தம்மீதிறங்கி வருவதையும் கண்டார். அப்பொழுது "நீரே என் அன்பார்ந்த மகன், உம்மிடம் நான் பூரிப்படைகின்றேன்" என்று வானிலிருந்து ஒரு குரலொலி கேட்டது" (மாற் 1:9-11)

இயேசு தூய ஆவியால் நிறைந்தவராய், யோர்தான் ஆற்றங்கரையினின்று திரும்பியபின் பாலைவனத்தில் தங்குமாறு ஆவியானவரால் நடத்தப்பெற்றார் (லூக் 4:1). ஆவியானவரின் வல்லமையால் இயேசு புதுமைகளைச் செய்தார். பேய்களை ஓட்டினார் (மத் 12:28). "ஆண்டவருடைய ஆவி என்மேலே, ஏனெனில், என்னை அருள்பொழிவு செய்துள்ளார், எளியோர்க்கு நற்செய்தி சொல்லவும், சிறைப்பட்டோர் விடுதலையடைவர், குருடர் பார்வை பெறுவர் என அறிவிக்கவும், ஆண்டவர் அருள் தரும் ஆண்டினை அறிவிக்கவும், அவர் என்னை அனுப்பினார். (லூக் 4:18) திருமுழுக்கு யோவான் தூய ஆவியாரைக் குறிப்பிடுகின்றார். "நான் உங்களுக்கு நீரால் திருமுழுக்கு கொடுத்தேன், அவரோ உங்களுக்குத் தூய ஆவியால் திருமுழுக்கு கொடுப்பார் (மாற் 1:8) அவர் ஆவியாலும் நெருப்பாலும் திருமுழுக்குக் கொடுப்பார் (மத் 3:11).

தூய ஆவியாரின் செயல்கள் பற்றிய நூல் திருத்தூதர் பணிகள் எனலாம். அவரின் பற்பல தோற்றங்களும், வெளிப்பாடுகளும் அந்நூலில் விரித்துரைக்கப்பட்டுள்ளன. திருச்சபை ஒரு கூட்டு இயக்கமாகவும், அருங்கொடை பெற்ற, கடவுளின் திருச்செல்வமாகவும் விளங்குவதைக் காணலாம். பெந்தகோஸ்து, ஒரு புதிய கட்டத்தைத் தொடங்கி வைக்கின்றது. மெசியாவின் செய்தி நிறைவேற்றப்படுகிறது. இறுதிக்கால நம்பிக்கை ஊட்டம் பெறுகிறது. எனவேதான் திருத்தூதர் பணிகள் (2:1-41) நீண்டவொரு விளக்கத்தையும், பேதுருவின் தெளிவுரையையும் வழங்குகின்றது.

இயற்கைக்கு மேற்பட்ட இறைவாக்குரைகள், புதுமைகள் அனைத்தையும், சமய வாழ்க்கையின் பின்னணியில் நோக்க வேண்டும். முதல் முதலாக மனிதர்களின் மனம் மாறவேண்டும். எனவேதான் பேதுரு "மனம் திரும்புங்கள், பாவமன்னிப்பு அடைவதற்காக இயேசு கிறிஸ்துவின் பெயரால் நீங்கள் ஒவ்வொருவரும் திருமுழுக்கு பெறுங்கள். அப்பொழுது தூய ஆவியாம் திருக்கொடையைப் பெறுவீர்கள்" (திப 2:38) என்று போதிக்கிறார். "நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒருமித்துத் தங்கள் உடமைகள் அனைத்தையும் பொதுப் பொருளாய் கொண்டனர். நிலபுலம் உடமைகளையெல்லாம் விற்று அவரவர் தேவைக்கேற்ப எல்லோரும் பங்கிட்டுக் கொண்டனர்" (திப 2:44-45).

»» தொடர்ச்சி 15ம் பக்கம் »»



அருட்பணி. அந்திரியாஸ் பர்னாந்து அ.ம.தி

# அருளடையாளங்கள் ஓர் அலசல்

18



# தேவநற்கருணை

## நலம் தரும் மருந்து

கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும், உச்சியும் திருப்பலியே. இத்திருப்பலியின் வல்லமையை உணர்ந்து கொண்டோர் வெகு சிலரே. எனவே திருப்பலிச் செபங்களை மையமாகக் கொண்டு. அதன் வல்லமையை உணர்ந்து பங்கேற்க அவ்வல்லமையை அனுபவிக்க உங்களை அன்புடன் அழைக்கின்றேன். திருப்பலியின் வல்லமை திருப்பலி ஒப்புக்கொடுக்கும் குருவானவரில் தங்கி இருப்பதில்லை. திருப்பலியானது கிறிஸ்துவின் தியாகப்பலியின் நினைவாக உலக முடியும் வரை அவரது நினைவாக அருளடையாள முறையில் ஒப்புக்கொடுக்கப்படுகிறது. இன்று பலருடைய மனதில் "குணமாக்கல் திருப்பலி" என்பது ஏனைய திருப்பலிகளிலிருந்து வேறுபட்டது என்ற ஓர் மனநிலையை உருவாக்கியுள்ளது. ஒவ்வொரு திருப்பலியும் குணமாக்கல் திருப்பலியே. இனி இதன் ஆழத்தை உற்றுநோக்குவோம்.

### 1. பாவமன்னிப்பு சடங்கு :

திருப்பலியில் நாம் தூய உள்ளத்தோடு நுழைய வேண்டும். திதாகே என்னும் தொடக்க கால ஏடு சொல்லுவதாவது. "ஆண்டவரின் நாளன்று ஒன்று கூடுங்கள். அப்பம் பிட்டு நன்றி கூறுங்கள். இதற்கு முன் ஒருவர் ஒருவரோடு பாவ அறிக்கை செய்து கொள்ளுங்கள். தூய்மையான உள்ளத்தோடு பலி ஒப்புக்கொடுங்கள்" ஆக பலியின் ஆரம்பத்திலேயே நம் பாவங்களுக்காக மனம் வருந்தி மன்னிப்புக் கேட்க அழைப்பு பெறுகின்றோம். எனவே மனவுறுதியோடு

"பாவிகளை குணமாக்க வந்த ஆண்டவரே இரக்கமாயிரும்"

"உள்ளம் நொறுங்கி வருந்துவோரை குணமாக்குகின்ற கிறிஸ்துவே இரக்கமாயிரும்"

"பாவத்தாலும் பிரிவினையாலும் ஏற்பட்ட காயங்களை குணப்படுத்துகின்ற ஆண்டவரே இரக்கமாயிரும்"

இறைவனின் இரக்கத்தை, குணப்படுத்தலை வேண்டுகின்றோம். திருப்பலியின் ஆரம்பத்திலேயே நமது பாவநிலையை நாம் உணர்ந்தாலும் அதைவிட மேலாக இறைவனின் கருணையை அவருடைய அளவற்ற அன்பைச் சுவைக்க நாம் அழைக்கப்படுகின்றோம்.

### 2. இறைவார்த்தை வழிபாடு :

குருவானவர் நற்செய்தியை முழக்கமிடுவதற்கு முன் "எல்லாம் வல்ல இறைவா, உமது நற்செய்தியைத் தகுந்தவாறு எடுத்துரைக்க என் உள்ளத்தையும் நாவையும் தூய்மைப்படுத்தியருளும்" என்று செபிக்கின்றார். இதன் பொருளை உணர்ந்து கொள்ள ஒரு கணம் எம் பார்வையை எசாயா புத்தகம் பக்கம் திருப்புவோம். எசாயா இறைவனால் அழைக்கப்பட்ட போது "ஐயோ நான் அழிந்தேன். ஏனெனில் தூய்மையற்ற உதடுகளை கொண்ட மனிதன் நான். தூய்மையற்ற உதடுகள் கொண்ட மக்கள் நடுவில் வாழ்பவன் நான்..... " நெருப்புப் பொறி ஒன்றை குறட்டால் எடுத்து..... அதனால் என் வாயைத் தொட்டு, "இதோ நெருப்புப் பொறி உன் உதடுகளைத் தொட்டது. உன் குற்றப்பழி உன்னை விட்டு அகன்றது. உன் பாவம் மன்னிக்கப்பட்டது" (6:5-7) என்பதுபோல் குருவானவர் தன்னை தூய்மையாக்கும்படி இறைவனிடம் வேண்டுகிறார். நற்செய்தி முழக்கத்தின் முடிவில் "நற்செய்தி வாக்கினால் நம் பாவம் நீங்குவதாக" என்று குருவானவர் அமைதியாகச் சொல்லுவார். பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் இறைவார்த்தைக்கு உண்டு என்பதை பின்வரும் இறைவார்த்தைப் பகுதி தெளிவுபடுத்துகின்றது. "என் வார்த்தையைக் கேட்டு, என்னை அனுப்பியவரை நம்புவோர் நிலைவாழ்வைக் கொண்டுள்ளனர். அவர்கள் தண்டனைத் தீர்ப்புக்கு உள்ளாக மாட்டார்கள். ஏற்கனவே சாவைக் கடந்து வாழ்வுக்கு வந்துவிட்டார்கள்" (யோவா 5:24) எனவே இறைவார்த்தைக்கு கவனமாக நாம் செவிகொடுக்கும்போது அது நம் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. "ஒரு வார்த்தை சொல்லும் என் ஊழியன் குணம் பெறுவான். நாமும் நம்பிக்கையோடு இறைவார்த்தைக்கு செவிமடுக்கும்போது அவ்வார்த்தை நம்மை குணப்படுத்தும் என்பதை நம்புவோம்.

### 3. நற்கருணை வழிபாடு :

நாம் கொடுக்கும் அப்பமும், இரசமும் எங்களை காணிக்கையாக்குவதன் அடையாளம். இவற்றோடு நாங்கள் எங்களையும் எங்களுக்குரிய யாவற்றையும் காணிக்கையாக்குகின்றோம். எங்களுடைய உழைப்பு, களைப்பு, வெற்றி, தோல்வி நாம் நல்லவைகளை மாத்திரமல்ல எமது உடைந்துபோன உள்ளம், பாவத்தால் கறைப்பட்ட வாழ்வு குறைகள் கொண்ட எம் வாழ்வு அனைத்தையும் ஒப்புக்கொடுக்கின்றோம். அப்பத்துக்காகவும், இரசத்திற்காகவும் இறைவனுக்கு நன்றிகூறி செபித்ததன் பிற்பாடு "எம் இறைவனாகிய ஆண்டவரே, தாழ்மையான மனத்தோடும் நொறுங்கிய உள்ளத்தோடும் வருகின்ற எங்களை ஏற்றருளும்" என்று அமைதியாகச் செபிக்கின்றார். மேலும் கைகளை கழுவும்போதும் "ஆண்டவரே என் குற்றம் நீங்க என்னைக் கழுவியருளும். பாவத்திலிருந்து என்னைத் தூய்மையாக்கும்" என்று செபிக்கின்றார். (தி.ப 57:4) தண்ணீர் நம்மை தூய்மையாக்கும். எந்த ஒரு திருநிகழ்வுக்கும் முன் குளித்தல், தூய்மைச்சடங்குகளைச் செய்தல் இயல்பான ஒரு செயல். எனவே அப்பம் பிடும் புனித நிகழ்வுக்கு நுழையும் முன் குருவானவர் மீண்டும் ஒருமுறை தன்னை தூய்மையாக்க இறைவனிடம் செபிக்கிறார்.

### 4. திருவிருந்துச் சடங்கு :

நற்கருணையை பெறுவதற்கு முன்பதாக சொல்லப்படும் செபங்களில் இறைவன் நம்மை குணமாக்க வேண்டுமென்று பல இடங்களில் செபிக்கின்றோம்.

(அ) இயேசு ஆண்டவர் கற்றுத்தந்த செபத்தின் மூலம் எங்கள் பாவங்களை மன்னிக்கவும், இறைவனிடம் சக்தி கேட்கின்றோம். இறைவன் என்னை மன்னித்து குணப்படுத்த வேண்டுகின்ற அதே வேளை பிறரை மன்னிக்கும் உயர்ந்த உள்ளத்தை இவ்விடத்தில் நான் வேண்டுகின்றேன்.

(ஆ) இதனைத் தொடர்ந்து வரும் "ஆண்டவரே தீமை அனைத்திலிருந்தும்..." என்ற செபத்தில் தொடர்ந்து அமைதிக்காக, பாவத்திலிருந்து விடுதலை பெற அனைத்து விதமான அங்கலாய்ப்புக்களினால் கலக்கமின்றி நலமாக வாழ குரு செபிக்கின்றார். இது ஓர் அற்புதமான செபம் பல் வகையான மன உளைச்சல்களினால் வாழ்க்கையில் முடங்கிப் போயிருக்கும், நோயுற்றிருக்கும் நம்மை குணப்படுத்த வேண்டுகின்றோம்.

(இ) இதன் பிற்பாடு அமைதிக்காக செபிக்கும் பொழுது "எங்கள் பாவங்களைப் பாராமல், உம் திருச்சபையின் விசுவாசத்தையே கண்ணோக்கி... அமைதிதாரும்" என்று செபிக்கின்றோம். இயேசு உயிர்ப்பின் பிற்பாடு சீடர்களுக்கு காட்சி கொடுத்த சந்தர்ப்பங்களில் எல்லாம் "உங்களுக்கு அமைதி உரித்தாகுக" என்று வாழ்த்தினார். ஏனெனில் சீடர்கள் குழம்பிப் போயிருந்தார்கள். இயேசு துன்புற்ற வேளையில் அவரைத் தனியாக விட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். எனவே அவர்களுக்குள்ளே குற்றப்பழி உணர்வு வெகுவாக இருந்திருக்குக்கூடும். எனவே இயேசு அவர்ளை மன்னிப்பதன் அடையாளம் இவ் அமைதி வாழ்த்து. ஆகவே நாமும் நம் பாவ வாழ்வில் இருந்து மன்னிக்கப் பெறுகின்றோம் என்பதன் அடையாளம் இச்செபம். அதனைத் தொடர்ந்து ஒருவருக்கு ஒருவர் உறவு வாழ்த்தை பகிர்ந்து கொள்கின்றோம். எனவே இதனைத் தொடர்ந்து "உலகின் பாவம் போக்கும் இறைவனின் செம்மறியே எங்கள் மேல் இரக்கமாயிரும்... அமைதி அருளும்" என்று நம்பிக்கையோடு செபிக்கின்றோம்.

(ஈ) அடுத்து, குருவானவர் மீண்டும் அமைதியான குரலில் செபிக்கிறார். "எங்கள் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவே.... இந்தப் புனிதமிக்க உம் உடலினாலும், இரத்தத்தினாலும் என் குற்றங்களைப் போக்கி, தீமையிலிருந்து என்னை விடுவித்து... நான் ஒருபோதும் உம்மை விட்டுப்பிரிய விடாதேயும்" மற்ற செபத்தில் "ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவே நான் உட்கொள்ளும் உம் திருவுடலும், இரத்தமும் என்னை நீதித் தீர்ப்புக்கும், தண்டனைக்கும் உள்ளாக்காமல் உமது பரிவிரக்கத்தால் என் உள்ளத்தையும், உடலையும் காத்திடும் அருமருந்தாகிட அருள்புரியும்" என்று செபிக்கிறார்.

குருவானவர் தான் இறைவின் திருவிருந்தில் தகுதியோடு பங்கேற்க ஆயத்தம் செய்வதுபோல் இறைமக்கள் சமூகமும் தன்னை ஆயத்தம் செய்கின்றது.

(உ) நற்கருணை திருவிருந்தில் பங்கேற்கஅழைப்பு விடுக்கப்படுகின்றது. "இதோ இறைவனின் செம்மறி..." என்ற அழைப்புக்கு மக்கள் அளிக்கும் பதில் "ஆண்டவரே நீர் என் இல்லத்தில் எழுந்தருள நான் தகுதியற்றவன், ஆனால் ஒரு வார்த்தை மட்டும் சொல்லியருளும் என் ஆன்மா குணமடையும்" இது கப்பர்நாகூம் நூற்றுவர் தலைவனுடைய கூற்று (மத் 8:8) இயேசுவினுடைய வார்த்தையினால் ஊழியன் குணமடைந்ததுபோல, எம்மையும் குணப்படுத்த இறைவனிடம் இறுதித் தடவையாக வேண்டுகின்றோம்.

(ஊ) நற்கருணை அருந்தும் போது குருவானவர் "கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்தம் என்னைக் காத்து முடிவில்லா வாழ்வளிப்பதாக" என்று அமைதியாக செபிக்கிறார்.

(எ) இறுதியாக பாத்திரங்களை துடைக்கும்போது "ஆண்டவரே, நாங்கள் உட்கொண்ட திருவுணவு எங்கள் உள்ளத்தைப் புனிதப்படுத்துவதாக. இவ்வாழ்வில் நாங்கள் பெற்றுக்கொண்ட இக்கொடை முடிவில்லா வாழ்வளிக்கும் அருமருந்தாகிட அருள்புரியும்" என்று செபிக்கிறார்.

இப்பொழுது ஓரளவாவது உங்களுக்கு புரிந்திருக்கும் தானே. ஒவ்வொரு திருப்பலியும் தன்னிலே குணமாக்கும் சக்தியுடையது. ஒவ்வொரு திருப்பலியும் "நலம் தரும் மருந்து" குணமளிக்கும் வைத்தியர் இறைவன் ஒருவரே. பணியாளர்கள் இறைவனின் ஊழியர் மாத்திரமே. சீடன் குருவுக்கு மேற்பட்டவன் அல்ல. எனவே நாம் இதனை உணர்ந்து திருப்பலியில் பங்கேற்போம். இறைவனின் குணப்படுத்துதலை அனுபவிப்போம். விடுதலை பெறுவோம்.

தொடரும்...

# மூவொரு கடவுள் பெருவிழா



கடவுள் ஒருவர் இருக்கின்றார் என்பதைப் பகுத்தறிவுள்ள எவரும் எளிதாக அறிந்துக் கொள்ள முடியும். ஆனால் ஒரே கடவுள் மூன்று ஆள்களாக அதாவது தந்தை மகன் தூய ஆவியாராக இருப்பதைப் பகுத்தறிவால் மட்டும் அறிய இயலாது. அதற்கு இறைவெளிப்பாடு தேவை. “கடவுளை யாரும் கண்டதில்லை, கடவுள் தன்மை கொண்டவருமான, ஒரே மகனே அவரை வெளிப்படுத்தினார்” (யோவா 1:18) “தந்தையைத் தவிர வேறு எவரும் மகனை அறியார். மகனும், அவர் யாருக்கு வெளிப்படுத்த வேண்டுமென்று விரும்புகிறாரோ அவரன்றி வேறு எவரும் தந்தையை அறியார்” (மத் 11:24) கிறிஸ்துவே மூவொரு கடவுளை நமக்கு வெளிப்படுத்தியுள்ளார். தாம் தந்தையிடம் இருந்து வந்ததாகவும், தந்தையிடம் திரும்பிப் போவதாகவும், விண்ணகம் சென்ற பின் தூய ஆவியாரை அனுப்புவதாகவும் சீடர்களுக்கு கூறினார்.

மூவொரு கடவுளுக்கும் நமக்கும் உள்ள உறவை தூய பவுலடியார் தமது வாழ்த்துரைகளில் பின்வருமாறு கூறுகின்றார். “ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவின் அருளும் கடவுளின் அன்பும், தூய ஆவியாரின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக” (2கொரி 13:3) இந்த துணையைத் தான் திருச்சபையும் திருப்பலியின் ஆரம்பத்தில் நமக்கு வழங்குகிறது.

தந்தையின் தனிப்பண்பு - அன்பு
மகனின் தனிப்பண்பு - அருள்
தூய ஆவியாரின் தனிப்பண்பு - நட்புறவு

தந்தை நம்மை அன்பு செய்து நம்மைத் தொடர்ந்து பாதுகாக்கிறார். கிறிஸ்து தமது அருளால் நம்மை மீட்டுக் கொண்டிருக்கின்றார். தூய ஆவியார் தமது நட்புறவால் நம் உள்ளத்தில் குடியிருந்து நமக்குப் புத்துயிர் அளித்துக் கொண்டிருக்கிறார். இப்போது மூவொரு கடவுளோடு நமது வாழ்வு என்றுமே பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளது.

மூவொரு இறைவன் நாம் வணங்குவதற்குரிய மறைபொருள் மட்டுமல்ல, மாறாக நமது அன்றாட வாழ்வில் பின்பற்ற வேண்டிய மறைபொருளாவார். தந்தை தமது மகனை முழுமையாக அன்பு செய்து, அவருக்கு தம்மை முழுமையாக கையளிக்கிறார். அவ்வாறே மகனும் தந்தையை அன்பு செய்து தம்மை முழுமையாக கையளிக்கின்றார். இவர்களது பரஸ்பர அன்பிலிருந்து பிறந்தவர் தான் தூய ஆவியார்.

# பொன் விழா காணும் பாலையூற்றே…!

வந்தோரை வரவேற்று வளமுடன்
வாழவைத்த பாலையூற்றே
பார்போற்றும் தாயவளே
ஏழை எளியோரை தேற்றிய
கதையும் சொல்லும் பாலையூற்று – நீ

கானகமான காடுகளும்
கல்லும் முள்ளும் நிறைந்த
தரையுமானாய் அன்று – இன்றோ
பல சவால்களையும் இன்னல்களையும்
வெற்றியின் முன்னேற்றங்களையும்
தந்ததையெண்ணி வியக்கின்றோமே

பாலையூற்றே நீ யாத்திரைத் தலமானதும்
இம்மண்ணின் மாந்தருக்குப் பெருமையே
அன்னையே இயற்கையில் பதி கொண்டு
புதுமைகளாலும் அற்புதங்களாலும்
உள்ளங்களை கொள்ளை கொண்டவளே
பாலையூற்றுக்கு நீர் தந்த சிறப்பன்றோ

பல கோடி மக்களின் வாழ்வில்
அழகாய் கலந்திட்ட அன்னையே
அகரமும் னகரமுமாய் ஆனீரே
பாலையூற்று மாதா என்னும்
பெயர் கொண்டு இம்மண்ணிற்கு
பலகோடி ஆசீரும் தந்தீரன்றோ

பாலையூற்றே உன் இல்லத்தில்
மூன்று தசாப்தங்கள்
அமலமரிகளின் பணிக்காலங்களில்
அன்னையின் துணைகொண்டு
ஆன்மீகத்தையும் அன்புறவையும் கட்டியதே
பணியின் ஊதியமாம் இன்று மக்களின் வளர்ச்சியே

பாலையூற்றே நீ இயற்கை அழகோடு
வெள்ளிடைமலையென தந்த கொடையன்றோ
ஆன்மீக வளர்ச்சியும் குருத்துவ உருவாக்கமும்
பணிகளின் மகத்துவமே – இன்று
பொன்விழாவும் வந்ததே நாம்
நன்றி உணர்வோடு வாழ்த்துகின்றோம்

தாகத்தோடு வருவோரையும்
தாகம் தீர்ப்பீர் நீரே
அன்னையவள் நீயின்றி
இம்மண்ணிற்கு சிறப்பில்லையே
பொன்விழா காணும் பாலையூற்றே
வாழ்க வளமுடன் என வாழ்த்துகிறோம்.

***ஆக்கம்: சுபாஷினி குலராஜசிங்கம்***
***பாலையூற்று***

# குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

குடும்பம் அங்கம் 96

***பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா***
***உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.***

# திருமணம் என்பது இறை அழைத்தலாகும்



குருத்துவம், துறவறம் மட்டும் அழைத்தலில்லை திருமணமும் இறை அழைத்தலாகும். என்னை மற்றவரிலிருந்து பிரித்தெடுத்து இறைவன் எனக்கு ஓர் துணையைத் தருகிறார். எனது ஆன்மாவை மட்டும் மீட்பதற்காக அல்ல. நான் அவ்வாறு சுயநலத்தில் செயற்படாது எனது குடும்பம், எனது குழுமம், எனது பங்கு என மற்றவர்களையும் புனித நிலையில் அழைத்துச் செல்ல வேண்டும்.

“நான் பசியாய் இருந்தேன் எனக்கு உணவு தந்தாயா?..... ” என்ற வாசகம் எமக்கு இதையே உணர்த்துகிறது. இதற்குப் பதில் கொடுப்பதிலே எம மீட்பு உள்ளது. மக்களைப் பரிசுத்த நிலைக்கு அழைத்துச் செல்லாது அவர்களுக்கு இறைவார்த்தையைக் கொடுக்காது ஒருவர் வாழ்ந்தால் அதுவே அவர் செய்யும் பாவமாகும். என்னால் என்ன செய்ய முடியும் என்று ஒதுங்கியிருப்பதல்ல. எனது தகுதியின்மையே எனது தகுதியாகும். இறைவனின் உடனிருப்பே எனது கையிருப்பாகும். குருக்கள், துறவியர், பொதுநிலையினர் அனைவருக்கும் இந்த அழைத்தல் உள்ளது. அரச, குருத்துவ இறைவாக்காளராக வாழ அழைப்புள்ளது.

பொதுநிலையினருக்கு திருமணத்தினூடாக விசேட நிலையுள்ளது. ஞானஸ்நான அழைத்தலில் வாழ்வதே திருமணத்தின் முக்கிய நோக்கமாகும். இறைவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும் என்று கூறுகிறார். இருவரையும் இறைவன் இணைக்கின்றார். இருவரையும் இறைவன் ஏன் இணைத்தார்? இது இன்று பலருக்குப் புரிவதில்லை. தாம் பெற்றெடுக்கும் பிள்ளைகளை அன்பில் வளர்க்க வேண்டும். “நான் உங்களை அன்பு செய்ததுபோல் நீங்களும் ஒருவர் ஒருவரை அன்பு செய்ய வேண்டும் என்கிறார் ஆண்டவர்.

இறைவன் இருவரையும் அழைத்தார். பிரித்தெடுத்தார். தொ.நூ 2:24இல் கூறப்பட்டப்படி தாய் தந்தையை விட்டு பிரித்தெடுத்தார். அவர் பிரித்தெடுக்கும்போது அதற்கு ஆயத்தமாக பெற்றோரும், திருமணம் முடிக்கும் தம்பதியினரும் இருக்க வேண்டும். கைவிடவும், பிரிந்து வரவும் தம்பதியினர் ஆயத்தமாக இருக்க வேண்டும். அவர்களுக்குத் தூதுச் சேவையை இறைவன் கொடுக்கின்றார். ஞானஸ்நானத்தில் வாழ்வதே அவர்களுக்குக் கொடுக்கப்படும் தூதுச்சேவைச் செய்ய சக்தியும் கொடுக்கின்றார். இருவருக்கும் பல குறைபாடுகள் இருந்தாலும் இறைவன் உதவுவார். நாம் அப்படி வாழாமல் முரண்டு பிடித்தால் இறைவனை விட்டுத் தூரமாகிவிடுவோம். ஏனைய மக்களைப் பரிசுத்தம் ஆக்குவதற்காக இறைவார்த்தையைக் கொடுக்க எம்மை அழைக்கின்றார். இறைவன் எம்மோடு இருந்து எம்மை வழிநடத்துவார். ஆபிரகாமுடன் உடனிருந்தார். எசாயா, எரேமியா போன்ற தீர்க்கதரிசிகளுடன் உடனிருந்தார். தேவதாயார் சூசையப்பருடன் உடனிருந்தார். எம்முடனும் உடனிருக்கிறார். அவரது உடனிருப்பே எமது கையிருப்பு.

***தொடரும்...***

# உலகை மாற்றும் வரம் தா!

Sufi என்ற ஆழ்நிலை தியான வழியில் சிறந்த Bayazid Bastami அவர்கள், தன் வாழ்வில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்களை இவ்வாறு விவரித்துள்ளார்: புரட்சிகளை அதிகம் விரும்பிய இளைஞனாய் நான் இருந்தபோது, “கடவுளே, உலகை மாற்றும் வரம் தா!” என்று இறைவனிடம் வேண்டினேன். நடுத்தர வயதை அடைந்தபோது, என் செபம் சிறிது மாறியது: “கடவுளே, என் குடும்பத்தினரை, நண்பர்களை, என்னைச் சுற்றியுள்ளவர்களை மாற்றும் வரம் தா!” என்பது என் செபமானது. இப்போது வயது முதிர்ந்த நிலையில், என் இறுதி நாட்கள் எண்ணப்பட்டுள்ளன என்பதை உணர்கிறேன். இப்போது நான் வேண்டுவது ஒன்றே... “கடவுளே, என்னையே நான் மாற்றிக்கொள்ளும் வரம்தா!” என்பதே என் இப்போதையச் செபம். இந்த செபத்தை நான் ஆரம்பத்திலிருந்தே வேண்டியிருந்தால், என் வாழ்வு எவ்வளவோ மாறியிருக்கும். என்னைச் சுற்றியிருந்தவர்கள் மாறியிருப்பர். இந்த உலகமும் மாறியிருக்கும்.

**“உலகில் நீ காண விழையும் மாற்றம் உன்னிடம் முதலில் தொடங்கவேண்டும்” என்று சொன்னவர் மகாத்மா காந்தி. மாற்றங்களின் ஆரம்பம்... உலகமா, உள்ளமா?**




## ஆண்டவரின் விண்ணேற்பு விழா - 17.05.2015

**வாசக விளக்கம்:** "இவ்வுலகில் வாழும் நாம் அனைவரும் விண்ணகத்திற்காகப் பிறந்தவர்கள் இதைத்தான் கிறிஸ்துவின் விண்ணேற்பு விழா நமக்கு உணர்த்துகின்றது. நாம் அனைவரும் கடவுளின் மீட்புத் திட்டத்தை அறிந்து கொள்ள வேண்டும். இன்றைய முதல் வாசகம் ஆண்டவர் இயேசு விண்ணேற்றம் அடைந்தது பற்றியும், தூய ஆவியைப் பற்றிய வாக்குறுதியையும் விபரிக்கின்றது. இரண்டாம் வாசகம் கிறிஸ்து உயிர்த்த பின்பு கடவுளுடைய மகிமையில் பங்குபெற விண்ணேற்றம் அடைந்தார். கிறிஸ்து கடவுளுக்கு ஏற்புடையவராததால் கடவுள் அவரை எப்பெயருக்கும் மேலாக உயர்த்தினார் என விளக்குகின்றது. நற்செய்தியில் இயேசு எவ்வாறு உயிர்த்த 40 நாட்களுக்குப் பிறகு விண்ணகம் சென்று தந்தையின் வலப்பக்கத்தில் அமர்ந்திருக்கிறாரோ, அவ்வாறே நாமும் ஒருநாள் ஆன்மாவோடும் உடலோடும் விண்ணகம் செல்வோம் என்றும், விண்ணகம் நமது தாய் நாடு அங்கிருந்து நாம் வந்தோம் அங்கேயே நாம் செல்வோம் இயேசுவுடன் என்றும் மகிழ்ந்திருப்போம் என்பதையும் விளக்குகின்றது. இதற்கு நாமும் திருத்தூதர்களைப் போன்று நற்செய்தியின் தூதர்களாய் செயல்பட வேண்டும் இதற்கு வேண்டிய அருளை இரந்து மன்றாடுவோம்.

**முதல் வாசகம் : தி.ப 1:1-11**

எங்கள் கண்கள் முன்பாக இயேசு மேலே எடுத்துக் கொள்ளப்பட்டார்.

**பதிலுரைப்பாடல்**

எக்காளம் முழங்கிடவே உயரே ஏறுகின்றார் ஆண்டவர்

**இரண்டாம் வாசகம் : எபேசி 4:1-13**

கிறிஸ்துவிடம் காணப்பட்ட நிறைவை பெறும் அளவுக்கு நாம் முதிர்ச்சியடைவோம்.

**நற்செய்தி வாழ்த்தொலி**

அல்லேலூயா அல்லேலூயா நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள். இதோ உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன் என்கிறார் ஆண்டவர் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : மாற்கு : 16:15-20**

### விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவரும் விண்ணகத்திற்காகப் பிறந்தவர்கள் என்பதை உணர்ந்து விண்ணக பயணத்தில் எம்மை வழிநடத்தும் தூய திருச்சபையின் தலைவரான திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரும் திருச்சபையின் கருவிகளாக என்றும் செயல்பட வரமருள வேண்டுமென்று...

இயேசுவின் விண்ணேற்பு நமது விண்ணேற்பின் முன் அடையாளம் என்பதை உணர்ந்து நற்செய்தியை நம்பவும், அதனை அறிவிக்கவும் அதன்படி வாழவும் திருத்தூதர்களைப் போல் தூதர்களாக மாறவும் வேண்டிய அருட்கொடைகளைத் தந்தருள வேண்டுமென்று...

திருவருட்சாதனங்கள் வழியாக எப்பொழுதும் நம்முடனே இருக்கும் இயேசுவின் பிரசன்னத்தை உணர்ந்தவர்களாக இயேசுவின் மதிப்பீடுகளால் நிறைந்து அடுத்த மனிதரை அன்பு செய்யவும், மன்னிக்கவும் புரிந்து கொள்ளவும் வேண்டிய மனப்பக்குவத்தை தந்தருள வேண்டுமென்று...

## தூய ஆவி பெருவிழா - 24.05.2015

**வாசக விளக்கம்:** மனிதனை இயங்க வைப்பது மூச்சுக் காற்று. அதைப்போல் திருச்சபையை இயங்க வைப்பது தூய ஆவி. இன்று தூய ஆவியின் பெருவிழாவாகிய பெந்தகோஸ்தே நாளை கொண்டாடுகின்றோம். பெந்தகோஸ்தே எனும் திருவிழா யூதர்களின் 10 கட்டளை கொடுத்த நாளினையும் அறுவடைத் திருவிழாவையும் உள்ளடக்கியதாகும். இந்நாளில் தான் தூய ஆவியார் சீடர்களின் மீது பொழியப்பட்டு புதிய கட்டளையாகிய அன்புக் கட்டளையால் அவர்களை நிரப்புகிறார். இன்றைய முதல் வாசகத்தில் அச்சத்தினால் ஓர் அறையில் தங்கியிருந்த சீடர்கள் தூய ஆவியின் வருகையினால் புது வாழ்வையும், வலிமையையும், புது ஆற்றலையும் பெறுவதை விளக்குகின்றது. பிளவுபட்டிருந்த கொரிந்து நகர் கிறிஸ்தவர்களுக்கு உடலின் உவமையை பயன்படுத்தும் பவுல் அடியார் அனைவரும் ஒருமித்து செயல்பட ஒற்றுமையாய் வாழ அழைப்பதை இரண்டாம் வாசகத்தில் காண்கிறோம். நற்செய்தியில் நான் உங்களை திக்கற்றவர்களாக விடமாட்டேன் என்ற வாக்குறுதிக்கேற்ப தூய ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று கூறி சமாதானம், பாவ மன்னிப்பு என்ற கொடைகளையும் சீடர்களுக்கு இயேசு கொடுப்பதையும் விபரிக்கின்றது. இன்று எமது வாழ்க்கையில் தூய ஆவியார் செயல்படுகிறாரா? சிந்திப்போம்.

**முதல் வாசகம் : தி.ப 2:1-11**

தூய ஆவியின் தூண்டுதலால் அவர்கள் ஒவ்வொருவரும் பேசத் தொடங்கினார்கள்.

**பதிலுரைப்பாடல்**

ஆண்டவரே உம் ஆவியை அனுப்பி, மண்ணகத்தின் முகத்தை புதுப்பிக்கின்றீர்.

**இரண்டாம் வாசகம் : 1கொரி 12:3-7,12-13**

நாம் எல்லாரும் ஒரே தூய ஆவியால் ஒரே உடலாய் இருக்கும்படி திருமுழுக்கு பெற்றோம்.

**நற்செய்தி வாழ்த்தொலி**

அல்லேலூயா அல்லேலூயா தூய ஆவியே எழுந்தருளி வாரும் உம்மில் நம்பிக்கை கொண்டோரின் இதயங்களை நிரப்பியருளும். அவற்றில் உமது அன்பின் தீ பற்றியெரியச் செய்தருளும். அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : யோவா 20:19-23**

### விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

எம்மை இயங்க வைக்கும் மூச்சுக்காற்றைப் போன்று திருச்சபையை இயங்க வைக்கும் தூய ஆவியின் பெருவிழாவை கொண்டோடும் இந்நன்நாளிலே திருச்சபையை துணிவோடு வழிநடத்தும் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள் துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவர் மேலும் உம் ஆவியை பொழிந்தருள வேண்டுமென்று...

மொழிகளை கடந்து அனைவராலும் புரிந்து கொள்ளக் கூடிய அன்பு மொழியை இதயத்தில் ஏற்று ஆள்வோரும் ஆளப்படுவோரும் அன்பின் பாதையில் வழிநடத்தும் அனைரும் ஒரே நாட்டின் பிள்ளைகள் என்பதை உணர்ந்து, பேதங்கள், பிரிவினைகள் இல்லாப் புதிய சமுதாயம் மலரப்பாடுபட வேண்டிய நல்மனதை தந்தருள வேண்டுமென்று...

பத்துக் கட்டளைகளை கொடுத்த நாளையும் விளைச்சலின் முதற்கனிகளை இறைவனுக்கு அர்ப்பணிக்கும் அறுவடைத் திருவிழாவையும் இணைக்கும் பெந்தகோஸ்து எனப்படும் இன்றைய நாளிலே ஏழைகள், நோயாளிகள், துன்புறுவோர், ஒடுக்கப்பட்டோர் ஆகிய அனைவர் மீதும் உமது ஆவியைப் பொழிந்தருள வேண்டுமென்று...

## மூவொரு கடவுள் பெருவிழா (31.05.2015)

**வாசக விளக்கம்:** மூவொரு இறைவனின் விழாவானது திருச்சபையின் கோட்பாட்டுவிழா மட்டுமன்றி தந்தை மகன் தூய ஆவி என்ற மூவொரு கடவுளுக்கு எடுக்கின்ற விழா. சிலுவை அடையாளமானது நமது விசுவாசத்தின் அடையாளமாக இருக்கின்றது. நாம் அனைவரும் கிறிஸ்து இயேசுவில் தந்தையாகிய கடவுளின் பிள்ளைகள் என்பதும் தூய ஆவியின் நட்புறவால், இணைக்கப்பட்டவர்கள் என்பதும், சிலுவை அடையாளத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது. மூவொரு இறைவன் எல்லாவற்றிலும் ஒரே மாதிரியாக இருக்கின்றார்கள். ஒரே வல்லமை ஒரே சித்தம் ஒரே ஞானம் கொண்டிருப்பதால் மூவராக இருந்தாலும் ஒருவரே. இவர்கள் மூவரையும் இணைப்பது அன்பு மட்டுமே இன்றைய முதல் வாசகமும், மூன்றாம் வாசகமும் கடவுளின் மும்முனை வெளிப்பாட்டை வெளிப்படுத்துகின்றன. நமது குடும்பங்களிலும் அன்பு இணைக்கும் பாலமாக இருந்தால் பல நபர்களாக இருந்தாலும் ஒரே குடும்பமாக இருப்போம் இதற்கு வேண்டிய அருளை வேண்டி பலியில் இணைவோம்.

**முதல் வாசகம் : இ.ச 4:32-34,39-40**

மேலே விண்ணிலும், கீழே மண்ணிலும் ஆண்டவரே கடவுள்

**பதிலுரைப்பாடல்**

ஆண்டவர் தம் உரிமைச் சொத்தாக தெரிந்தெடுத்த மக்கள் பேறு பெற்றோர்

**இரண்டாம் வாசகம் : உரோ 8:14-17**

கடவுளின் பிள்ளைகளுக்குரிய மனப்பான்மையையே பெற்றுக்கொண்டீர்கள்

**நற்செய்தி வாழ்த்தொலி**

அல்லேலூயா அல்லேலூயா இருந்தவரும், இருக்கின்றவரும், வரவிருக்கின்றவரும், எல்லாம் வல்லவருமான கடவுள் தந்தை மகன் தூய ஆவிக்கு மகிமை உண்டாகுக அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : மத் 28:16-20**

### விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

மூவொரு இறைவன் என்ற கோட்பாட்டின் வழி நின்று திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள் துறவியர், இறைமக்கள் ஆகிய அனைவரும் தந்தை மகன் தூய ஆவியினால் வழிநடத்தப்பட அருள்புரிய வேண்டுமென்று...

மூவொரு கடவுளிடம் விளங்கிய அன்புறவும், ஒற்றுமையும், குடும்ப உணர்வும், எமது குடும்பங்களிலும், நாட்டிலும், ஓங்கி வளரவும் மக்கள் அனைவரும், ஒரே குடும்பம் என்ற முறையில் பிளவு படாத மனநிலையுடன் அனைவரும் வாழவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

அருட்சாதனங்கள் வழியாக எம்முள் வாசம் செய்யும் மூவொரு இறைவனிடம் விளங்கும் அன்பும், ஒற்றுமையும் புரிந்துணர்வும், சமாதானமும் எம்மிலும் எமது குடும்பங்களிலும் வளரவும் அதனால் எமது விசுவாசம் பாதுகாக்கப்படவும் வரமருள வேண்டுமென்று...

## இது மறைசாட்சிகளின் நேரம்
## பாத்திமா அன்னை



இக்காலத்தில் விழிப்புடன் ஆவிக்குரிய வாழ்வு வாழ வேண்டும் என்பதற்காகவும் பாத்திமா மூன்றாம் இரகசியத்தை வெளியிட்ட திருத்தந்தை பாத்திமா அன்னை திருநாளையும் ஏற்படுத்தினார்.

பாத்திமாவில் அன்னை மரியா அளித்த 6 காட்சிகளிலும் தினமும் செமாலை செபிக்கவும், பாவிகள் மனந்திரும்ப பரிகாரம் செய்யவும், ரஷ்யாவை தம் மாசற்ற இருதயத்துக்கு திருத்தந்தையும், ஆயர்களும், ஒரே தருணத்தில் அர்ப்பணிக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார். இல்லாவிடில் பல நாடுகள் அழிக்கப்படும் என்றும் திருத்தந்தை அதிகம் துன்புற நேரிடும் என்று எச்சரிக்கை விடுத்தார். பாத்திமா மூன்றாம் இரகசியத்தை 1960 க்குள் திருத்தந்தை உலகிற்கு அறிவிக்க வேண்டும் என்றும் பாத்திமா காட்சிகள் பெற்ற அருட்சகோதரி லூசியா வழியாக அன்னை வெளிப்படுத்தினார். 2000இல் மூன்றாம் இரகசியம் வெளிப்பட்டது.

ஆனி மாதம் 26, 2000 அன்று மாபெரும் ஜூபிலி ஆண்டு கொண்டாட்டத்தின் ஒரு முக்கிய நிகழ்வாக "என் இரகசியத்தின் திருத்தந்தை" என்று அன்னை மரியாவால் அழைக்கப்பட்ட புனித இரண்டாம் ஜோன் போல் ஆணையிட வத்திக்கான், பாத்திமாவில் அன்னை அருளிய மூன்றாம் இரகசியத்தை உலகிற்கு வெளியிட்டது. மேலும் 2002ஆம் ஆண்டு திருத்தந்தை புனித இரண்டாம் ஜோன் போல் அவர்கள், மே 13ஆம் நாளை பாத்திமா அன்னையின் திருநாளாக அறிவித்தார். விண்ணக தந்தையின் நெஞ்சத்தில் மறைந்திருக்கும் இரகசியங்களை அறிந்திருக்கும் தந்தையின் திருமகளும் திருச்சபையின் அன்னையுமான கன்னி மரியா, தந்தையின் அனுமதி பெற்று, 1917ஆம் ஆண்டில் உலகிற்கு வந்து பாத்திமாவில் செய்திகள், இரகசியங்கள் அருளினார்.

இன்றையக் காலக்கட்டத்தில் திருச்சபைக்கு ஓர் இன்றியமையாத தீர்க்கதரிசனமாக இருப்பதைக் குறிக்கும் வகையிலும் மிகவும் முக்கியமாக நாம்

»» தொடர்ச்சி 15ம் பக்கம் »»

# இம்மாதம் முழுவதும் அன்னையோடு

## வைகாசி 05
### ஆராதனையின் புனித கன்னிமரியாள்
### ஃபிவிஸானோ, இத்தாலி (1596)

ஃபிவிஸானோ என்ற ஒரு சிறிய நகரத்தில் மார்கரேட் என்ற ஒரு எளிமையான பெண், சாதாரணமான ஒரு அன்னையின் எளிய வாழ்க்கையை வாழ்ந்து வந்தார். தீடிரென அவர் நோய்வாய்ப்பட, அந்த நோய் என்னவென்று மருத்துவர்களால் கண்டுபிடிக்கமுடியாததால், 18 ஆண்டுகள் படுக்கையிலேயே காலம் கழித்த அவருக்கு அந்நோயிலிருந்து விடுபடுவோம் என்ற நம்பிக்கை வற்றிப்போனது. 1596 வைகாசி 5ம் திகதியன்று, மடோனா டெல்லா கியாரா என்ற பெயர் கொண்ட அன்னையின் அற்புதமான திருவுருவம் ஒன்றை கொண்டுவருவதாக மார்கரேட்டின் நண்பர் ஒருவர் வாக்குறுதி அளித்திருந்தார்.




ஆனால், அந்த நண்பர் அன்னையின் திருவுருவத்தைக் கொண்டுவர மறந்துவிட்டார். ஏமாற்றமும், ஏக்கமும் மனதில் நிறைந்து, கண்களை உயர்த்தி மார்கரேட் மேலே பார்த்தபோது, அவர் விரும்பிய அன்னை அங்கு காட்சியாய் தோன்றினார். அன்னையின் தரிசனம் கிடைத்த உற்சாகப் பெருக்காலும் நன்றியுணர்வாலும் மகிழ்ச்சியோடு அவர் கூச்சலிட, அந்த தருணமே அவர் குணமடைந்தார். இந்த செய்தியானது அந்நகரமெங்கும் பரவியது. பின்னர் அங்கு "ஆராதயையின் புனித கன்னிமரியாள்" என்ற பெயரில் ஒரு திருத்தலம் கட்டப்பட்டது.

## வைகாசி 06
### அருளின் அன்னை
### பியோவி டி சாக்கோ, இத்தாலி (1631)

நான்கு நூற்றாண்டுகளாக வெனிஸ் ஆளுகையின்கீழ் இருந்த பியோவி டி சாக்கோ பகுதி மக்களுக்கு இருந்த மிகப்பெரிய பிரச்சினை, அடிக்கடி அங்கு ஏற்பட்ட கொள்ளை நோய் மற்றும் அதன் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புகளும், துன்ப துயரங்களும் தான். 1579ம் ஆண்டில் ஏற்பட்ட கொள்ளை நோய்க்கு படோவாவைச் சேர்ந்த ஏராளமான மக்கள் பலி ஆகினர். 1631ம் ஆண்டு ஏற்பட்ட மற்றொரு கொள்ளை நோய்க்கு படோவா நகரில் மட்டுமே 18,000 நபர்கள் உயிரிழந்தனர். புனித ரோக்கோ ஆலயத்திற்கு மக்கள் திருப்பவனி ஒன்று மேற்கொண்ட போதிலும் இக்கொள்ளை நோயின் பாதிப்புக்கள் நின்றபாடில்லை. மூன்று ஆண்டுகளில் 362 பேர் உயிரிழந்ததாக இறப்பு பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்டிருந்தது.






1631ம் ஆண்டு சித்திரை 26ம் திகதியன்று அன்னை மரியாளின் உதவியைக் கேட்டு மன்றாடுவது என்ற நகராட்சி கவுன்சில் முடிவுசெய்தது. அதன்படி, வைகாசி 6ம் திகதியன்று, அருளின் அன்னை ஆலயத்திற்கு திருப்பவனி ஒன்று நடத்தப்பட்டது. அன்னையின் அருளால் கொள்ளை நோய் நின்றபடியால் ஒவ்வொரு ஆண்டும் அந்த நாளை நினைவுகூர்ந்து மக்கள் இன்றுவரை ஆலயத்திற்கு திருப்பவனியை மேற்கொள்கின்றனர்.

## வைகாசி 07
### மோல்சென்ஸ்கயா அன்னை
### புசிநோவா, ரஷ்யா (17ம் நூற்றாண்டு)

17ம் நூற்றாண்டில், புசின்கா ஆற்றின் வலது கரையிலிருந்த புசிநோவா கிராமத்தில் கண் பார்வையற்ற, திருமணமாகாத ஒரு பெண் வசித்து வந்தார். ஒரு கனவில் இறையன்னை கன்னிமரியாள் அப்பெண்ணுக்குத் தோன்றி, அவளது தாயை அழைத்துக் கொண்டு ஆற்றுக்கு செல்லுமாறு கூறினார். அடுத்த நாளன்று, இறையன்னையின் அறிவுறுத்தல்களை பின்பற்றும் வகையில் அப்பெண் ஆற்றுக்கு சென்று அந்நீரில் கண்களைக் கழுவியதும், பார்வைத்திறனைப் பெற்றார். அதற்கடுத்த நாளன்று மீண்டும் தோன்றி, இறையன்னையின் திருவுருவப்படம் ஒன்றைக் கண்டுபிடிக்க எந்த இடத்தில் தோண்டவேண்டும் என்பதை அன்னை அப்பெண்ணுக்கு காட்டினார். அவ்வாறு கிடைத்த அன்னையின் திருவுரு-வப்படம், அங்கு கட்டப்பட்ட ஒரு ஆலயத்தில் வைக்கப்பட்டது. அங்கு, தோண்டப்பட்ட கிணற்று நீரை பயன்படுத்தி குணம்பெற, ரஷ்யா முழுவதிலுமிருந்து நோயுற்றவர்களும் கை, கால் பாதிக்கப்பட்டவர்களும் அவ்வாலயத்திற்கு வரத்தொடங்கினர்.



## வைகாசி 08
### லூஜானின் கன்னிமரியாள்
### அர்ஜென்டினா (1630)

1630ம் ஆண்டு வாக்கில் போர்ச்சுகலிருந்து புனித கன்னிமரியாளின் திருவுருவச்சிலை ஒன்றை கழுதைகள் பூட்டிய வண்டியில் வைத்து, ஒரு நபர் எடுத்துச் சென்று கொண்டிருந்தபோது லூஜான் ஆற்றின் கரையோரத்தில் அந்த கழுதைகள் முன்னேறிச் செல்லாமல் நின்றுவிட்டன. அங்கிருந்த ஒரு அடிமையிடம் அவர் அதை ஒப்படைத்து சென்றார். நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக அத்திருவுவச்சிலையை பாதுகாப்பாக வைத்திருந்த அந்த அடிமை செங்கற்களால் கட்டப்பட்ட ஒரு ஆலயத்தையும் இதற்காக உருவாக்கினார். அதை தொடர்ந்து ஏராளமான பக்தர்கள் அன்னையின் அருள்வேண்டி இங்கு வரத்தொடங்கினர்.



சில காலம் கழித்து, தற்போது இத்திருவுருவச்சிலை வைக்கப்பட்டுள்ள அமைவிடத்திற்கு அது கொண்டு செல்லப்பட்டது. 1887ம் ஆண்டில் இந்த இடத்தில் ஒரு திருத்தல பேராலயம் அழகுற கட்டப்பட்டது. லூஜான் அன்னை மரியாளை தரிசித்து கௌரவித்த திருத்தந்தையர்களுள் 16ம் கிளெமென்ட், 14ம் கிளெமென்ட், 6ம் பத்திநாதர், 9ம் பதிமூன்றாம் லியோ, 16ம் பத்திநாதர், 12ம் பத்திநாதர் ஆகியோரும் இடம் பெறுகின்றனர். திருத்தந்தை இரண்டாம் ஜான்போல் இத்திருத்தலத்திற்கு நேராக வருகை தந்து அன்னையின் திருவுருவச்சிலை மீது தங்கத்திலான ரோஜா மலரை சூட்டினார்.

## வைகாசி 09
### வனங்களின் மாதா
### இம்பர்சாகோ, இத்தாலி (1617)

பீட்டர் என்ற நபர் உட்பட மூன்று இடையர்கள், உயர்ந்து வளர்ந்திருந்த ஒரு மிகப்பெரிய செஸ்ட்நட் மரத்தின் அருகே அன்னை மரியாளின் உருவத்தைக் கண்டனர். இக்காட்சிக்குப் பிறகு, இவ்வுருவம் மேலெழும்பி வான மேகத்திற்குள் மறைந்து-விட்டதாக அந்த மூவரும் சாட்சியம் அளித்தனர். அந்த செஸ்ட்நட் மரத்தில் மட்டும் பருவம் முடிவடைந்தும் ஏராளமான பழங்கள் இருந்த அதிசயத்தைக் கண்டு, இடையர்களின் சாட்சியத்தை மக்கள் நம்பினர். அன்னை காட்சி வழங்கிய அவ்விடத்தில் 1632ம் ஆண்டில் ஒரு சிற்றாலயம் கட்டப்பட்டது. அதன்பிறகு, 1677ம் ஆண்டில், சிற்றாலயம் இருந்த இடத்தில் ஒரு ஆலயம் உருவாக்கப்பட்டது. "வனங்களின் மாதா" என்று அழைக்கப்படும் அன்னையின் திருவுருவம் இந்த ஆலயத்தில் அழகுற நிறுவப்பட்டிருக்கிறது. அன்னை மரியாள் தந்த நிகழ்வுக்கு இரு ஆண்டுகளுக்கு முன்பாக, அதே இடத்தில் செஸ்ட்நட் மரங்களுக்கு மேலே ஒளிவெள்ளத்தில் ஒரு பெண் காட்சியளித்ததையும் அந்த தரிசனத்தின்போது இனிமையான கீதங்களின் இசை கேட்டதையும் சிலர் பார்த்ததாக தெரிவித்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.



## வைகாசி 10
### ட்ரஸாட் அன்னை
### குரோஷியா (1291)

இஸ்லாமியரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த நாசரேத்திலிருந்து அன்னை மரியாளின் புனித வீட்டை 1291ம் ஆண்டு வைகாசி மாதம் 10ம் திகதியன்று வானதூதர்கள் தூக்கிவந்து ஏட்ரியாட்டிக் கடல் மற்றும் ர்ஜெசினா ஆற்றை எதிர்கொண்டவாறு உள்ள மலை மீது வைத்ததாகவும், 1294ம் ஆண்டில் இத்தாலியில் உள்ள லொரேட்டோ நகருக்கு மீண்டும் அற்புதமான வழியில் அது கொண்டு செல்லப்படும் வரை அங்கிருந்ததாகவும் பாரம்பரிய கதைகள் கூறுகின்றன.

1367ம் ஆண்டின், இரக்கத்தின் அன்னையான கன்னிமரியாள் குழந்தை இயேசுவுக்கு பாலூட்டுவதாக தீட்டப்பட்ட ஒரு ஓவியத்தை திருத்தந்தை ஐந்தாம் அர்பன், ட்ரஸாட் திருத்தலத்திற்கு வழங்கினார். இந்த ஓவியம் நற்செய்தியாளர்களுள் ஒருவரான புனித லூக்காவால் வரையப்பட்டதாக நம்பப்படுகின்றது. 1715ம் ஆண்டில், திருத்தந்தையால் இத்திருவோவியம் முடிசூடப்பட்டது. இத்தாலி நாட்டுக்கு வெளியே திருத்தந்தையால் முடிசூட்டப்பட்ட முதல் புனித ஓவியம் இதுவே ஆகும். வைகாசி 19ம் திகதி கொண்டாடப்படுகின்ற திருநாளின்போதும், ஆவணி 15ம் திகதி அன்னையின் விண்ணேற்பு திருநாளின்போதும் "ட்ரஸாட் அன்னை" திருப்பவனியில் கோலாகலமாக எடுத்துச் செல்லப்படுகிறார். 1930ம் ஆண்டில், திருத்தந்தை இந்த ஆலயத்தை சிறிய பசிலிக்காவாக உயர்த்தினார்.



## வைகாசி 11
### பாறையின் மாதா
### கலாப்பிரியா, இத்தாலி (1968)

இத்தாலியின் மிக வறுமையான பிராந்தியங்களுள் ஒன்றான கலாபிரயாவின் சாண்டா டொமினிகா டி பிளாகானிகா என்ற கிராமத்தைச் சேர்ந்த ஃப்ராகோமெனி என்பவர், 1968ம் ஆண்டு வைகாசி 11ம் திகதியன்று, ஒரு பாறை மீது நின்றவாறு இறையன்னை தனக்கு தரிசம் அளித்ததாக அக்கிராமத்தின் குருவாக ரோக்கோ கிரிகோரஸிடம் தெரிவித்தார். மக்களை கடவுளோடு நெருக்கமான உறவுகொள்வதற்காக அந்தப் பள்ளத்தாக்கு முழுவதையுமே அன்னையின் திருத்தலமாக மாற்றியமைக்குமாறு, கன்னிமரியாள் காசிமோவை கேட்டுக்கொண்டார். காசிமோ ஒரு சிற்றாலயத்தைக் கட்டி அதனை "பாறையின் மாதா" ஆலயம் என அழைத்தார். தரிசனம் நிகழ்ந்த பாறையின் மீது பளிங்கால் செய்யப்பட்ட அன்னையின் திருவுருவச் சிலை ஒன்றையும் அவர் வைத்தார். அதிகாரப்பூர்வ ஒப்புதல் இத்தரிசன நிகழ்வுக்கு வழங்கப்படவில்லை என்றபோதிலும் 2007 மார்கழி 8ம் திகதி இத்திருத்தலத்தை, ஒரு அதிகாரபூர்வ திருத்தல ஆலயமாக அறித்ததன் வழியாக அன்னை மீதான விசுவாச பக்தி முயற்சிகளுக்கு உள்ளூர் ஆயர் வணக்கத்திற்குரிய மொரோசினி ஒப்புதல் வழங்கினார்.



## வைகாசி 12
### கிறிஸ்தவர்களின் சகாயமான மாதா
### ப்ரா, இத்தாலி (1874)

1874 வைகாசி 12ம் திகதியன்று வின்சென்சோ ஸ்கோசியரா (வயது 12) மற்றும் ஏஞ்சலா பெருட்டி (வயது 13) என்ற ஆடு மேய்க்கும் சிறார்களுக்கு வணக்கத்திற்குரிய கன்னிமரியாள் காட்சியளித்தார். தரையிலிருந்து மேலெழும்பிய நிலையில் ஒரு மேகத்தின் மீது பழுப்பு நிற ஆடையும் முக்காடும் அணிந்தவராக ஒரு பெண் தோன்றி தன்னருகே நெருங்கிவருமாறு அழைப்பதை ஏஞ்சலா முதலில் பார்த்தாள். வின்சென்சோ அவ்விடத்திற்கு வந்தபோது நீலநிற ஆடை அணிந்தவராக அன்னையைக் கண்டு அச்சம் மேலிட வீட்டை நோக்கி ஓடினான். மக்தலேன் ஒலிவியரி மற்றும் தெரசா பர்நெங்கோ (வயது 36) என்பவர்கள் உட்பட வேறு சிலரும், ஏஞ்சலா பார்த்த அதே தோற்றத்தில் அன்னையின் தரிசனத்தைக் கண்டனர். ஐப்பசி 25ம் திகதியன்று 13 வயதான மரியா பெகல்லோ என்ற சிறுமி கருப்புநிற ஆடை அணிந்தவராக கன்னிமரியாவைக் கண்டார். ஒரு ஆலயம் கட்டப்பட தான் விரும்புவதாக அன்னை தெரிவித்ததன் பேரில், ஃபெர்லினோ அரச நிர்வாகிகளின் எதிர்ப்பையும் மீறி அன்னை தரிசனம் அளித்த இடத்தில் ஒரு ஆலயம் கட்டப்பட்டது.



# 49வது உலகத் தொடர்பாடல் தினம் – 2015

இவ்வருடத்திற்கான உலக தொடர்பாடல் தினம் இம்மாதம் 17ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதாவது இயேசு விண்ணேற்பு அடைந்த தினம் கொண்டாடப்படுகிறது. இன்றைய நாளில் இயேசுவின் கட்டளையான

**“உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்”**

என்பதைச் சிந்திக்க, எம் வாழ்வில் நிறைவேற்ற அழைக்கப்பட்டுள்ளோம். உலகத்தோடு தொடர்பு கொள்ள முக்கியமானதாக இருப்பது உலக தொடர்புச் சாதனங்கள். இதன் மூலம் ஒரு மனிதனுடைய வாழ்வின் எல்லாப்பக்கங்களையும், திருச்சபையின் எல்லா தொடர்பாடல்களையும் செய்தியாக இன்றைய தேவைக்கேற்ப வெளிப்படுத்த வேண்டிய அழைப்பு எம் ஒவ்வொருவருக்கும் கிடைத்துள்ளது.



## இவ்வருடத்தின் தொடர்பாடல் தினத்தின் தொனிப்பொருள்

## “குடும்பத்தோடு தொடர்பாடல்”

## *'Communicating the Family"*

“குடும்பத்தோடு தொடர்பாடல்” அன்பே உருவான கடவுளைச் சந்திக்க ஏதுவான ஒரே இடம் குடும்பம்தான்.

இத்தொடர்பாடல் தினம் பற்றி எமது திருத்தந்தை பிரான்சிஸ் தனது செய்தியை தை மாதம் 24ம் திகதி எழுத்தாளர்களின், பத்திரிகையாளர்களின் பாதுகாவலரான புனித பிரான்சிஸ் டி சேல் அவர்களின் திருநாள் அன்று வெளியிட்டார். அச்செய்தியில்

**“எங்களை வழிநடத்தும் இந்த உறவின் அனுவமானது, மிகவும் அடிப்படையான தொடர்பாடல் வடிவமான செபம் கையளிக்கப்படும் அமைவிடமாக எமது குடும்பங்களை மாற்றியமைக்கின்றது” அன்பின் தெய்வத்தைச் சந்திக்கின்ற வரப்பிரசாதமான இடம்.**

குடும்பம் என்பது திருச்சபையின் ஆழமான சிந்தனைக்குரிய வியடமும், சமீபத்திய வழமைக்கு மாறான ஆயர் மன்றம் மற்றும் அடுத்த ஐப்பசியில் நடக்க ஏற்பாடாகியிருக்கும் வழமையான ஆயர் மன்றம் ஆகிய இரண்டினதும் படிமுறை சம்பந்தப்பட்டதுமாகும். எனவே அடுத்த உலக தொடர்பாடல் தினத்திற்கான கருப்பொருள் குடும்பம் என்பதைத் தனது கருத்துக் குவிமையமாகக் கொண்டமைதல் பொருத்தமாகவிருக்கும் என்று நான் யோசித்தேன். எல்லாவற்றையும் விட குடும்பம் என்கின்ற பின்னணியில்தான் நாம் எப்படி தொடர்படுவது என்பதைக் கற்றுக் கொள்கின்றோம்.



இந்த அடிப்படையில் கருத்தைக் குவிப்பதானது எமது தொடர்பாடலை மேலும் உண்மையுள்ளதும், மனிதத் தன்மை கொண்டதுமாக அமைக்க உதவும் அதே சமயம் எங்கள் குடும்பத்தைப் புதிய கண்ணோட்டத்துடன் நோக்கவும் உதவும்.

குடும்பங்கள் சமுகத்திற்கு இடைஞ்சலான ஒன்றாக இருப்பதைத் தவிர்த்து இன்றைய குடும்பங்கள் சமுகத்திற்கு தேவையான ஒரு வளமாக, எடுத்துக்காட்டாக இருக்கின்றது என்பதை இறைமக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும் என்றும் அத்தோடு குடும்பங்கள் இயேசுவின் அன்புக்கும், இரக்கத்திற்கும், ஒற்றுமைக்கும், பகிர்ந்து வாழும் தன்மைக்கும் முன்னுதாரணமாகத் திகழ வேண்டும் என்றும் அழைப்பு விடுத்திருக்கின்றார்.

மேலும் நாம் வாழும் உலகில் நாம் பயன்படுத்தும் மொழியானது, வார்த்தையானது சில வேளைகளில் எமது தொடர்பாடலுக்கு குந்தகம் விளைவிப்பதாக இருக்கின்றது. இதனால் மனக்கசப்புக்கள், பகைமை உணர்வுகள், பழிவாங்கும் எண்ணங்கள், வெறுப்பு மனப்பான்மைகள் வளர்ந்துள்ளன. அதைவிடக் கூடுதலான எமது ஓய்வு நேரங்களை தேவையற்ற தொடர்பாடல்களில் ஈடுபடுத்துகின்றோம். இதனால் எமது மனித சமுதாயம் குழப்பமடைந்து காணப்படுகின்றது. இதிலிருந்து விடுபட்டு இன்றைய குடும்பங்கள் ஒரு செய்தியை இன்றைய உலகிற்கு கொடுக்க வேண்டும். அதாவது நமது தொடர்பாடல்கள் எமக்கு அருள்வளங்களாக, ஆசீர்வாதங்களாக என்றும் அமைகின்றது.

எமது தொடர்பாடல் பகைமையை வளர்ப்பதற்கு காரணம் முரன்பாடுகளும், வெறுப்புணர்வுகளும் தான். இதனால் நாம் பெரிய சுவர்களைக் கட்டிக்கொண்டு பகைமை உணர்வோடு வாழுகின்றோம். இதை நிறுத்தி இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைத்து தூ ற்றுவதற்குப் பதிலாக வாழ்த்தவும், ஆசீர்வதிக்கவும், சண்டையிட்டு முரண்படுவதற்கு பதிலாக எல்லோரையும் ஏற்றுக்கொள்ளவும், மற்றவர்கள் எம்மிடம் வரவேண்டும் என்பதற்கு பதிலாக நாம் அவர்களை அடிக்கடிச் சென்று சந்திப்பதன் மூலம் சாத்தானின் செயற்பாடுகளை சாதூரியமாக முறியடித்து நன்மைகள் செய்ய எப்போதும் முடியும் என்பதை எமது குடும்ப அங்கத்தவர்களுக்கு சிறப்பாக பிள்ளைகளுக்கு எடுத்துக்கூறி பகிர்ந்து, ஒன்றிணைந்து மகிழ்வோடு வாழ எமது தொடர்பாடல்களை நன்முறையில் பயன்படுத்துவோம். என்ற திருத்தந்தையின் செய்தியோடு இன்றைய நற்செய்தியும், மறையுரையும் தரும் செய்திகளையும் கருத்திற் கொண்டு சமூகமான நன்மையான தொடர்பாடல்களையும் ஏற்படுத்தி மகிழ்வோடு வாழ்வோம்.



அன்பின் சிறார்களே!

வைகாசி மாதத்தில் நாம் விஷேட விதமாக மரியன்னை பற்றி அறிந்து கொள்வோமா? வைகாசி மாதம் மரியாளுடைய மாதமாக அவளைப் பற்றி நினைவுகூற வேண்டிய மாதமாகவும் காணப்படுகின்றது. மரியாள் போல இறைசித்தம் செய்பவர்களாகவும், கீழ்ப்படிவு, தாழ்மை, ஏழ்மை, கற்பு என்ற பண்புகளைக் கொண்டவர்களாக வாழ நாம் ஒவ்வொருவரும் அழைக்கப்படுகின்றோம்.

உங்களுக்கு மரியாவின் மாசற்ற தன்மை என்றால் என்னவென்று தெரியுமா? எல்லாவிதமான பரிசுத்தமும், கடவுளின் தெரிவிலே தங்கியுள்ளது. இன்று நாம் கொண்டாடும் மரியன்னையின் அமல உற்பவம், அவளது பரிசுத்த தன்மை, மீட்புத் திட்டத்தில் அவள் வகித்த முக்கியமான பங்கிலேயே முழுமையாகத் தங்கியுள்ளது. “நாம் தூயோராகவும், மாசற்றோராகவும் தம் திருமுன் விளங்கும் படி, உலகம் தோன்றுவதற்கு முன்பே கடவுள் நம்மை கிறிஸ்து வழியாகத் தேர்ந்தெடுத்தார்” (எபே 1:4) மரியாள் மீட்புத் திட்டத்தில் தன்னை முழுமையாக அர்ப்பணித்தாள்.

கடவுள் மரியா மீது கொண்டிருந்த முழுமையான, உண்மையான அன்பினால் மரியாவை அவளது தாயின் கர்ப்பத்தில் உருவாகிய கணப்பொழுதிலிருந்து அவளது வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் அருளினால் காத்து வந்தார். ஏனெனில் பரிசுத்த வாழ்வு அவளது தனிப்பட்ட பொறுப்பிலும், சுதந்திரத்திலும் தங்கியிருக்கிறது. ஆனால் அவள் சோதனைகளிலிருந்து முற்று முழுதாக விடுபட்டிருக்கவில்லை.

சிறார்களே, தூய்மை, பரிசுத்தம், கீழ்ப்படிவு என்பது நீங்கள் தெரிந்து கொள்வது. கடவுள் எல்லோரையும் பரிசுத்தமாக, இறை சித்தத்திற்கு கீழ்ப்படிய அழைத்திருக்கிறார். இன்று அடிபணிந்தால் நாளை சந்தோஷமாக, முடிவில்லாத வாழ்விற்கும் இன்பம் காணலாம்.

**வினாக்கள்**

1. மரியாளுடைய அமல உற்பவம் என்றால் என்ன?
2. ஏன் மரியாளுக்கு நாம் மரியாதை செலுத்துகின்றோம்.

(இவ்வினாக்களுக்கு விடையை எழுதி அனுப்புங்கள்)

**ஆக்கம் : ஃபிறிஜுடியா ஸ்ரனிஸ்லோஸ்**
**கிளரேஷியன் அருட்சகோதரி**




# புனித இருபத்தி மூன்றாம் ஜோன்
## குருமடமும் குணநலன்களும் 7



சொல்லில் வடிக்க முடியா அப்பாவின் அனுமதி கிடைத்த மகிழ்ச்சி ஒருபுறம் இருந்தாலும், குருமடத்திற்குக் கொண்டுச் செல்ல தேவையானப் பொருட்களை வாங்கக் காசில்லை என்ற சிந்தனையே ஆஞ்சலோவிற்கும் அவன் தாய்க்கும் ஏற்பட்டது. பணமில்லை என்றால் நாய்கூட திரும்பிப் பார்க்காது என்று சொல்வது எவ்வளவு பொருத்தம்.

தாயும் மகனுமாக அப்போதைய பங்குத்தந்தை பிரான்சிஸ்கோ ரெபுஸீனி (Francesco Rebuzzini) அடிகளாரைச் சந்தித்து உதவி நாடினார்கள். பங்குத்தந்தையோ அவர்களது உறவினர்களைக் கண்டு ஏதாவது நன்கொடை பெற்றுக்கொள்ளச் சொன்னார். சுற்றத்தாரிடமும் சென்றார்கள், விபரத்தைச் சொன்னார்கள். பலனில்லை. அன்று முழுவதும் சுற்றி வந்த தாயின் கரங்களில் கிடைத்தது 2லீரே (Lire)

இதைக்கொண்டு எப்படித் தேவையான பொருட்களை வாங்க முடியும்? என்றெண்ணி ஆஞ்சலோவின் தாய் அழத்-தொடங்கினாள். ஆஞ்சலோவுக்கு ஒன்றும் புரியவில்லை. “ஏனம்மா?” என்று ஆஞ்சலோ கேட்டதற்கு தாய் மௌனமாகவே இருந்தார். தொடர்ந்து வந்த நாட்களில் ஆஞ்சலோவின் திறமை-களைக் கண்ட அருட்தந்தை மொர்லானி அடிகளார் ஆஞ்சலோ குருவாவதற்கு வேண்டிய செலவீனங்கள் அனைத்தையும் பொறுப்பேற்றுக் கொண்டார். அழைத்த ஆண்டவர் தம்மைத் தகுதிப்படுத்துவார் என்ற பேருண்மையை இச்செயல் மூலம் ஆஞ்சலோவும் அவரது குடும்பமும் உணர்ந்து கொண்டனர்.

### 12 வயதில் குருமடம்

ஆஞ்சலோவின் விருப்பத்தை ஆண்டவர் நிறைவேற்றினார். 1892ம் ஆண்டு தனது 12வது வயதில் பெர்காமோ குருமடத்தில் தன்னைப் பயிற்சிக்காக இணைத்துக் கொண்டார். குருமடம் - துறவு வாழ்விற்காக இளவல்களைப் பண்படுத்தும் தளம். உடல் நலம், அறிவுத்திறன், கலைத்திறன், ஆன்மீகம் எனப் பல்வேறு நிலைகளில் குருமாணவர்களை உருவாக்கும் தளம். இத்தளத்தில் எதைக் கற்றுக் கொள்கின்றோம், எப்படிக் கற்றுக்கொள்கிறோம் என்பதைப் பொறுத்தே குருத்துவ வாழ்வு அர்த்தம் மிகுந்ததாக அமையும். குருமடத்தில் சேர்ந்த நாள்முதலே ஆஞ்சலோ பலவற்றைக் கற்றுக் கொண்டார். பிறரிடமிருந்து பலவற்றைப் பெற்றுக் கொண்டார். அவற்றுள் முதன்மையானது “நாள் குறிப்பேடு” எழுதும் பழக்கம். .தொடரும்...

ஒவ்வொரு மாதத்திற்கும் ஒவ்வொரு சிறப்புண்டு. அவற்றுள் மிகவும் சிறப்புடையது வைகாசி மாதம். ஏன் வைகாசி மாதம். அவ்வளவு சிறப்புடையது தெரியுமா? அது தேவமாதாவின் மாதம். தேவதாய் பார் மெச்சும் நாயகனாம் இயேசுவை நமக்களித்த தாய். இந்த தேவதாயைத் தான் நாம் வைகாசி மாதம் முழுவதும் வாழ்த்துகின்றோம்.

*அவளின் உள்ளம் தூய்மை*
*அவளின் எண்ணம் தூய்மை*
*அவளின் வாய்மை தூய்மை*
*அவளின் வாழ்க்கை தூய்மை*
*அவளின் செயல்கள் தூய்மை*

எனவே தூய்மையின் வடிவமாய் திகழும் நம் தேவதாயின் குணங்களை நாமும் பெற தினமும் செபமாலை சொல்லி அவளின் பரிந்துரையைக் கேட்போம்.



ஆவியார் ஆன்மாவைப் பரிசுத்தமாக்குபவர். ஆன்ம தாகத்தை தீர்த்து வைப்பவர். தூய ஆவியானவர் நம்மையெல்லாம் வாழ வைக்கும், வளர வைக்கும் நம் கண்களால் காண முடியாத ஆனால் விசுவாசத்தால் உணரக் கூடிய உயிராற்றல், ஞானத் தீ, அறிவுச் சுடர், உருவாக்கும் சக்தி, கடவுளின் தூய கொடை என்றெல்லாம் தூய ஆவியானவர் அழைக்கப்படுகின்றார்.

### தூய ஆவியின் ஏழு வரங்கள் / இறைவார்த்தைகள்

| | |
|---|---|
| ஞானம் | : மனித அறிவிற்கு அப்பாற்பட்ட இறையறிவு |
| புத்தி | : உண்மைகளைப் புரிந்துக் கொள்ளும் ஆற்றல் |
| அறிவு | : புத்தியைப் பயன்படுத்துவதனால் ஏற்படும் தெளிவு (தி. பா 138) |
| விமரிசை | : விவேகம் மனமிரங்க நம்மைத் தூண்டும் ஆற்றல், பகுத்தறியும் ஆற்றல் |
| திடம் | : துணிச்சல் |
| பக்தி | : மனிதன் கடவுளுக்குச் செலுத்தப்படும் வழிபாடு |
| தெய்வபயம் | : நாம் அன்பு செய்யும் இறைவனின், அயலவரின் மனம் வருந்தும்படி நாம் ஏதாவது செய்து விடுவோமோ என்னும் அச்சம் |




### தூய ஆவியின் அடையாளங்கள்

| | |
|---|---|
| காற்று | : காற்றை காண முடியாது. அதற்கு எல்லைபோட முடியாது. அதுபோல தூய ஆவியானவரை காண முடியாது. எல்லைபோட முடியாது. ஆனால் அதன் செயல்பாட்டைக் கொண்டு உணரமுடியும். காற்றை சுவாசிக்காத மனிதன் செத்த மனிதன் அவ்வாறே தூய ஆவியைக் கொண்டிராத கிறிஸ்தவன் செத்த வாழ்வு வாழ்கின்றான். |
| நெருப்பு | : மேல் நோக்கிச் செல்லாது தேவையற்றதைச் சுட்டெரிப்பது நெருப்பின் இயல்பு. |
| புறா | : தூய ஆவியானவர் புறா வடிவில் வந்திறங்கினார் என்று நற்செய்தி நூல்கள் கூறுகின்றது. புறா கசப்புணர்வற்ற, இனிமையான மனிதத் தன்மையையும், நல்வாழ்வு வாழ்ந்து தூதுரைக்கும் பொறுப்புணர்வையும் அடையாளப்படுத்திக் காட்டுகிறது. |
| தண்ணீர் | : பரிசுத்தப்படுத்துவதன் அடையாளம். தாகம் தீர்ப்பதற்கு அடையாளம். |




விண்ணகம் எப்படி இருக்கும்? என்ற கேள்வி அடிக்கடி எல்லார் மனதிலும் தோன்றுகிறது. அங்கே என்னவெல்லாம் கிடைக்கும்? நல்ல சாப்பாடு கிடைக்குமா? நித்திய காலத்திற்கும், “தூயவர் தூயவர்” என்று பாடிக் கொண்டிருந்தால் போரடிக்காதா? வேறு ஏதும் கலை நிகழ்ச்சிகள் இருக்குமா? என்றெல்லாம் யோசிக்கின்றீர்களா? விண்ணகம் என்றால் என்ன? என்பதற்கு யோவா 14:3 தெளிவாக ஒரு வரையரையைக் கொடுக்கின்றது. அது என்ன? அதுதான் இயேசுவோடு இருப்பது.

இயேசுவோடு இருப்பது என்பது என்றும் தீராத ஒரு சந்தோசம். என்றைக்கும் அலுக்காத ஓர் இன்ப நிலை. அதைத்தன் இயேசு தம் சீடர்களுக்கு வாக்கு தருகின்றார். ஆகவே நாம் போகும் வழியும் இடமும் அவரே! இயேசுவே நம் பாதை, நம் பயணத்தின் இலக்கு. இயேசுவை நம்புவதற்கு தயங்கவேண்டாம். ஏனென்றால் அவரின் வாக்குறுதிகள் சத்தியமானவை. அவர் நம் பயணத்தின் முன்னோடி. ஏனென்றால் அவர் தம் பயணத்தின் நிறைவு.

# பீடப்பணியாளர்களே இது உங்களுக்காக!







## திருவழிபாட்டு நிகழ்வுகளில் பீடப்பணியாளரின் செயல்முறைகள்

### திருவிருந்துச் சடங்கு :

(குரு : மீட்பரின் கட்டளையால்........ பெற்ற நாம் துணிந்து செல்வோம்.

மக் : பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே..... தீமையிலிருந்து எங்களை இரட்சித்தருளும். (திருப்பலியில் கர்த்தர் கற்பித்த செபத்தின் இறுதியில் ஆமென் சொல்லக் கூடாது)

குரு : ஆண்டவரே .... மகிழ்ச்சியுடன் எதிர்பார்த்திருக்கின்றோம்.

மக் : ஏனெனில், அரசு வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமதே!

குரு : ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவே... என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்றவர் நீரே.

மக் : ஆமென்

குரு : ஆண்டவருடைய அமைதி உங்களோடு என்றும் இருப்பதாக.

மக் : உம்மோடும் இருப்பதாக

குரு : ஒருவருக்கொருவர் சமாதானத்தை அறிவித்துக் கொள்வோம்.)

இப்பொழுது ஒவ்வொருவரும் தங்கள் அருகில் உள்ளவர்களின் முகத்தைப் பார்த்து சமாதானத்தை வெளிப்படுத்துவர். திருப்பணியாளர் பீடப்பணியா-ளருக்குச் சமாதான வாழ்த்துக் கூறும் பொழுது பீடப்பணியாளர்களும் சமாதானம் கூற வேண்டும். (பீடப்பணியாளர்கள் முன் சென்று கூறுவது நலம்)

மக் : உலகின் பாவங்களை... எங்களுக்கு அமைதியை அளித்தருளும்.

குரு : இதோ இறைவனின் செம்மறி... செம்மறியின் விருந்துக்கு அழைக்கப் பெற்றவர் பேறு பெற்றோர்!

மக் : ஆண்டவரே!...ஆன்மா குணமடையும்)

திருப்பணியாளர் திவ்விய நற்கருணையை மக்களுக்குப் பகிர்ந்தளிக்க, பீடப்பணியாளர்கள் அவருடன் சென்று, கீழே விழும் நற்கருணையைத் துகள்களைச் சேர்க்க நற்கருணைத் தட்டை ஏந்தியிருத்தல் அவசியம். நற்கருணை பவனி முடிந்த பிறகு, நற்கருணைத் திருத்தட்டு பீடத்தின் மீது வைக்கப்பட வேண்டும்.

நற்கருணை வழங்கி முடித்த பின்பு நற்கருணைத் திருப்பாத்திரங்கள் பீடத்தின் மேல் சுத்தம் செய்யப்பட்டால் அவற்றைப் பீடப்பணியாளர்கள் திருத்தூகிலால் மூடி பக்கத்து மேசைக்கு ஒவ்வொன்றாக எடுத்துச் செல்வர்.

(குரு : செபிப்போமாக)

இப்பொழுது, திருப்பலிக்கு உதவி செய்த அனைத்துப் பணியாளர்களும் இறை ஆசி பெற ஒன்றாக பீடத்திற்கு முன்பாகக் கூடி கரங்களைக் கூப்பி பக்தியோடு திருப்பணியாளரை நோக்கி நிற்க வேண்டும்.

(குரு : இறைவா... எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

மக் : ஆமென்

குரு : ஆண்டவர் உங்களோடு இருப்பாராக.

மக் : உம்மோடும் இருப்பாராக.

குரு : எல்லாம் வல்ல இறைவன் பிதா, சுதன், பரிசுத்த ஆவி உங்களை ஆசீர்வதிப்பாராக!

மக் : ஆமென்

குரு : சென்று வாருங்கள் திருப்பலி நிறைவேறிற்று.

மக் : இறைவா உமக்கு நன்றி)

பீடப்பணியாளர்கள் தாங்கள் நிற்கும் வரிசையில் திருப்பண்ட அறைக்குள் செல்ல, அவர்களைத் தொடர்ந்து திருப்பணியாளரும் செல்வர்.

### திருப்பலியில் தூபமிடும் நேரங்கள்

1. திருப்பலி தொடக்கத்தின் போது
2. நற்செய்தி வாசகத்தின் முன்பு
3. காணிக்கைப் பாடலின் போது (திருப்பணியாளர்களுக்கும், இறை மக்களுக்கும்)
4. அப்பத்தை உயர்த்தும் போது
5. இரசக் கிண்ணத்தை உயர்த்தும் போது
6. எழுந்தேற்றத்தின் போது

### திருப்பலியில் மணியை ஒலிக்கும் நேரங்கள்

1. திருப்பணியாளர் கைகளை அப்பம் மற்றும் இரசக் கிண்ணத்தின் மீது வைத்து சிலுவை அடையாளம் வரையும் போது
2. அப்பத்தை உயர்த்திப் பிடிக்கும் போது
3. இரசத்தை உயர்த்திப் பிடிக்கும் போது
4. எழுந்தேற்றத்தின் போது

### மாதிரி ஆராதனை

இறைமக்கள் நற்கருணை ஆராதனை நடைபெறும் இடத்தில் கூடியிருக்கத் திருப்பணியாளரும் பீடப்பணியாளரும் திருவுடைகள் அணிந்து பின்வருமாறு பீடம் நோக்கிச் செல்வார்கள்.

1. புகையும் தூபக்கலம் ஏந்திய பணியாளர் ஒருவர்
2. சூழ்நிலைக்கு ஏற்றவாறு எரியும் திரியினை ஏந்திய பணியாளர்கள் இருவர்.
3. திருவழிபாட்டு நிகழ்வை நிறைவேற்றும் குரு அல்லது திருத்தொண்டர்

☆ திருப்பணியாளர் திருப்பீடத்திற்கு முன்பாக வந்து வணக்கம் செய்யும்போது, பீடப்பணியாளர்கள் பீட முற்றத்திற்குப் பின்பாக நின்று வணக்கம் செய்து, எரியும் மெழுகு திரியினைப் பீடத்தின் மேல் வைத்து விட்டு அவர்களுக்குரிய இடத்தில் (இடதுபுறம், மற்றும் வலதுபுறம்) சென்று முழந்தாற்படியிடுவர். நற்கருணை எழுந்தேற்றம் செய்த பிறகு தூபம் போடும் பீடப்பணியாளர் மட்டும் திருப்பணியாளரின் அருகில் வந்து தூபக் கலத்தைக் கொடுப்பர். திருப்பணியாளர் திவ்விய நற்கருணை கதிர் பாத்திரத்துக்கு தூபம் காட்டுவர். திருப்பணியாளர் தூபம் காட்டி முடித்தபின்பு பீடப்பணியாளர் ஒருவர் தூபக் கலத்தைப் பெற்றுக் கொண்டு திருப்பண்ட அறைக்குள் சென்று விடுவர். (குருவுக்கு வலப்புறமாக சென்று தூபக்கலத்தைக் காண்பிக்க வேண்டும்)

☆ பிறகு, ஆராதனையை திருப்பணியாளரின் அறிவுறு-த்தலின்படி பீடப்பணியாளர்கள் தங்கள் இருக்கையில் அமர்ந்தோ அல்லது முழந்தாள்படியிட்டோ அமை-தியில் இறைவனைப் போற்றிப் புகழ வேண்டும்.

☆ இறையாசீருக்கு முன்பாக, தூபக்கலனுடன் பீடப்பணியாளர் திருப்பணியாளர் அருகில் வந்து முழந்தாற்படியிட, திருப்பணியாளரும் எழுந்த-ருளியிருக்கும் இறைவனுக்குத் தூபம் காட்டுவார். திருப்பணியாளர் தூபம் காட்டி முடித்தபின்பு பீடப்பணி-யாளர் ஒருவர் தூபக் கலத்தைப் பெற்றுக்கொண்டு, மற்றொரு பணியாளருடன் நற்கருணை கதிர் பாத்திரத்திற்கு முன்பாக வந்து முழந்தாள்படியிட வேண்டும். இறையாசீர் அளிக்கபடும்பொழுது தூபப் பணியாளர்கள் தொடர்ந்தும் தூபம் காட்டுவர்.

☆ திவ்ய நற்கருணை ஆசீருக்குப் பின், திருப்பணியாளர் நற்கருணைச் சிமிழை நற்கருணைப் பேழையில் வைக்கும் பொழுது ஆராதனைக்கு உதவி செய்த அனைத்துப் பணியாளர்களும் திருபீடத்திற்கு முன்பாகக் கூடி கரங்களைக் கூப்பி பக்தியோடு நிற்க வேண்டும். பின்பு, பீடப்பணியாளர்கள் திருபீடத்-திற்குரிய மரியாதை செலுத்தி விட்டு, தாங்கள் நிற்கும் வரிசையில் அணிவகுத்து, திருப்பண்ட அறைக்குள் செல்ல, அவர்களைத் தொடர்ந்து திருப்பணியாளரும் செல்வர்.

### ஆராதனையில் தூபமிடும் நேரங்கள்

1. நற்கருணை எழுந்தேற்றத்தின் போது
2. நற்கருணை ஆசீர் வழங்கப்படுவதற்கு முன்பு (திருப்பணியாளரால்)
3. நற்கருணை ஆசீர் வழங்கப்படும் பொழுது (பீடப்பணியாளரால்)

### மணியை ஒலிக்கும் நேரம்

1. நற்கருணை ஆசீர் வழங்கப்படும் பொழுது

தொடரும்...




இரவு 12 மணிக்கு சாலையில் ஓர் வாடகைக் கார் வேகமாகச் சென்று கொண்டிருந்தது. ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி, அந்தக் காரை கையசைத்து நிறுத்தினார். “தம்பி ஆஸ்பத்திரி போகணும்” என்றார் அப்பெண்மணி. “நான் வரமுடியாது. சாப்பிட்டுட்டு, படுக்கப் போறேன்” என பதிலளித்தார் காரோட்டி. “என் மகளுக்கு பிரசவ வலி வந்து விட்டது, தயவுசெய்து வரமாட்டேன்னு சொல்லிடாதேப்பா” என கெஞ்சினார் அப்பெண்மணி. “நீங்க இவ்வளவு சொல்றதாலே வர்றேன். 500 ரூபா ஆகும்” என்றார் அந்தக் கார் ஓட்டும் இளைஞர். அப்பெண்மணி 500 ரூபா என்ன 1000 ரூபாய் கேட்டால்கூட தர சம்மதம் என்பதுபோல் வேகவேகமாக தலையாட்டி சம்மதிக்க, கார் அவர்களுடன் மருத்துவமனைக்கு விரைந்தது. மருத்துவமனையில், நள்ளிரவின் நிசப்தத்தைக் கிழித்தது அப்பிரசவத் தாயின் அலறல். மூடிய விழிகளில் நீர் மல்க, அந்த நடுத்தர வயதுப் பெண்மணி கைகளைக் கூப்பி மகளுக்காக இறைவனிடம் வேண்டினார். அந்தக் கார் இளைஞரும் அமைதியாக அங்கே நின்றிருந்தார். ஒரு தாய் எவ்வளவு வேதனை அடைகிறாள் என்பதிலேயே அவரது சிந்தனை இருந்தது. இளைஞரின் மனது உறுத்தியது, தான் நான்கு நாட்களுக்கு முன்பு செய்த தவற்றை நினைத்தார். சற்று நேரத்தில் மருத்துவர் வந்து சுகப்பிரசவத்தில் ஆண் குழந்தை பிறந்துள்ளதாகத் தெரிவித்தார். அந்தத் தாய், கார் இளைஞரிடம் “தம்பி! ரொம்ப நன்றிப்பா. இந்தா நீ கேட்ட பணம்” என பணத்தை நீட்டினார். “வேணாம்மா. எங்கம்மா என்னைப் பெற எவ்வளவு வேதனைப்பட்டி-ருப்பாங்கன்னு இறைவன் எனக்கு புரிய வச்சிட்டார். பணத்தை நீங்களே வைச்சுங்குங்க” என்று சொன்னபடி நடக்க ஆரம்பித்தார் இளைஞர். கைத்தொலைபேசியை எடுத்து எண்களை அழுத்தி, “ஹலோ முதியோர் இல்லமா?” எனக் கேட்டார். “ஆமா என்ன இந்த நேரத்துல போன் பண்ணுறீங்க?” என கேட்டது மறுமுனை குரல். “மன்னிக்கவும். நாலு நாளைக்கு முன்னாடி அனாதைன்னு சொல்லி ஒருத்தரை உங்க இல்லத்துல சேர்த்தேன். அவுங்க அனாதை இல்லை, என்னப் பெத்த தாய். நாளைக்கு காலையிலே வர்றேன் அவுங்கள கூட்டிட்டு போக”. முதியோர் இல்லப் பொறுப்பாளரின் அனுமதியைக்கூட கேட்காமல் கைத்தொலைபேசியை மூடிவிட்டு வண்டியை தீர்க்கமான முடிவோடு நகர்த்தினார் அந்த மகன்.

**நிஜத்தை தரிசிக்கும் ஒவ்வொரு இதயமும், ஒரு மனிதரைப் பிரசவிக்கிறது.**



# இனிமையான இல்வாழ்விற்கு...!

9

## 1.புத்திக் கோளாறும் மனக் கோளாறும்

திருமணம் மனத்தைச் சார்ந்த ஒரு செயல், இரு மனங்கள் ஒன்றினால் அதுவே திருமணம். ஆனால், இரு மனம் ஒன்றுபடுவதற்கு முன், திருமணம் என்றால் என்ன என்பதைப் புத்தியினால் அறிந்து, மனத்தால் அதை ஏற்றுக்கொள்ளும் தகுதி இருக்க வேண்டும்.

புத்தியையோ அல்லது மனத்தையோ பாதிக்கக் கூடிய நோய்கள், திருமணச் சம்மதத்தைப் பாதித்து, திருமணத்தைச் செல்லாததாக ஆக்கிவிடுகின்றன. புத்திக் கோளாறும் மனக்கோளாறும் உள்ளவர்கள் திருமணம் செய்யத் தகுதி அற்றவர்கள். அத்தகையவர்கள் திருமணம் செய்தால் அவர்கள் திருமணம் செல்லாது. இத்தகைய தம்பதியர்க்குக் குழந்தைகள் பிறந்தாலும் அத் திருமணம் செல்லாது. ஏனெனில், திருமணத்தை உருவாக்குவது குழந்தைப்பேறு அல்ல, மணமக்களின் சம்மதமே. சம்மதமின்றி நடைபெற்ற திருமணத்தில் குழந்தைகள் பிறந்தாலும் அத்திருமணம் செல்லாது.

## 2. மதிப்பீடு செய்யும் ஆற்றலின்மை

ஒருவர் புத்தி சுவாதீனம் உள்ளவராய் இருக்கலாம். இயல்பு வாழ்க்கை நடத்தலாம். ஆனால் திருமண ஒப்பந்தம் செய்யப் போதுமான புத்தி சுவாதீனம் இருந்தால் மட்டும் போதாது. திருமணத்தின் கடமைகள், உரிமைகள் பற்றிய திறனாய்வு அல்லது மதிப்பீடு செய்யும் ஆற்றல் (Critical Evaluation) இருத்தல் வேண்டும்.

மனைவியிடம் அந்த மதிப்பீடு எந்தெந்த வகையில் இல்லாமல் இருக்கலாம்? முரட்டுக் குணமுடையவளாக, திமிர்பிடித்தவளாக, அடங்காப்பிடாரியாக, வாய்க்கொழுப்பு மிக்கவளாக, பிறரை மதிக்காதவளாக, அடாவடித்தனம் உள்ளவளாக, குடித்தனம் பண்ணத் தெரியாதவளாக, பொருட்களை சேதப்படுத்தும் குணமுடையவளாக, இட்டுக்கட்டிப் பேசிக் குழப்பம் உண்டாக்குபவளாக, தனிக்குடித்தனம் வைத்தாலும் ஓடுகாலியாக, எந்தப் பொருளையும் தூக்கிக் கணவன் மீது வீசுபவளாக, ஒப்பாரி வைத்து ஊரைக் கூட்டிவிடுபவளாக இருந்தால் அவளுக்குத் திருமண மதிப்பீடு இல்லை என்று பொருள்.

அதுபோல், கணவனுக்கு அந்த மதிப்பீடு இல்லை என்பதற்கு உதாரணமாகக் சொல்ல வேண்டுமானால், மனைவி கருவுற்று, பிரசவத்திற்கு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மருத்துவமனைக்குச் சென்று, மனைவியைப் பார்க்காத நிலை, மருத்துவச் செலவுக்கு பணம் கொடுக்காத நிலை, இந்தச் சூழ்நிலையிலும் தன் நண்பர்களுடன் சுற்றுவதும், சூதாடுவதும், குடித்து கும்மாளம் அடிப்பதுமாக இருப்பது. இப்படி மனைவி மருத்துவமனையில் இருக்கும் போது பார்க்காமல், மருத்துவச் செலவுக்கு பணம் கொடுக்காமல், கவலை இன்றி ஊர் சுற்றி திரிபவர் திருமண மதிப்பீடு இல்லாதவன். அவன் திருமணம் சட்டப்படி செல்லாது.

திறனாய்வு அல்லது மதிப்பீடு செய்யும் ஆற்றல் (Capacity to evaluate) வயது வந்தவர்களுக்கு மட்டுமே (Adult) இருக்கிறது. வயது வந்தவர்களிடம் அறிவு முதிர்ச்சி உள்ளவர்களிடமும் மட்டுமே (Intellectual Maturity) திறனாய்வுத் திறனைக் காண முடியும்.

இம் மதிப்பீடு செய்யும் திறன் பல காரணங்களால் பாதிக்கப்படலாம். 1. அறிவு முதிர்ச்சியின்மை (Intellectual Immaturity), 2. நரம்புக் கோளாறு (Nervous Illness), 3. ஆளுமைக் கோளாறு (Personality disorder).

திருமண வாழ்வு என்பது தன்னை மையமாகக் கொண்டதன்று, பிறரை மையமாகக் கொண்டது. (Marriage is not self-oriented, but other-oriented). சுயநலவாதியாகத் தன்னையே எப்போதும் நினைத்துக் கொண்டு, செக்குமாடு போல் தன்னையே சுற்றி வருபவர்கள் திருமணம் செய்யும் தகுதியற்றவர்கள்.

## 3. பாலியல் கோளாறுகள்.

வினோத் என்பவர் வினித்தாவைத் திருமணம் செய்தார். வினித்தா பாலுறவில் அதிக நாட்டமும் ஈடுபாடும் கொண்டவளாகக் காணப்பட்டாள். "மண வாழ்வின் ஆரம்பக் கட்டத்தில்தான் அவளுக்கு அளவுக்கு மீறிய காம வேட்கை உள்ளது. போகப் போக அது தணிந்துவிடும்" என்று வினோத் நினைத்தான். காலம் நகர்ந்தது. ஆனால் வினித்தாவின் காமப் பசி தணியவில்லை. மாறாக, இன்னும் அதிகமானது. பாலுறவில் வினோத், வினித்தாவை திருப்திப்படுத்த முடியவில்லை. வினித்தா பிற ஆண்களுடன் தவறாக நடக்க ஆரம்பித்துவிட்டாள். உண்மையில் வினித்தாவை வாட்டிவதைத்தது ஒரு வகைப் பாலியல் கோளாறு. அவள் நிம்.'.போமேனியா (Nymphomania) என்ற நோயினால் தாக்கப்பட்டிருந்தாள். இத்தகைய நோய் தாக்கியவர்கள் எத்தனை முறை எத்தனை பேருடன் பாலுறவு கொண்டாலும் அணையாது காமத் தீ. திருப்தி அடையாத நிலைமை. அவர்களின் திருமணம் செல்லாது. எனவே வினித்தாவின் திருமணமும் செல்லாது.

இதே போன்று காம உணர்வு ஆண்களிடத்திலும் காணப்படலாம். அதற்குச் சாட்டிரியாசிஸ் (Satyriasis) என்று பெயர். பெண்கள் என்றாலே சில ஆண்கள் ஒரு வெறி கொண்டுவிடுவார்கள். மிருகத்திற்குக்கூட கட்டுப்பாடு உண்டு. ஆனால், சில ஆண்களுக்கு இக்கட்டுப்பாடு இருக்காது. இத்தகைய கணவர்களால் அவர்கள் மனைவியரின் இரத்தம் கெட்டு, பல நோய்களுக்கு அடித்தளமாகிறது. இவ் வகை நோயினை "சாட்டிரியாசிஸ்" (பாலியல் முறைகேடு) என்று அழைப்பர். எனவே, இத்திருமணம் செல்லாது. இதே போன்று, சில ஆண்கள் துன்புறுத்தி இன்புறும் குணம் கொண்டவர்களாக இருப்பர். இவர்களை சாடிஸ்ட் (Sadist) என்றும் இவர்களின் நோயை சாடிஸம் (Sadism) என்றும் அழைப்பர். இவர்களின் திருமணமும் செல்லாது.

இதே போன்று, சில ஆண்கள் ஆண்களுடன் மட்டுமே சேரவும் (Homo-Sexuality) சில பெண்கள் பெண்களுடன் மட்டுமே உறவு வைத்துக் கொள்ளவும் (Lesbianism) விரும்புவர். இவர்களும் திருமணம் செய்யும் தகுதி இழந்தவர்கள். அவர்கள் திருமணம் செய்தால் அவர்களின் திருமணமும் செல்லாது.

உளவியல் சார்ந்த காரணங்களால் (Psychic Causes) ஏற்படும் பாலியல் கோளாறுகளுள் முக்கிய மானவற்றைக் காண்போம்.

| | | |
|---|---|---|
| 1. Nymphomania | - | பெண்களிடத்தில் காணப்படும் கட்டுக்கடங்காக் காமவேட்கை |
| 2. Satyriasis | - | ஆண்களிடத்தில் காணப்படும் கட்டுக்கடங்காக் காமவேட்கை |
| 3. Homo-Sexuality | - | ஆண்களிடத்தில் காணப்படும் ஓரினப் பாலுணர்வு |
| 4. Sadism | - | துன்புறுத்தி இன்பம் அடைதல் |
| 5. Lesbianism | - | பெண்களிடத்தில் காணப்படும் ஓரினப் பாலுணர்வு |
| 6. Masochism | - | துன்புற்று இன்பம் அடைதல் |
| 7. Padophilia | - | சிறுவர் மீது காம வேட்கை. |
| 8. Bestiality | - | மிருகங்களைப் புணர்ந்து மகிழ்தல் |
| 9. Nacrophilia | - | சவப் புணர்ச்சி |
| 10.Transvestism | - | பிற -பால் உடை அணிந்து மகிழ்தல் |
| 11.Trans-sexualism | - | பிற பாலினத்தவராக மாற விரும்புதல். |

மேற்கூறப்பட்ட பாலியல் கோளாறுகளால் பாதிக்கப்பட்டவர்கள் பாவிகள் அல்ல. மாறாக, அவர்கள் அப்பாவிகள். ஏனெனில், இவர்கள் உள நோயால் பீடிக்கப்பட்டவர்கள். திசைமாறிய பறவைகள். இவர்களின் முறைகேடான செயல்கள் இவர்களின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டவை. "தந்தையே இவர்களை மன்னியும். இவர்கள் செய்வது இன்னதென்று அறியாமல் செய்கிறார்கள்" என்று இயேசு கூறியது இவர்களுக்கும் பொருந்தும். இத்தகையோர் பரிதாபத்திற்கு உரியவர்கள். இவர்கள் மேல் அனுதாபப்படலாமே தவிர இவர்களின் திருமணம் செல்லாது.

இவை தவிர வேறு சில காரணங்களாலும் திருமணம் செல்லாததாகிறது. ஒருவர் பயங்கரமான வாடிக்கைக் குடிகாரர். அவர் திருமணம் செய்கிறார். அவரால் திருமணத்தின் இன்றியமையாக் கடமைகளை ஆற்ற இயலவில்லை. இந்நிலையில் அவர்களின் திருமணம் செல்லாது. திருச்சபையின் உச்ச நீதிமன்றம் (Sara Romana Rota) திருமணத்தின் இன்றியமையாக் கடமைகள் யாவை என்று அறுதியிட்டுக் கூறியுள்ளது. அவை பின்வருமாறு:

மணமக்களிடையே இயல்பாக (Normal), நிரந்தரமாக (Perpetual), தனியுரிமைத்தன்மையுடையதாக (Exclusive), பாலுறவு கொள்ளும் தகுதியுடைமை, மணமக்கள் வாழ்நாள் முழுவதும் ஓர் அன்புச் சமூகமாகக் கூடி வாழும் ஆற்றலுடைமை, மணமக்கள் இறுதிவரை ஒருவர் ஒருவருக்குப் பிரமாணிக்கமாயிருக்கும் தன்மை. மணமக்கள் தங்கள் பிள்ளைகளின் உடல், ஆன்ம நலன்களை பேணிக்காக்கும் பொறுப்புடைமை ஆகும்.

மேற்கூறப்பட்ட திருமணத்தின் இன்றியமையாக் கடமைகளைப் புரிந்து (Understand), அவற்றை ஏற்று (Assume). அவற்றை நிறைவேற்றும் (FUlfil) ஆற்றலுடையவர்கள் மட்டுமே திருமணம் செய்யும் தகுதியுடையவர்கள். திருமணத்தின் இன்றியமையாக் கடமைகளை வாழ்நாள் முழுவதும் ஏற்று, அவற்றை நிறைவேற்றும் ஆற்றல் அற்றவர்கள், திருமணம் செய்யும் தகுதி இழந்தவர்கள் (தி.ச 1095 பிரிவு 3)

## திருமண இயல்பு என்றால் என்ன?

திருமணச் சம்மதம் உருவாகத் திருமண ஒப்பதம் செய்யும் மணமக்க-ளிடையே திருமணத்தைப் பற்றிக் குறைந்த அளவு அறிவானது (Minimum Knowledge) இருத்தல் அவசியம். திருமணம் என்பது ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஏற்படும் நிரந்தரமான கூட்டுறவு. இவ் உறவு தன்னியல்பிலேயே மகப்பேற்றுக்கென உள்ளது. மகப்பேறு என்பது மணமக்களின் பாலுறவால் நிகழ்கிறது. திருமணத்தைப் பற்றி இந்த அடிப்படையான, குறைந்த அளவு அறிவுகூட மணமக்களிடையே இல்லையென்றால் அவர்களின் திருமணம் செல்லாது (தி.ச 1096 பிரிவு 1)

திருமணம் பாலுறவு பற்றிய விரிவான அறிவு தேவையில்லை. மகப்பேற்றுக்கான உடல் உறுப்புக்களையும் அவற்றின் செயல்பாடுகளையும் குழந்தை எவ்வாறு உருவாகி, வளர்ந்து, பிறக்கின்றது என்பன போன்ற உடற்கூறு முறைகளையும் பற்றிய ஆழமான அறிவு தேவையில்லை. மகப்பேற்றுக்குத் தம்பதியர் உறவுகொள்ள வேண்டும் என்ற அடிப்படை அறிவு மட்டும் போதுமானது.

"டெய்லி அமெரிக்கன்" (Faily American) என்ற நாளேட்டில் "வாசகர் கேள்வி - பதில்" அரங்கில், "ஓர் இளம்பெண் ஓர் இளைஞனை முத்தம் செய்வதன் மூலம் கருவுற முடியுமா" என்று ஓர் இளம் பெண் கேட்கிறாள். இக் கேள்விக்குக் கொடுக்கப்பட்ட பதில் "கருவுற முடியாது. ஆனால் கருவுறுவதற்கு அது ஒரு நல்ல ஆரம்பம்". இக்கேள்வி திருமணம் பாலுறவைப் பற்றிய அடிப்படை அறிவின்மையையே காட்டுகின்றது. இதே போன்று கணவனைக் கட்டிப்பிடிப்பதாலும், முத்தம் கொடுப்பதாலும், உற்றுப் பார்ப்பதாலும், கணவன் போர்வையை எடுத்துப் போர்த்திக் கொள்வதாலும் ஒரு பெண் கருவுற முடியும் என்று எண்ணுகிறவர்கள் இன்றும் இருக்கின்றனர். இதுவும் அடிப்படை அறிவின்மையையே காட்டுகின்றது.

"சட்டத்தின் துணிவு அல்லது ஊக்கம்" (Legal Presumption) என்று ஒன்று உள்ளது. குற்றவாளி என்று காண்பிக்கப்படும்வரை ஒருவர் குற்றமற்றவரே. சட்டத்தின் கண் முன் அனைவரும் நல்லவர்களே. ஒருவன் குற்றவாளி என்று நிரூபிக்கப்படாவிட்டால் அவன் குற்றமற்றவன் என்று சட்டம் கருதுகிறது.




தொடர்ச்சி 15ம் பக்கம்

# அர்ப்பண வாழ்வின் ஆண்டு

Conference of Major Religious Superiors of Sri Lanka (CMRS)

## இலங்கையில் பணியாற்றும் துறவற சபைகள் 09

# தூய தூதர்கள் துறவற சபை

தூய தூதர்கள் துறவற சபை 1903ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இயேசு சபையைச் சேர்ந்த ஜோசப் வென்ரித் ஆண்டகையால் காலி மறைமாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை மண்ணில் உதித்த இளம் பெண்களைக் கொண்டு இம்மண்ணிலேயே தோற்றம் பெற்ற துறவற சபையாக இது விளங்குகிறது. கத்தோலிக்க மதம் இலங்கை மண்ணில் உத்தியோக பூர்வமாகப் பரவுவதற்குக் காரணமாக அமைந்த போர்த்துக்கேயர், முதன் முதல் வந்திறங்கிய இடமான காலியானது எமது துறவற சபையின் பிறப்பிடமாக அமைந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

சபையின் முதலாவது அங்கத்தவர் செல்வி குயினி ரைட் என்பவளாவாள். பின்னர் இவள் அருட்சகோதரி அலோசியஸ் என்ற பெயரில் அறிமுகமானாள். சபையின் முதல் உறுப்பினரான குயினி ரைட் என்ற இளம் பெண்ணைப் பயிற்றுவிக்கும் பொறுப்பு ஆயரால் அப்போது காலிக் கன்னியர் இல்லத்தில் இருந்த இயேசு மரியின் அன்பின் கன்னியர் சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. துடிப்பும் குறும்புத்தனமுமான இந்த இளம் பெண் ஒரு வருட காலமாகத் தனிமையாகத் திடமனதுடன் பயிற்சியை மேற்கொண்டு தனது அழைத்தலில் உறுதியாக இருந்தமை போற்றுதற்குரியதாகும்.

காலி மறைமாவட்டம் பரந்த நிலப்பரப்பையும், குறைந்த தொகையில் கிறிஸ்தவர்களையும் கொண்டதாக விளங்கியது. எனவே சபையின் வளர்ச்சியும் ஆரம்பத்தில் மந்த கதியிலேயே நடைபெற்றது. படிப்படியே ஒவ்வொருவராக சபையில் இணையத் தொடங்கினர். பயிற்சி பெறும் அங்கத்தவர்கள் இயேசு மரியின் அன்பின் கன்னியர் சபை சகோதரிகளின் மேற்பார்வையின் கீழ் பயிற்சி இல்லமொன்றைக் காலி கன்னியர் இல்லத்திற்கு அருகில் வழங்கினார். சபை படிப்படியே வளர்ந்து வரும் வேளையில் அருட்சகோதரிகளில் சிலர் காசநோயால் பீடிக்கப்பட்டுத் தம் இளம் வயதில் இவ்வுலக வாழ்வை முடித்துக் கொள்ள வேண்டிய நிலைக்கு உள்ளாகினர். இது புதிய சபைக்கு பெரும் சவாலாக அமைந்தது.

1923ஆம் ஆண்டு சபை தனியாக இயங்கத் தொடங்கியதுடன், காலியிலிருந்து சில மைல்களுக்கு அப்பாலுள்ள கணேகம என்ற கிராமத்தில் முதலாவது கன்னியர் இல்லம் நிறுவப்பட்டது. அதனைத் தொடர்ந்து காலி மறைமாவட்டத்தில் பல்வேறு இடங்களில் குறிப்பாக கிராமப் புறங்களில் வெளியேயும் சபையின் கன்னியர் இல்லங்கள் நிறுவப்பட்டன. இதன் மூலம் சமுதாயத்தில் பின்தங்கிய நிலையில் இருந்தோருக்குப் பணியாற்றக் கூடிய வாய்ப்புக் கிடைத்தது.

1960ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் தனியார் பாடசாலைகள் அரசாங்கத்தால் அரசுடைமையாக்கப்பட்டபோது சபை அனைத்துப் பாடசாலைகளையும் இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஏற்கனவே அப்பாடசாலைகளில் பணியாற்றியோர் அரசாங்க சேவைக்கு உள்வாங்கப்பட்டனர். புதிய நியமனங்கள் வழங்கப்படவில்லை. எனவே தொடர்ந்து தனியார் பாடசாலைகளாக இயங்கிக் கொண்டிருந்த கொழும்பு மற்றும் சுற்றுப்புற பாடசாலைகளில் அருட்சகோதரிகள் பணியாற்றத் தொடங்கினர். அத்தோடு பாலர் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு முன்னேடுத்துச் செல்லப்பட்டது. மேலும் பல்வேறு பணிகளில் சபையினர் தமது கவனத்தை செலுத்தினர். அதனைத் தொடர்ந்து இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் முடிவுகளுக்கு அமைய துறவறத்தினரின் செயற்பாடுகளும் பல்வகைப்பட்டதாக இருந்தன. இக்காலக்கட்டத்தில் பங்குப் பணிகளில் சபையினர் ஈடுபட்டதுடன், முதியோர் இல்லங்களும் ஆரம்பிக்கப்பட்டன.

1964 ஆம் ஆண்டு இலங்கைக்கு வெளியே அவுஸ்திரேலியாவில் இல்லம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு நான்கு அருட்சகோதரிகள் இலங்கையிலிருந்து சென்று பணியாற்றினர். 1991ஆம் ஆண்டு எமது சேவை ஆபிரிக்கா கண்டத்தில் கென்யாவிலும் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையில் சுதேச இளம் பெண்களுடன் ஆரம்பமான சபை இன்று அவுஸ்திரேலியா, ஆபிரிக்கா ஆகிய கண்டங்களிலும் வேறூன்றியுள்ளது.

காலி மறைமாவட்ட ஆயரின் கண்காணிப்பின் கீழிலிருந்த சபை, 1977ஆம் ஆண்டு திருத்தந்தையின் கண்காணிப்பிற்கு உட்பட்ட சபையாக மாறியது. 1996ஆம் ஆண்டு இலங்கையிலுள்ள இல்லங்கள் கொழும்பு, கண்டி, காலி என் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு மூன்று அருட்சகோதரிகளால் வழிநடத்தப்பட்டு வருகிறது. சபையின் தற்போதைய தலைவியாக இருப்பவர் அருட்சகோதரி ரேமண்ட் விஜயசூரிய ஆவார். சபையின் தலைமையகம் களுத்துறை நாகொடையில் அமைந்துள்ளது.

தூய தூதர்கள் துறவற சபையின் அருட்சகோதரிகள் இலங்கையில் யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மறைமாவட்டங்கள் தவிர்ந்து ஏனைய பத்து மறைமாவட்டங்களில் 34 இடங்களில் பணியாற்றுகின்றனர். ஆபிரிக்காவில் கென்யாவில் ஐந்து இடங்களிலும், அவுஸ்திரேலியாவில் ஒரு இடத்திலும் அருட்சகோதரிகள் சேவை செய்கின்றனர்.

பாடசாலைகளில் கற்பித்தல் எமது முக்கிய பணியாக விளங்குகின்ற போதிலும், பாலர் பாடசாலைகள், மாணவிகள், தொழில் புரிவோருக்கான விடுதிகள், முதியோர் இல்லங்கள், யுவதிகளுக்கான வாழ்வியல் பயிற்சி நிறுவனங்கள் நடாத்துதல் என்பனவும் சபையால் ஆற்றப்படும் பணிகளாகும். பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் மக்களின் ஆன்ம, சரீர நலன்களைக் கவனித்தல், பங்குத்தளங்களில் பணிபுரிதல். மறை பாடசாலைகளில் கற்பித்தல், வளர்ந்தோர் மறைக்கல்வி என்பனவும் சபையினரால் முன்னெடுத்துச் செல்லப்படும் செயற்பாடுகளாகும். சமூக, சமய, பொருளாதாரத் துறையில் பின்தங்கியோரில் கரிசனை காட்டுவது சபையின் முக்கிய குறிக்கோளாகும்.

“அனைத்தும் இறைவனின் அதிமிகு மகிமைக்கே” என்பது சபையின் விருதுவாக்காகும். கிறிஸ்துவின் அன்பினை அனுபவ ரீதியாக கண்டு, அவரில் இணைந்து வாழ்வதுடன், இறைவனில் முழு நம்பிக்கை வைத்து, புறக்கணிப்பு, அவமானம் என்பவற்றை மகிழ்வுடன் ஏற்று அன்பினதும், அமைதியினதும், மகிழ்வினதும் தூதுவர்களாக சமுதாயத்தில் பின்தங்கிய நிலையில் உள்ளோர் மத்தியில் பணிபுரிவதே சபையின் தனிப்பண்பாகும்.

சபையின் நிறுவனரான வென்ரீத் ஆண்டகையும், இணை நிறுவுனரான அருட்சகோதரி கேட்ருட் பெரேராவும் என்றும் எம் அன்பிற்கும், மதிப்பிற்கும் உரியோராவர். அவர்களது கடின உழைப்பினையும் எதிர்பார்ப்பினையும் மனதிற் கொண்டு செயற்பட்டுத் திருச்சபையின் வளர்ச்சிக்கு சிறப்பாக இலங்கை திருச்சபையின் வளர்ச்சிக்கு உதவுவது தூய தூதுவர்கள் சபையினரான எமது பொறுப்பும், கடமையுமாகும்.

# அர்ப்பண ஆண்டு

***அர்ப்பண*** வாழ்வின் அளப்பரிய மகத்துவங்கள்
***அர்ப்பண*** வாழ்விற்குரிய ஆழமான பெறுபேறுகள்

***மனித*** வாழ்வே மகத்துவமாகிறது அர்ப்பணத்தின் மூலம்
***மனிதம்*** மாண்பு பெறுவதே
அர்ப்பணத்தின் அடிப்படையில்
***மன்னன்*** இயேசு தந்தைக்கு தன்னை அர்ப்பணித்தே
***மனித*** வர்க்கத்தை மீட்டுக்காக்கவே

***பாப்பரசர்*** திருத்தந்தை அர்ப்பண
ஆண்டை பிரகடனப்படுத்தியது
***பாமர மக்கள்*** அதன் அர்த்தத்தை ஆழ்ந்து உணரவே
***பாரெங்கும்*** வாழ்கின்ற அனைத்து
மக்களினமும் அர்ப்பணத்தின்
***பாதையில்*** பயணம் தொடரவே

***அர்ப்பண*** வாழ்வு துறவியர், குருக்களுக்கு மட்டுமல்ல
***அர்ப்பண*** வாழ்வு அனைத்து
நிலைகளையும் தேர்ந்தவர்களுக்கு
***அர்ப்பணத்தின்*** மகத்துவம் வாழப்படும்போது
***அர்ப்பண*** வாழ்வு பரிசுத்தமாகிறது பேறு பெற்றதாகிறது

***அன்பும்***, சேவை மனப்பான்மையும்
அர்ப்பணத்திற்கு ஆணிவேர்
***அனைத்து*** மக்களும் அர்ப்பண வாழ்வை வாழ
***அனைவருக்கும்*** தேவை தியாகம்
***அதன்*** அர்த்தத்தை உணர்ந்து வாழ்வதே
அர்ப்பணத்தின் சிறப்பு

***இல்லறம்***, துறவறம் இரண்டிற்கும் தேவை
அர்ப்பண வாழ்வை அர்த்தத்துடன் வாழ
***இனிதாய்*** வாழ்வை வாழ செல்வோம் இயேசுவைப்
பின்பற்றி வாழ
***இகத்தில்*** வாழும் மானிடனே உணர்கின்றாயா
உன் மேன்மையை
***இதோ*** அழைக்கிறார் எம் இயேசு அவர்
காலடியை பின்பற்றி வாழ

***எம்பிரான்*** இயேசு சொல்லிலும் மட்டுமல்ல செயலிலும்
வாழ்ந்தவர் அர்ப்பண வாழ்வை
***எம்மவர்க்கு*** தன்னைத் திருவுணவாகத்தந்து அர்ப்பண
வாழ்விற்கு அத்திவாரமிட்டார்
***என்னையும்*** உன்னையும் அழைக்கிறார் தேர்ந்த வாழ்வை
திகழ்ந்து வாழ்ந்திட
***எல்லோரும்*** செல்வோம் அர்ப்பண வாழ்வை
அர்த்தமுள்ளதாக்கி ஆண்டவர் ஆசி பெற்றிட

***நற்செய்தியின்*** நல்ல கோட்பாடுகள்
***நாதன் இயேசு*** நம்மவர்க்கு அளித்த பொக்கிஷங்கள்
***நல்லவர்களாய்*** நாமும் வாழ
அர்ப்பண வாழ்வை ஆழமாக்கிட
***நாமும்*** விரும்பி பின்பற்றினால் அதன்
பலன்களை அடைந்திடலாம்

***வாழ்வை*** அர்ப்பண வாழ்வை
***வாழ்ந்து*** காட்டுவதே அர்ப்பணத்திற்கு மகிமை
***வள்ளல்*** இயேசுவின் முன்மாதிரிகையான வாழ்வு
***வாழும்*** எமக்கு வழிகாட்டியாக திகழ வேண்டும்.

***இயேசுவே*** நீர் வாழ்ந்த அர்ப்பண வாழ்வு மகத்தானது
***இயேசுவே*** நாமும் உம்மைப் பின்பற்றி வாழ
வரம் தர வேண்டுகிறோம்
***இயேசுவே*** அர்ப்பண வாழ்வின் அனைத்து
சவால்களுக்கும் முகம் கொடுத்து வாழ
***இயேசுவே*** பக்க பலமாய் வாரும், பாதுகாத்து
எம்மை பலமுள்ளவர்களாக்கியருளும்...

***‘தந்தையே, நீர் என்னை உலகிற்கு***
***அனுப்பியதுபோல,***
***நானும் அவர்களை உலகிற்கு அனுப்புகிறேன்,***
***அவர்களுக்காக என்னையே உமக்கு***
***அர்ப்பணமாக்குகின்றேன்’ (யோவா 17:18–19)***

ஆக்கம்
அருட்சகோதரி டெலாறோஸ்

## twitter ‘டுவிட்டர்’ ஊடாக திருத்தந்தை

“நமக்குத் தேவையான உணவை நாமே சம்பாதிக்க முடியாதபோது, நாம், சுயமதிப்பை இழக்கிறோம். இது, குறிப்பாக, இன்றைய இளையோரிடையே உள்ள பெரும் துன்பமான நிலை”




# அன்பை செயல் வடிவில் வெளிப்படுத்துவதே உண்மையான அன்பு

செயல் வடிவத்திலும், தொடர்புகளிலும் வெளிப்படுவதே உண்மையான அன்பு நான்கு சுவர்களுக்குள் வாழும் துறவியரும் இத்தகைய அன்பிலிருந்து விலகி நிற்க முடியாது என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறினார்.

வைகாசி 07ஆம் திகதி அன்று சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் வழங்கிய மறையுரையில், “என் அன்பில் நிலைத்திருங்கள்” என்று இயேசு கூறிய நற்செய்தியை அடிப்படையாகக் கொண்டு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் எண்ணங்களைப் பகிர்ந்துகொண்டார்.

உண்மை அன்பையும், போலியான அன்பையும் பிரிக்கும் இருகூறுகள் உள்ளன என்று கூறியத் திருத்தந்தை, செயல்களில் வெளிப்படுவதும், தொடர்புகளில் ஈடுபடுவதும் அவ்விரு கூறுகள் என்று எடுத்துரைத்தார்.

வெறும் வார்த்தைகளில், வெறுமையான கனவுகளில் வெளிப்படும் அன்பு உண்மை அன்பல்ல என்பதை, ஆண்டவரே, ஆண்டவரே என்று அழைப்பது மட்டும் போதாது என்று இயேசு விடுக்கும் எச்சரிக்கை விளைக்குகிறது என்று திருத்தந்தை சுட்டிக்காட்டினார்.

வெறும் ஆர்வத்தால் உருவாகும் உணர்வு உண்மையான அன்பல்ல, மாறாக, ”நான் பசித்திருந்தேன், எனக்கு உணவு தந்தீர்கள்” என்று செயல்வடிவில் வெளியாகும் அன்பே உண்மை அன்பு என்று திருத்தந்தை வலியுறுத்தினார்.

அன்பு, தொடர்பில் வெளிப்படும் என்பது, உண்மையான அன்பின் இரண்டாவது கூறு என்று கூறியத் திருத்தந்தை, நான்கு சுவர்களுக்குள் தங்களையே தனிமைப்படுத்திக் கொள்ளும் துறவியரும், இறைவனோடும்,



அயலவரோடும் ஆன்மீக அளவில் தொடர்பு கொண்டுள்ளனர் என்று எடுத்துரைத்தார்.

இந்த உலகம் தர முடியாத அன்பை உணரவும், அதனால் மகிழவும், அந்த மகிழ்வை மற்றவரோடு பகிரவும் எங்களுக்கு அருள்தாரும் என்ற செபத்துடன் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் மறையுரையை நிறைவு செய்தார்.

# இறைவன் அப்பாவிகளின் வேதனைக் குரலுக்குச் செவிசாய்க்கிறார்

அப்பாவி மக்களின் வேதனைக் குரல்கள் எழுப்பும் விண்ணப்பங்கள் உலகினரின் இதயங்களைத் திறக்கும் என்ற தனது நம்பிக்கையை வெளியிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இஸ்ரேலின் கலிலியில் நடைபெற்ற ஒரு பெரிய பல்சமய கூட்டத்திற்குச் செய்தி அனுப்பிய திருத்தந்தை, இறைவன் அப்பாவிகளின் வேதனைக் குரலைக் கேட்பார் மற்றும் துன்புறும் அனைவரின் வேதனைகளைக் குணப்படுத்துவார் என்று தான் நம்புவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கிறிஸ்தவமல்லா மறைகளோடு திருஅவைக்கு உள்ள உறவு பற்றிய Nostra aetate 2ம் வத்திக்கான் பொதுச்சங்க அறிக்கை வெளியிடப்பட்டதன் ஐம்பதாம் ஆண்டு நிறைவு, இரண்டாம் உலகப் போர் மற்றும் யூத இன ஒழிப்பு நடவடிக்கை முடிவடைந்ததன் எழுபதாம் ஆண்டு நிறைவு ஆகிய இரண்டையும் சிறப்பிக்கும் நோக்கத்தில் இஸ்ரேலில் இந்தப் பெரிய பல்சமய கூட்டம் நடைபெற்றது.

இம்மாதம் 4 முதல் 7 வரை நடைபெற்ற இக்கூட்டத்தில், ராஞ்சி கர்தினால் டெலஸ்போர் டோப்போ உட்பட 7 கர்தினால்கள், 25 ஆயர்கள், 50 அருள்பணியாளர்கள், 120 ரபிகள் என ஏறக்குறைய நானூறு பேர் கலந்து கொண்டனர். திருஅவையின் உறுப்பினர்களுக்கு கிறிஸ்தவத்தில் பயிற்சி அளிக்கும் Neocatechumenal Way என்ற பக்த அமைப்பு இக்கூட்டத்தை நடத்தியது. மேலும், “பிறர் நம்மை அன்புகூராமல் இருக்கும்போதுகூட நாம் ஒவ்வொருவரையும் அன்புகூரவும், கனிவுடன் வாழவும் கற்றுக்கொள்வோம்” என்று, இச்சனிக்கிழமையன்று தனது டுவிட்டரில் ஒன்பது மொழிகளில் பதிவு செய்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

01ம் பக்கம் கிறிஸ்தவர்களுக்கு...

இந்த சகோதர சகோதரிகளுடைய விசுவாசத்தின் உன்னத தியாகத்தை, அதியுயர் மதிப்பும் மரியாதையும் மிக்க ஒன்றாக நாங்கள் கருதுகின்றோம். இவ்வருந்தத்தக்க இழப்பினால் துயருறும் அனைவருடனும் நாமும் ஆழமான செபத்தில் இணைந்து கொள்வோம். இறைவன் அவர்களது குடும்பங்களுக்கும், உற்றார் உறவினர்களுக்கும் ஆறுதலும் திடமும் தேற்றுதலும் அளிப்பாராக. தமது கிறிஸ்தவ சீடத்துவத்தை வாழ, கசப்பான முடிவுகளை ஏற்று கொடூரமான துன்பங்களுக்கு மத்தியில் வாழும் எமது சகோதர சகோதரிகளை உணர்வு பூர்வமாக நினைவு கூரும்படியாக எமது விசுவாசிகளை ஆழமாகத் தூண்டுகின்றோம். இந்த தீவிரவாதம் மற்றும் வன்முறைகளில் யாரெல்லாம் ஈடுபட்டுள்ளனரோ அவர்களின் செயற்பாடுகள் விரைவாக நிறுத்தப்பட்டு, எஞ்சியுள்ள அப்பாவி மனிதர்கள் அதாவது குழந்தைகள் மற்றும் வளர்ந்தவர்கள் காக்கப்பட வேண்டுமென்று இடைவிடாது இறைவனிடம் இரந்து வேண்டுவோமாக.

அனைத்து மக்களுக்கும் தமது விருப்பிற்கும் சுதந்திரத்திற்கும் ஏற்ப மதங்களை பின்பற்றுவதற்கான அடிப்படை உரிமை இருக்கின்றது. எனவே, உலகின் எல்லா அரச தலைவர்களையும், மற்றும் நல்மனம் கொண்ட அனைத்து ஆண்கள், பெண்களையும் அவர்களது அதிகாரத்திற்கு உட்பட்ட வகையில், மதத்தின் அடிப்படையிலே வெளிப்படையாக நடத்தப்படுகின்ற இந்த அப்பட்டமான வன்முறைகளையும், படுகொலைகளையும் நிறுத்துவதற்குத் தேவையான தக்க நடவடிக்கைகளை எடுக்குமாறு நாங்கள் திடமாகக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையானது 07 ஆனி 2015இல் கொண்டாடப்படவிருக்கின்ற கிறிஸ்துவின் திருவுடல், திரு இரத்தப் பெருவிழாவை, செப தபத்தினுடைய நாளாகப் பிரகடனப்படுத்தி, பாதிக்கப்பட்ட நாடுகளிலுள்ள இறந்தவர்களின் சகோதர சகோதரிகளுக்கு எமது உடனிருப்பைத் தெரிவிக்கத் தீர்மானித்துள்ளது. எனவே, எமது பாவங்களுக்குப் பரிகாரமாகத் தன்னையே முழு முதற்பலியாக சிலுவையிலே ஒப்புக்கொடுத்து தனது இறுதித்துளி இரத்தத்தையும் சிந்திய இயேசுவின் அளவில்லாத அன்பை நினைவு கூரும் இந்நாளிலே, எமது அனைத்துப் பங்குகளிலும், துறவற சபைகளிலும் ஒரு செப வழிபாட்டை ஒழுங்குபடுத்தி கடவுளின் தலையீட்டினால் இவ்வாறான மிருகத்தனமான வன்செயல்கள் நிறுத்தப்பட வேண்டும் என பிராத்திப்போமாக.

# திருத்தந்தையின் போதனைகளிலிருந்து...

## வரலாறும் பணியும் கிறிஸ்தவத்தின் அடையாளங்கள்

வரலாறும் பணியும் கிறிஸ்தவத்தை இவ்வுலகிற்கு அடையாளம் காட்டும் இரு கூறுகள். புனிதர்களான பேதுருவும், பவுலும், மக்களின் வரலாற்றில் ஊன்றிய இயேசுவை மக்களுக்கு அறிவித்தனர்.

வரலாற்றில் ஊன்றாமல் மக்களோடு இவ்வுலக பயணத்தில் பங்கேற்காமல் ஒரு கிறிஸ்தவரால் வாழ முடியாது. தான் என்ற சுவர்களுக்குள் அமைக்கப்பட்ட ஓர் ஆய்வுக் கூடத்திலிருந்து வெளிவரும் பொருளாக கிறிஸ்தவர்கள் வாழக் கூடாது. பணி புரிதலே கிறிஸ்தவ வாழ்வின் முக்கிய அடையாளமாகும். என்னுடைய வாழ்வில் மற்றவர்களை நான் வாழும் சமுாயத்தை, பங்குத்தளத்தை, என் சொந்த ஆதாயத்திற்காக பயன்படுத்துகின்றேனா? அல்லது அவர்களுக்கு என்னால் இயன்ற அளவு பணிகள் புரிகின்றேனா?....

## திருச்சபையின் முன்னேற்றம் தூய ஆவியாரின் வேலையாகும்

தூய ஆவியாரின் உதவியின்றி நாம் எதையும் செய்ய முடியாது. நாம் என்ன செய்ய வேண்டுமென்பதை எல்லா காலங்களிலும், தேர்ந்து தெளிவதற்கு தூய ஆவியாரை நமக்கு அருளும்படியாக இறைவனிடம் செபிப்போம்

02ம் பக்கம் இரத்தினப்புரி...

அங்கு தமது குருத்துவ பணிக்குத் தேவையான மெய்யியல், இறையியல் கற்கை நெறியில் தம்மை வளப்படுத்திக் கொண்டார். 2008ம் ஆண்டு தொடக்கம் 2014ம் ஆண்டு வரை ஓரிரண்டு ஆண்டுகள் மெய்யியலிலும், ஈரிரண்டு ஆண்டுகள் இறையியல் கற்கை பயின்றபின்னர் அருட்சகோதரர் மரிய ஜோய் 2014ம் ஆண்டு ஐப்பசி 19ந் திகதி கண்டி தேசிய குருமடத்தில் திருத்தொண்டராக திருநிலைப்படுத்தப்பட்டார்.

2015ம் ஆண்டு வைகாசி மாதம் 9ந் திகதி இரத்தினக் கற்கள் விளையும் இரத்தினபுரி தமது புனித இராயப்பர் - சின்னப்பர் பேராலயத்திலே இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர் அதிமேதகு கிளிட்டஸ் சந்திரசிறி பெரேரா ஆண்டகையினால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

2015.05.10 ஞாயிறன்று தமது முதற் திருப்பலியை நிறைவேற்றுவதற்காக சொந்த ஊரான எட்டியாந்தோட்டை பங்கு மக்களும் பங்கு குருவானவரும் சேர்ந்து விடுத்த அழைப்பின் பேரில், அமோக வரவேற்புடன் தமது முதற் திருப்பலியை திராணியுடன் ஒப்புக்கொடுத்தார்.

அருட்பணி. மரிய ஜோய் அடிகளாரே தங்களது புனித சேவை மென்மேலும் வளர - நிலைத்து நிற்க - சரீர நலனுடன் வாழ வாழ்த்துகின்றோம். இறைவனிடம் இறைஞ்சுகின்றோம்.

### நீங்கள் கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டிய மூன்று விடயங்கள்.....

**1. மூன்று விஷயங்கள் யாருக்காகவும் காத்திருப்பது இல்லை...**
நேரம் இறப்பு வாடிக்கையளர்கள்

**2. மூன்று விஷயங்கள் சகோதர சகோதரிகளையும் விரோதியாக்கும்...**
நகை பணம் சொத்து

**3. மூன்று விஷயங்கள் யாராலும் திருடமுடியாது...**
புத்தி கல்வி நற்பண்புகள்

**4. மூன்று விஷயங்கள் ஞாபகம் வைத்திருப்பது அவசியம்...**
உண்மை கடமை இறப்பு

**5. மூன்று விஷயங்கள் வெளிவந்து திரும்புவதில்லை...**
வில்லிலிருந்து அம்பு வாயிலிருந்து சொல்
உடலிலிருந்து உயிர்

**6. மூன்று பொருள்கள் வாழ்க்கையில் ஒருமுறைதான் கிடைக்கும்...**
தாய் தந்தை இளமை

04ம் பக்கம்

## பெந்தகோஸ்தே பெருவிழா

"நம்பிக்கை கொண்டோர் அத்தனைப் பேரும் ஒரே உள்ளமும், ஒரே உயிருமாய் இருந்தனர். அவர்களுள் ஒருவனும் தன் உடைமை எதன் மீது உரிமை பாராட்டவில்லை (திப 4:32) வறுமைப்பட்ட நிலையில் அவர்களுள் ஒருவனும் இல்லை. ஏனெனில், நிலபுலம் வீடு உடையவர்கள் அவற்றைவிற்று அத்தொகையைக் கொண்டுவந்து திருத்தூதர்களின் பாதத்தில் வைப்பார்கள். அவர்கள் அதை அவரவர் தேவைக்குத்தக்கவாறு பகிர்ந்து கொடுப்பர். ஒரே குடும்பமாக வாழ்ந்து கடவுளைப் புகழ்ந்து வந்தனர். மக்கள் அனைவருக்கும் வேண்டியவர்களாய் விளங்கினர்.

தூய ஆவியாரின் முக்கிய அலுவல் திருத்தூதுப் பணியைத் தொடங்கி, அதைக் காத்து, அது கனிதரச் செய்வதாகும். இதுவரை பயந்துகொண்டு மேல் மாடியிலேயே தங்கியவர்கள், தூய ஆவியாரைப் பெற்ற பின் திடமனதுடன் வெளியே சென்று சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் போதித்தார்கள். "மன்றாடியபின் அவர்கள் குழுமியிருந்த இடம் அதிர்ந்தது. அவர்கள் எல்லோரும் தூய ஆவியினால் நிரப்பப்பெற்று கடவுளின் வார்த்தையை துணிவுடன் எடுத்துச் சொன்னார்கள்." (திப 4:31) எத்தியோப்பியனின் திருமுழுக்கிற்குப் பிறகு திருத்தொண்டர் பிலிப்பு என்பவரைத் தூக்கிச் சென்றவரும், போதிக்கத் தூண்டியவரும் ஆவியார்தான். (திப 8:39-40). பிற இனத்தாருக்கும் நற்செய்தி அறிவிக்க பேதுருவைத் தூ ண்டிவிட்டவர் ஆவியார் தான் (திப 10:19...) பர்னபாசும் சவுலும் பணிக்களம் நோக்கிச் செல்லக் காரண மாயிருந்தவர் ஆவியார்தான் (13:2-4) தூய ஆவியாரின் ஏவுதல்களை நன்றாக செவிமடுத்துச் சிறப்பான பணிபுரிந்தனர் திருத்தூதர்கள் (5:9).

எனவே ஆவியார் அடியார்களின் வழியாக ஆற்றிய செயல்களையெல்லாம் அவர் எத்தகு வல்லமை வாய்ந்தவர் என்பதையும், எத்தகு செயல்கள் புரிந்துவருகின்றார் என்பதையும் உள்ளங்களை நெல்லிக்கனியென நமக்குக் காட்டுகின்றன.

தொடர்ச்சி அடுத்த இதழில் ....

07ம் பக்கம்

## இது மறைசாட்சிகளின்

2005இல் லூசியாவும் திருத்தந்தை புனித இரண்டாம் ஜோன்போலும் விண்ணகம் சேர்ந்தனர்.

### பாத்திமா மூன்றாம் இரகசியம் JMJ

அன்னையின் இடதுபுறம் சிறிது மேல் ஒரு வானதூதரை தன் இடது கரத்தில் கொழுந்து விட்டு எரிகின்ற வாளுடன் கண்டோம். எரியும் வாளிலிருந்து உலகை எரித்து விடுவதுபோல் தீ நாக்குகள் வெளிப்பட்டன. ஆனால் அன்னையின் வலது கரத்திலிருந்து பாய்ந்த பேரொளியைச் சந்தித்தபோது அந்தத் தீ அணைந்து விட்டது. தன் வலது கரத்தால் உலகைச் சுட்டிக்காட்டி வானதூதர் "பரிகாரம், பரிகாரம், பரிகாரம்" என்று மிகவும் உரத்துக் கூக்குரலிட்டார். அப்போது கடவுளின் மிகப்பெரிய ஒளியில் வெள்ளை அங்கி உடுத்திய ஆயர் ஒருவரை அவர் திருத்தந்தை தான் என்று நாங்கள் நம்பினோம் - கண்ணாடியில் மனிதர் காணப்படுவது போன்றே கண்டோம். அவருடன் ஆயர்கள், குருக்கள், ஆண் - பெண் துறவிகள் ஒரு கிட்டதட்ட செங்குத்தான சரிவுடைய மலையின் மேல் ஏறிச் செல்வதைக் கண்டோம். மலையின் உச்சியில் மரப்பட்டையுடன் தக்கை மரத்தின் அடிப்பகுதியை கரடுமுரடாக வெட்டி செய்யப்பட்ட ஒரு பெரிய சிலுவை இருந்தது. திருத்தந்தை அங்கு சென்று சேர்வதற்கு முன் பாதி சீர்குலைந்தும் பாதி துக்கத்திலிருந்தும் வேதனையிலும் பாதிக்கப்பட்ட ஒரு பெரிய நகரைக் கடந்து செல்கிறார். தம் வழியில் சந்தித்த பிணங்களின் ஆன்மாக்களுக்காக அவர் செபித்தார். மலையின் உச்சியை அடைந்தவுடன் சிலுவை அடியில் முழந்தாள்படியிட்டபடி படைவீரர்களின் கூட்டம் ஒன்று குண்டுகளாலும், எய்த அம்புகளாலும் திருத்தந்தை கொல்லப்பட்டார். இதேபோன்று ஆயர்கள், குருக்கள், ஆண் - பெண் துறவிகள், பல்வேறு நிலையை சார்ந்த பொதுநிலையினர் ஒருவர் பின் ஒருவராகக் கொல்லப்பட்டனர். சிலுவையின் இரு கரங்களின் கீழ் இரு வானதூதர்கள் இருந்தனர். அவர்கள் தம் கரங்களில் பளிங்கு போன்ற தீர்த்தப் பாத்திரத்தை வைத்திருந்தனர். அப்பாத்திரங்களில் கொல்லப்பட்ட மறைசாட்சிகளின் இரத்தத்தை ஒன்றுதிரட்டி சேர்த்து கடவுளை நோக்கி சென்று கொண்டிருக்கும் ஆன்மாக்களின் மேல் தெளித்தனர். (துயி எழுதப்பட்ட இடம் 03.01.1944)

திருச்சபையில் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் ஆண் - பெண் துறவிகள், பல்வேறு நிலையை சார்ந்த பொதுநிலையினர் கொல்லப்படுவர் என்ற இந்த மூன்றாம் இரகசியம் திருவெளிப்பாடு நூலில் ஆட்டுக்குட்டி ஐந்தாவது முத்திரையை உடைக்கும்போது நடக்க இருக்கும் மறைசாட்சிகளின் மரணத்தைச் சுட்டிக்காட்டுகிறது. பாத்திமா இரண்டாம் இரகசியம் அருளப்பட்டதைத் தொடர்ந்து அன்னை மூன்றாம் இரகசியத்தை அருளினார். இரண்டாம் இரகசிய முடிவில் அன்னை "ஆனால் இறுதியில் என் மாசற்ற இருதயம் வெற்றி பெறும். திருத்தந்தை ரஷ்யாவை எனக்கு ஒப்புக்கொடுப்பார் அது மனந்திரும்பும்" என வெளிப்படுத்தினார். ஆகையால் மூன்றாம் இரகசிய நிகழ்வுகள் இரண்டாம் இரகசிய நிகழ்வுளுக்குப்பின் தான் நிறைவேறும். ஆகையால் மூன்றாம் இரகசியத்தில் அன்னை விபரிக்கும் மறைசாட்சிக் மரணம் திருத்தந்தை ரஷ்யாவை அன்னையின் மாசற்ற இருதயத்துக்கு ஒப்புக்கொடுத்தப் பின் நிகழும்.

அன்னை மரியா பாத்திமாவில் செய்திகள் இரகசியங்கள் அருளி நூற்றாண்டுகள் 2017இல் நிறைவேறுகிறது. "ரஷ்யாவை அன்னையின் மாசற்ற இருதயத்துக்கு ஒப்புக்கொடுக்காத காரணத்தால் மார்க்கிச நாத்திகம் என்ற சிவந்த அரக்கப் பாம்பு உலகமெங்கும் பரவி ஏராளமான ஆன்மாக்களின் அழிவை ஏற்படுத்துகின்ற காலக்கட்டத்தில் நீங்கள் வாழ்ந்து கொண்டு இருக்கிறீர்கள். இந்தச் சிவந்த அரக்கப் பாம்பு திருச்சபை என்ற வானில் ஒளி வீசும் விண்மீன்களின் 1/3 பகுதியை மயக்கி இந்தப் பூமியில் வீழ்த்துவதில் உண்மையாகவே வெற்றி பெறுகிறது" (மரியாவின் குருக்களுக்கான இயக்கம், அருட்திரு. கோபி, மே 13, 1976) என்று அன்னை மரியா அளித்த தீர்க்க தரிசனம் நிறைவேறிக் கொண்டு வருவதைப் பார்க்கிறோம். ஆகஸ்டு, 1980இல் கர்தினால் ஜோசப் ரட்சிங்கர் (திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட்) பாத்திமா மூன்றாம் இரகசியம் கிறிஸ்தவர்களின் வாழ்வுக்கும், விசுவாசத்திற்கும் ஏற்படும் ஆபத்தைக் குறிக்கிறது என்றார். மேலும் "விசுவாசத்திற்கு ஏற்படும் ஆபத்து, இறுதிக் காலங்களின் அறிகுறிகள், மூன்றாம் இரகசியத்தில் அடங்கியுள்ள தீர்க்கதரிசனங்கள் இவை அனைத்தும் பரிசுத்த வேதாகமம் நமக்கு அறிவிப்பவைகளுக்கு தொடர்பு கொண்டவை" என்றார்.

1980ஆம் ஆண்டு ஜெர்மனியில் ஃபுல்டா என்ற இடத்தில் திருத்தந்தை புனித ஜோன்போல் பத்திரிகையாளருக்குப் பேட்டி கொடுத்தபோது பாத்திமா மூன்றாம் இரகசியம் திருச்சபைக்கும் அதன் விளைவாக உலகிற்கும் வரும் தண்டனையைக் குறிக்கிறது என்றும் தண்டனைகளை மாற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது (தண்டனைகள் நிச்சயம்) என்றும் தண்டனைகளின் கடுமையை செபமாலை செபிப்பதால்தான் குறைக்க முடியும் என்றும் வருத்தத்துடன் தெரிவித்தார். மேலும் கடவுள் தாம் திருச்சபையை தூய்மைப்படுத்த முடியும் என்ற பொருள்படி திருச்சபையை இத்தருணத்தில் சீர்திருத்த முடியாது என்றும் சொன்னார். மே 13, 2000 அன்று திருத்தந்தை புனித இரண்டாம் ஜோன் போல் பாத்திமா காட்சிகள் பெற்ற குழந்தைகள் பிரான்சிஸ்கோ, ஜெசிந்தாவுக்கு இறை ஊழியர்கள் என்ற பட்டம் அளித்த போது "சிவந்த அரக்கப் பாம்பின் வாலுக்கும் அஞ்ச வேண்டும். எனெனில் அது 1/3 விண்மீன்களை இழுத்துப்போடுகிறது" (திவெ 12:4) என எச்சரித்தார். இரண்டாம் இரகசிய தொடக்கத்தில் அன்னை வெளிப்படுத்தியபடி மானிடர் மீட்புக்காக இயேசு சிந்திய திரு இரத்தம் வீணாகி ஏராளமான ஆன்மாக்கள் நரகம் செல்வதாலும், நம் மேலுள்ள அன்பினால் நம்மைக் காப்பாற்ற விண்ணக இரகசியங்களை முன்கூட்டியே நம்மைத் தேடி வந்து அன்னை அறிவித்தாலும் முழு பயனில்லாமல் போகும் நிலை தொடர்வதால், உலகெங்கும் அன்னையின் திரு உருவங்கள் அவ்வப்போது செந்நீர் வடித்தும் கண்ணீர் வடித்தும் விண்ணகம் துயருறுவதை அடையாளமாகக் காட்டுகிறது. அதிக எண்ணிக்கையில் செபமாலைகள் செபிக்க வேண்டும். பாவங்களுக்காக பரிகாரம் செய்ய வேண்டும். நினிவே மக்களைப்போல் தண்டனைகளிலிருந்து தப்ப இயலாது எனினும் தண்டனைகளின் கடுமையைக் குறைத்துக் கொள்ள அதிகம் செபமாலைகள், பரிகாரங்கள் செய்வோம்.

அன்னை மரியாவுக்கும் (திருச்சபைக்கும்) அலகைக்கும் போர் நிகழ்வதை பாத்திமாக அன்னையின் காட்சிகள் (1917) உறுதிப்படுத்தப்படுகிறது. போரின் முதற்கட்ட வெற்றியை (2000ஆம் ஆண்டில் திருத்தந்தை புனித இரண்டாம் ஜோன் போல் வெளிப்படுத்திய பாத்திமாக மூன்றாம் இரகசியம் நிறைவேறும் காலத்தை, மறைசாட்சிகளின் நேரத்தை) உலகம் நெருங்கிக் கொண்டிருக்கிது. இந்த வெற்றிக்குப் பின் உலகிற்கு ஒரு சமாதான காலம் அருளப்படும் என் பாத்திமா அன்னை (1917) வாக்களித்திருக்கிறார்.

நன்றி : அன்னை வேளாங்கண்ணி

02ம் பக்கம்

## எடுப்பா தொடக்கமும்...

ஈழத்துப் புனைகதை இலக்கியத்தளத்தில் தடம் -பதித்துவரும் இவரின் இலக்கியப் பயணம் தொடரட்டும். மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். சியான் அவர்கள் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். மன்னார் சைவக் கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் சிவஸ்ரீ மஹா தர்மகுமார குருக்கள் ஆசியுரை வழங்கினார். தழல் இலக்கிய வட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. மன்னார் அமுதன் அவர்கள் வெளியீட்டுரை நிகழ்த்தினார். நாவலாசிரியர் எஸ். ஏ. உதயா அவர்கள் ஆய்வுரை நிகழ்த்தினார். திருகோணமலையைச் சேர்ந்த திரு. நந்தினி சேவியர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பண்டிதர் ம. ந. கடம்பேஸ்வரன் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

01ம் பக்கம்

## வெளிவந்துவிட்டது....

3. திருச்சபை வரலாறு (உலகம், இலங்கை)
4. மறைக்கல்வி
5. திருச்சபையின் சமூகக் கண்டோட்டம்
   போன்றவை ஆகும்.

இப்பாடத்திட்டத்தைக் கொண்டு எமது தேசிய மறைக்கல்வி நிலையத்தினால் தயாரிக்கப்பட்ட பாடநூல் தற்போது வெளிவந்து விட்டது. புத்தகம் ஒன்றின் விலை ரூபா 475 மட்டுமே

**அருட்சகோதரி ரஞ்சி போல்துரை**
**தேசிய மறைக்கல்வி நடுநிலையம்**



# தேவை

## ஒப்பந்ததாரர் தேவை

பேராதனிய பல்கலைக்கழக கத்தோலிக்க ஆலயத்தில் ஆலய திருத்தவேலை, டயில்ஸ் பிடிப்பதற்கு மற்றும் கூரை திருத்தம் சீலிங் அடிப்பதற்கு ஒப்பந்ததார வேலையாளர்கள் தேவை.

**தொடர்புக்கு : அருட்தந்தை குளோப் பெரேரா**

**தொ.பேசி இல : 0812388292, 0717158130, 0773405975**

(N0548)


12ம் பக்கம்

## இல்லறமும் துறவறமும்

அவ்வாறே, ஒருவர் பூப்பெய்திய பிறகு பாலியல் பற்றிய அடிப்படையான, தேவையான, குறைந்த அளவு அறிவாவது இருக்கின்றது என்பது திருச்சபைச் சட்டத்தின் ஊகமாகும். ஏனெனில், பாலுணர்வு என்பது அடிப்படையாக ஆற்றல் மிக்க, மறைக்க முடியாத, ஆழமான உணர்வு. இயற்கையே இந்த உணர்வை மனிதனுக்கு அளித்துள்ளது. இந்தப் பாலுணர்வு, பாலுறவு பற்றிய அறியாமை விதிவிலக்காக ஒரு சிலரிடம் காணப்படலாம். அவ்வாறு பாதிக்கப்பட்ட நபர்கள், தங்களிடத்தில் பாலுறவு பற்றிய அறியாமை இருந்தது என்பதைக் காண்பிக்க வேண்டும். "பூப்பெய்திய பிறகு ஒருவரிடம் பாலுறவு பற்றிய அறிவு உண்டு. அறியாமை இல்லை என்பது தான் திருச்சபைச் சட்டத்தின் JZG (தி.ச 1096) இக்காலத்தில் பாலறிவுகூட இன்றித் திருமணம் செய்பவர்கள் மிகவும் அபூர்வமே. பாலுறவைப் பற்றிய இத்தகைய அறிவினையே "திருமண இயல்பு" என்கின்றோம்.

02ம் பக்கம்

## இலங்கை டிலாசால்...

கல்வி படப்படிப்பை மேற்கொள்வதற்கு முன்பாக தனது துறவற வாழ்வின் பயிற்சி நெறியான நவசந்நியாச பயிற்சியை 3வருடங்கள் கொழும்பு முகத்துவாரத்தில் உள்ள டிலாசால் இல்லத்திலும் கன்வல்ல நவசந்நியாச மடத்திலும் கற்று நிறைவு செய்து 1993ம் ஆண்டு மார்ச் மாதம் 6ம் திகதி தனது துறவற அர்ப்பண வாழ்வின் முதற்வாக்குதத்தங்களை தனது வாழ்க்கையில் ஏற்றுக்கொண்டார்.தனது பட்டப்படிப்பை மேற்கொள்வதற்காக யாழ் பல்கலைக்கழகத்தில் 1993ம் ஆண்டு இணைந்து கொண்டார். நாட்டில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின் காரணமாக ஏற்பட்ட அசாதாரண சூழல் காரணமாக தனது 4 வருட பட்டபடிப்பை 2 வருடங்களில் இடைநிறுத்தும் நிலைக்கு தள்ளப்பட்டார். ஆனாலும் பாக்கிஸ்தான் நாட்டிற்கு சென்று பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் தனது வணிக பட்டபடிப்பை தொடர்ந்து கற்று தேறினார். தனது பட்டப்படிப்பை மேற்கொள்ளும் காலத்தில் லசால் ஆங்கில கல்லுாரியின் நிதிப்பொறுப்பாளராகவும், துறவற வாழ்வின் ஆரம்ப கால பயிற்சிநெறியில் கற்றுவந்த மாணவர்களின் இயக்குநராகவும் பணியாற்றி வந்தார்.

1996ம் ஆண்டு தொடங்கி 2003ஆம் ஆண்டு வரை பாக்கிஸ்தானில் பணியாற்றி 2004ஆம் ஆண்டில் இலங்கையில் உருவாக்கல் பணியை பொறுப்பேற்றார் டிலாசால் அருட்சகோதரர்களாக உருவாக தம்மை அர்ப்பணித்த பல இளம் உள்ளங்களை பக்குவமாகவும் காத்திரமாகவும் பராமரித்து துறவறத்தை தழுவ வழி செய்து பல அருட்சகோதரர்களை உருவாக்கும் பணியை 7 வருடங்களாக வத்தளையில் உள்ள டிலாசால் உருவாக்கப்பணியகத்தில் சிறப்பாக ஆற்றினார். 2011ஆம் ஆண்டில் அமெரிக்காவில் டிலாசால் அருட்சகோதரர்களால் நிர்வகிக்கப்படும் புனித மரியாள் பல்கலைக்கழகத்தில் இறையியல் கற்கை நெறியைக்கற்றுத் தேறினார். 2013ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பிலிப்பைன்ஸ் நாட்டில் ஆசிய நாடுகளை சேர்ந்த டிலாசால் அருட்சகோதரர்களுக்காக நிர்வகிக்கப்படும் நவசந்நியாச மடத்தில் ஆசிரியராக பணியாற்றினார். 2014ஆம் ஆண்டு மே மாதம் இதே நவசந்நியாச மடத்தின் பணிப்பாளராக பொறுப்பேற்று இன்று வரை பணியாற்றி வருகின்ற இவர், கடந்த வருடம் டிசம்பர் மாதம் இலங்கை டிலாசால் சபையின் மாகாண முதல்வராக நியமிக்கப்பட்டார். இவர் இம்மாதம் 17ஆந் திகதி அருட்சகோதரர் அட்றியன் கிறிஸ்ரி தேவநாயகம் குரூஸ் அவர்கள் இலங்கை டிலாசால் சபையின் மாகாண முதல்வராக பொறுப்பேற்க உள்ளார். சவால்களும், லௌகீகக்கொள்கைளும், போட்டியும் பொறாமைகளும் நவீனத்துவமும் தொடர்புசாதன கனணி வளர்ச்சியும் மலிந்து விளங்கும் சமகால உலகில் அருட்சகோதரர் அட்றியன் கிறிஸ்ரி தேவநாயகம் குரூஸ் அவர்கள் கடுகு சிறிதென்றாலும் காரம் பெரிதென்பதற்கேற்ப இவர் தோற்றத்தில் சற்றுப் பெரியவராகக் காணப்பட்டாலும் தன் புத்திசாதுரியத்தால் செயலாக்கமிக்க ஒருவராக செயல்படுவார் என்பது துல்லியமாக தெரிகிறது. இதற்கு எடுத்துக்காட்டு அண்மையில் நடைபெற்ற எமது சபையின் 17வது மாகாண மாநாட்டில் அவர் செயல்பட்ட விதமும், பதிலளித்த பாணியும் தொகுப்பாக ஒவ்வொரு வெளியீடுகளையும் சபையின் சட்டதிட்டங்களையும் நன்கு புரிந்து தெரிவித்தமை எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியது. காத்திரமாகவும், விவேகத்துடனும் தமது சிறிய தகப்பனார் கலாநிதி பற்றிஸ் குரூஸ் அவர்களை விட எல்லோர் மனங்களையும் கவரும் செம்மல் குரலாகவும் தரணியில் விழித்திட இறையருளை எல்லாம் வல்ல தேவன் நிறைவாக இவருக்கு பொழிந்து வழிநடத்த வேண்டி நிற்கின்றோம்.

வேறு எதனுடன் ஒப்பிட முடியாத ஆன்மீகத் யாத்திரை..... குவெஸ்ட் உடன் விஷேட திருயாத்திரைச் செல்ல....

## குடும்பம் மற்றும் அர்ப்பண ஆண்டினை முன்னிட்டு விஷேடமாக வழங்கப்படும்!

தவனை முறையில் பணம் செலுத்துவதற்கான வசதியை தற்போது பெற்றுக்கொள்ளலாம்



(Q15N0995)

## குவெஸ்ட் டெஸ்டினேஷன்ஸ் (தனியார்) நிறுவனம்

வேறு எதனுடனும் ஒப்பிடமுடியாத தரமான ஆன்மீக திருயாத்திரைக்கான உத்தரவாதத்தினைத் தருகிறது

புறப்படுதல் : ஜூன் - 18

*வாருங்கள்... பாருங்கள்... சிறப்புமிக்க திருத்தலங்களைத் தரிசிக்கக் கூடிய அனுபவத்தைப் பெற்றிடுங்கள்...*

### மஜுகோரி மற்றும் தூரின் நகரில் இயேசுவின் திருத்துகில்

வாழ்நாளில் ஒரு முறை மாத்திரம் கிடைக்கக்கூடிய, 10 நாட்களைக் கொண்ட மிக அற்புதமான ஐரோப்பிய திருயாத்திரை, தற்போது வழங்கப்படுகிறது. அத்துடன் 24/25ஆம் திகதிகளில், மஜுகோரியில் தங்கியிருந்து அன்னையின் திருவிழாவில் பங்குபற்றலாம்.

விசேட விலை

ரூபா. ~~310,000/-~~

தற்போது

ரூபா. 285,000/-

08 நாட்களைக் கொண்ட திருப்பயணம்

### புனித பூமி

புனித பூமியில் முக்கிய இடங்களை தரிசிக்கக் கூடிய வாய்ப்பு

ரூபா. 185,000/-

புறப்படுதல் : ஜூன் 16 ஆகஸ் 09

மஜுகோரிக்கான 07நாட்களைக் கொண்ட திருயாத்திரையில் மாத்திரம் பங்குபற்றவும் முடியும்.
ரூபா. 249,000/-

அனைத்து திருப்பயணங்களுக்கும் விமான கட்டணம், அனுபவமுள்ள வழிகாட்டுனரின் உதவி, உணவு, சொகுசு தங்குமிட வசதிகள் உள்ளடங்கப்படுகிறது

### குவெஸ்ட் டெஸ்டினேஷன்ஸ் (தனியார்) நிறுவனம்

இல.119 A, காசல் வீதி, கொழும்பு - 08, / தொ.பே 011-2671785/6, பெக்ஸ் 011 -2671787

Email : tours@qwestedestinations.com / web. www.qwestdestinations.com

உடனடி அழைப்புக்கு 011 - 2687502

IATA AMERICAN EXPRESS



# கொழும்பு கத்தோலிக்க புத்தகசாலையில்

செபப் புத்தகங்கள், திருச்சுருபங்கள், புனிதர்களின் படங்கள், இறுவெட்டுக்கள், (ஒலி, ஒளி இறுவெட்டுக்கள்) இறந்தோர் நினைவு கல், புதை குழி கட்டுமானப் பொருட்கள், மாணவர்களின் பாடசாலை உபகரணங்கள் உட்பட பல்வேறு விதமான பரிசுப் பொருட்கள், நினைவுச் சின்னங்கள் ஆகியவற்றையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.







<u>தொடர்புகொள்ளுங்கள்</u>

கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய
மாவத்தை கொழும்பு - 08.
தொ.பே இல. 0112695984, 0112678106, 0114614927 பெக்ஸ் - 0112692586
E-mail : colombocp@sltnet.lk
www.colombocatholicpress.com



அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை M.F. மகேந்திர D. குணதிலக்க,, இயக்குனர், கொழும்பு கத்தோலிக்க அச்சகம், இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்